(i)
359
4-57

786

# இல்லத்துறவு

சமாதான இல்லத்தளவில் இறைவன் உங்களை அழைக்கிறான்
அல்குர்ஆன் 10:25

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - NOV 1957
MADRAS

ஆசிரியர்

ஹலூரத் மஹ்தூம் பாவா பகுருத்தீன் பாகவி புகாரி

ஆதிவிளக்க நிலையம்
காரைக்குடி
1957

உரிமை பதிவுற்றது

Q7:417
N57



# பதிப்புரை

பேரன்பும் பெருங் கருணையும் உள்ள இறை திருநாமத்தால்

உலகத்தில் பிறந்தமக்கள் இகபர மிரண்டிலும் பெறவேண்டிய மக்கட்பேற்றின் அவசியத்தை எண்ணி காலம், நாடு, இனம், மொழி முதலிய பாகுபாடு கடந்த மெஞ்ஞான பிதாக்கள் உபதேச வாயிலாக ஞான ஒளி காட்டியுள்ளனர். அதை நிலைநிறுத்தவே அவரவர்களின் (இல்ஹாம்) உதிப்பில் நின்று வெளிவந்த அமுத வாக்குகளாம் வேத நீதிச் சூத்திரங்களை மக்களுக்கு வாரி வழங்கியுள்ளார்கள். அவற்றை வேதங்கள் என்றும், ஞான சூத்திரங்கள் என்றும், ஞான நூல்கள் என்றும், ஞானப் பாடல்கள் என்றும் சொல்லுகிறோம். அவைகள் எல்லாம் மக்களுக்கு உரிய மெஞ்ஞான உடைமைகளேயாம்.

இக்காலத்தில் குருமார்களாக—ஞானபிதாக்களாகத் திகழ்பவர்களின் நிலையை அறிய நமக்கு மிகவும் உயர்ந்த உயிர்த்துணைகளாக—சான்று கோலாக உதவ வல்லவை அப்பொன்மொழிகளேதான். அந்நூல்களில் உள்ள ஒரு பா—சூத்திரம்—பதத்தொடர் என்ன கருத்துடன் வெளியிடப்பெற்றிருக்கிறது என்பதை விளக்க இன்று அவர்கள் ஸ்தூல உலகில் இல்லை. அக்கருத்துக்களை விளக்கவும் ஞானபோகம் ஊட்டவும் வல்லதுமான சர்வசமய சமரச வேதாந்த நூல்தான் எங்கள் குலகுரு மகானும் மஷாயிஹு~மான ஸ்ரீலஸ்ரீ ஹலூரத்து மஹ்தூம் பாவா பகுருத்தீன் பாகவி புகாரி அவர்கள் அருளிய இல்லத்துறவு.

இந்த மெஞ்ஞான இல்லத்துறவு நூலின் கண்ணுள்ள ஞான சூத்திரங்களினூடே சஞ்சரிக்கையில் அங்கங்கே அக்கருத்துக்களில் ஒன்றி, சூக்ம வியாபகமாகி, அ[illegible]ளால் ஈர்க்கப்பட்டு பேரானந்தத்தில் "ஜம்ஆகி" ஒன்றிவிடுகிறோம். இந்நூலிலுள்ள அற்புதக் கீர்த்தனையில்,

"கண்டதைக் கண்டவன் கண்டகண் காட்சியால்
விண்டனன் தன்னில் விளங்குவா சாட்சியால்
அண்டிடு மென்குரு அடி நிலைக்காட்சியால்
பண்டுபழகிய பாகவி மாட்சியால் —அற்புதம் கண்டேன்"

111460

என்பதில் அனுபவ பிரத்தியட்ச உண்மை எவ்வளவு தெளிவாகவும் அழுத்தமாகவும் எளிதாகவும் விளக்கப்படுகிறது என்பது இந்நூலை கருத்துடன் ஊன்றி வாசிப்பவர்களுக்குத் தெளிவுபடும். பதத்துக்குப் பதம் பொருள் செறிவு கொண்டிருக்கிறதென்பதும் தெரியவரும்.

இன்னும்,

"முருஷித் திருவருள் அல்லால் தெளிந்தவரில்லை"

"சுத்த சன்மார்க்க இரசூல் மணியை
சூட்சமதியால் அறிந்தாடுமயிலே"

"வாசியென்று மூச்சடக்க வல்லசரம் ஒடுங்குமெனும்
தோசியர்கள் கூற்றைத் தொடராதே என்மகவே"

"தோணுதுபார் ஆயிரத்தெண் மலரின் தோற்றம்
தோகை மயில் விரித்தாடும் வண்மை போல"

"ஆலிமாய் இல்மறிவான் அவனே மூமீன்"

"நெற்றியிலே துலங்கு ஞானப் பாதமதேபாதம்"

"தனையறியா இபுலீசன் தவறிவிட்டபாதம்"

"கடம் என்ற உன் சடம் என்றதில்
காண்பாய் இறை ஒளியை"

"மிதமாக உன்மதம் மீறியே மிளிரும் மதியமுதம்"

"சித்தர் முதல் முத்தர்களும் தேவாதேவர்.........
பத்தியது சிறந்தாசான் பதமேபெற்று பேரின்பவழியடைந்தார்"

"போதம் கண்டு வாழும் மார்க்கம் புகுந்திடாது அற்பராய்"

"உண்மையில் கலிமா ஐந்தும் உண்மை ஷெய்கின்பாதமே"

"அணுவே யணுவாகி அகண்டமாகி அணுவா யடங்கிய
அணுவானது மனுவில் அணு"

"நூராய் ஐனுய் நொக்தாய் அதுமருவி
ஆருய் மூன்ருய் ஐந்ததுவாய்—ஆருருய்

என்ற வாக்கியத் தொடர்களிலிருந்து எப்படி எப்படி எல்லாம், நாம், இதுகாறும் கண்டும் கேட்டுமிராத மெஞ்ஞான உண்மைகளை தெள்ளென வெளியாக்கித்தந்து இருக்கிருர்கள் என்பது வெள்ளிடை மலையாக படித்துணர்பவர்களுக்கு தெளிவு படுகிறது.

கொழுந்தில் வயிரமாக உள்ள நமக்கு இந்நூல் மெஞ்ஞானக் கரு வேற மிக மிக உதவியாக அமைந்திருக்கிறது என்பது மிகையாகாது.

ஆகவே இகம் பரம் இரு சாதனங்களில் எதையுமே ஒதுக்கித் தள்ளாது இல்லறவாழ்க்கையில் இருந்துகொண்டே 'துறவுநெறி' பயில ஏதுவாக விளங்கும் இந்த இல்லத்துறவு நூலை எங்கள் போன்ற பக்த சிஷ்ய மாணவர்கள் மட்டுமின்றி ஏனைய பரம பக்த பக்குவிகளும் வாசித்துப் பொருளுணர்ந்து பயன் பெறும்வாறு இந்நூல் அதிபராம் எங்கள் குலகுரு மகான் அவர்களின் திருவுளச் சம்மதி பெற்று அச்சியற்றி உலகுக் களிக்கின்றோம்.

நிர்வாக சபையார்
ஆதிவிளக்க நிலையம்
காரைக்குடி

★ ★ ★

பெரியோர் கருத்தைப் பெயர்த்தறியலாகா
உரியோர் எவைக்கு முரியோர் பெரியோர்க்குச்
சொல்லும் பொருளும் தொடரா திரண்டாகும்
புல்லும் பொழுதிற் பொருள்.

V

இச்சர்வ சமய சமரஸ வேதாந்த இல்லத்துறவு நூலின் அதிபரும் எங்கள் குலகுரு மகானும் மஷாயிஹுமான ஸ்ரீலஸ்ரீ ஹலுரத்மஹ்தூம் பாவா பகுருத்தீன் பாகவி புகாரி அவர்களின்

## வம்சவழி நாமா

1. ஹலுரத் மஹ்தூம் முஹம்மது இபுனு அபூபக்கர் சித்தீக் (ரலி) ம:.பர்கினா:கூபா

   மிஸிர் நாட்டின் அதிபதியாக உதுமான் (ரலி) நியமித்தார்கள்.

   (வபாத்: மிஸிரில் ஹிஜ்ரி 30 ஆம் ஆண்டு ஷஹிது.)

2. ஹலுரத் மஹ்தூம் ஷம்ஸுத்தீன்
3. ஹலுரத் மஹ்தூம் ஜமாலுத்தீன்
4. ஹலுரத் மஹ்தூம் அலாவுத்தீன்
5. ,, ,, ஜலாலுத்தீன்
6. ,, ,, நூருத்தின்
7. ,, ,, தம்ருத்தீன்ஹமீந்தஆலிம்
8. ,, ,, முன்னு
9. ,, ,, மக்கி மௌலா
10. ,, ,, உதுமான்
11. ,, ,, பாவாபகுருத்தீன்
12. ,, ,, பீருத்தீன்
13. ,, ,, ஷுஐபுதீன்
14. ,, ,, ஸதுருத்தீன்
15. ,, ,, ஷியாவுதீன்
16. ,, ,, ஸைனுத்தீன்
17. ,, ,, நஸ்ருத்தீன்
18. ,, ,, முஈனுத்தீன்
19. ,, ,, தாஜுத்தீன்
20. ,, ,, நயினுலெப்பை ஆலிமுத்தீன்
21. ,, ,, சைய்யிதுமிய்யாலெப்பை
22. ,, ,, சைய்யது முகம்மது
23. ,, ,, பாவா நத்ஹர்
24. ,, ,, சைய்யது அஹமது

25. ஹலுரத் மஹ்தூம் சைய்யது முகம்மது
26. ,, ,, முல்லாநயினுலெப்பை
27. ,, ,, சைய்யது முகம்மது
28. ,, ,, பாவா நத்ஹர் (ஹாஜி)
29. ,, ,, ஷாஹ் ஷைகு முகம்மது
30. ,, ,, முகம்மது ஜமாலுத்தீன்
31. ,, ,, சுல்தானிபுராஹிம்
32. ,, ,, ஷாமுகம்மது ஜமாலுத்தீன்
33. ,, ,, சையதுமுகம்மது ஜமாலுத்தீன் ஆகிய சக்கர்லெப்பை
34. ,, ,, ஹலுரத்து மஹ்தூம் பாவா

பகுருத்தீன் பாகவி புகாரீ அவர்கள்
ராஜகம்பீரத் தமிழகம்

★

VII

# ம கு ட ம்

ஆதிக்குமுன் அனுதியாய் நின்ற அருப ரூபவஸ்து எதுவோ அருபத்தினும் ரூபமாய் நின்று அஹது, உஹது, வாஹிது எனும் முக்கூறு ஒருபொருளாய்த் திகழ்வது எதுவோ 'தாத்தா'' கிய பிர்மகோலமாகவும் ''சிபத்தாகிய" சிருஷ்டி கோலமாகவும் பிரித்தறியப்படாநின்ற "கன்ஸுல்மஹ்பி" என்ற பிர்மாண்ட கோலப் புதயல்பொருள் எதுவோ அகண்டாண்டங்களையும் கெர்ப்பத்துள் சூல்கொண்டு இரசூல் என்றும் திரிசூல் என்றும் திரிசூலி என்றும் பிரணவி என்றும் கலிமா என்றும் காரணப்பெயர் தாங்கிய கருப்பொருள் எதுவோ?

ஆகாயம், நெருப்பு, காற்று, நீர், மண் என்ற ஐம்பூதங்களும், அலிபு, லாம், ஹே, மீம், தால் அதுவே நமசிவயப் பஞ்சாட்சரப் பதங்களாகவும், அதுவே அன்னம், மயில், சேவல், காகம், ஆந்தை என்ற பஞ்ச பக்ஷிகளாகவும், வெள்ளை, மஞ்சள் சிவப்பு பச்சை, கருப்பு, என்ற ஐவண்ண வடிவமாகவும் அமைந்து அணுவினுக் கணுவாய் அகமியப் பொருளாய் ஆதிமனு ஆதத்தின் சூரத்தில் வந்து குடிபுகுந்து நின்ற அருந்தவப்பொருள் எதுவோ?

தனக்குத்தானே பிரதிநிதியாம் "கலிபாவாக" அமைந்த மனுக்குலத் தந்தையராம் "ஆதம்" தன் வடிவத்தில் வெளியாவதற்குத் தகுந்த தற்சொரூபம் காட்டி நின்ற திருவுருப் பொருள் எதுவோ?

ஆதமிய்யாவாகிய மானிடன், தான் விஜயம் செய்யும் பகிரங்கபட்டிணமாம் பூவுலகிற்கு வேண்டும் கைமுதலாகிய ஆத்மநிதி செல்வந்தத்தை அமாநிதமாகப் பெற்றுவந்த ஸ்ரீதனப் பொருள் எதுவோ?

இன்ஸானுகிய மனிதன் தன் பணிமறந்து வஞ்சகம், பொய், சூது, கோள், குபாடம், மனமுறண்டு ஆணவமாகிய பேதமை நிறைந்து மதிமருண்டு நிற்கும் நிலைகண்டு, வேதம் சுமந்து, விரிவுரை தந்து ஸ்ரீதனவேட்கை யளிக்க வந்த வேதாம்பரவர்கட்கு வெற்றிப் பரிவட்ட தீர்க்க தரிசனம் தந்த சின் முத்திரைப் பொருள்எதுவோ?

வேதம் தரும் மதியை விதியென எண்ணுது விதிமதி என விகற்பம் காட்டி வீண் அலேச்சலிற் சிக்குண்டு நிற்க வில்லங்கம் காட்டிவரும் ஷைத்தான்களின் சதிச் செயல்களே நாசம் செய்து கதியளிக்கும் காரண கருணுகரக் கதிப்பொருள் எதுவோ?

கருநிலையாம் திருநிலையம் காட்டி கடாக்ஷித்தருளும் காமில சற்குரு நாயகம் இவர்கள் தான் எனக் கண்ணுல் கண்ட க்ஷணமே காலடி பணிந்து உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்து சரணடையச் சந்தோஷமாய் முன்வரத் தூண்டும் சாயுட்சியப் பொருள் எதுவோ?

தன்னையறிந்து தன்னிலைகண்டு தன்னில் தான் ஒடுங்கி நிற்கும் தபோதனர்களாம் முனிவர்கள் காமில் ஔலியாக்கள் நாயகர்களைத் தவருக நினைத்துத் தன் மதிப்புக் குறும்பு கொண்டு இன்னல் பல புரிந்து இடையூறு செய்ய பொய் புரட்டு திரித்துரைக்கும் பித்தலாட்டம் முதலிய வசைச் சொல் கையாயுதம் கொண்டு நிந்தனைக்குள்ளாக்கிவரும் அபூஷைத்தான்களுக்கு அவர்களின் அறிவில் இணைந்தே அவர்களைத் தண்டித்து அடக்கி ஒடுக்கி ஆண்டுவரும் அதிகாரணப் பொருள் எதுவோ?

சீனம் சென்ருவது சிறப்புடன் தேடியடைதல் திருவருட் கடனும் 'பர்ல்' என்று நம்மீதே கடமை காட்டிச் சுமத்திச் சென்ற வேதாம்ப நான்மறையரசர் நபிகள் பெருமானர்

முகம்மது (சல்) அவர்களின் உஷார்தாக்கீதுபெற்ற உண்மை இல் மென்னும் இன்பொருள் எதுவோ?
வானம் பூமி, சந்திரன், சூரியன் நக்ஷத்திரங்கள் யாவும் இடிந்து திரண்டு புரண்டு எதிர்முகமாய் வரினும் சாதி சமயச் சருக்கல் களில் வழுவிடாது ஈமன் என்னும் உள்ளுறுதி கொண்டு எக்கீன்என்னும் கால் நிலே யூன்றிநிற்கச் செய்யும் அத்வைதப் பொருள் எதுவோ?

காலனுகிய மலக்கல்மவுத்து கடிந்துவரும் கர்ணகடூர எல்லேயை மறந்து அற்ப உலக ஆசையில் மயங்கிச் சிக் குண்டு அதுவே கதி யென்றிருப்பாருக்குக் காலங்கண்டு காலனுகவே வரும் காவற் பொருள் எதுவோ?

யாஅய்யுஹல்லதீன ஆமனுத்த குல்லாஹ வபுத்தஹு இலேஹில் வஸீலத்த வஜாஹிது பீஸபீலில்லாஹி ல அல்லக் கும் துபுலிஹூன் என்ற வேத வியாசத்தின் கருத்தின்படி ஈடுபாடுற்றவர்களுக்கு ஜலால், ஜமால் என்ற இருஜோதி பிம்ப மானது ஆஷுக் மஃஷூக்காக மருவி ஏக இறைவனின் லிக்காவாகிய தீதாரு தெரிசனே கொடுத்து மூமீன் முஸ்லீம் களாகிய நல்லோர் பதத்தில் சேர்த்து நல்லருள் திருப்பாலிப் புத்தரும் சீதேவிப் பொருள்எதுவோ அதுவே நான் வணங்கும் பொருள்; வாழத்தும் பொருள்; வணங்க வழிகாட்டும் பொருள் அதன் உதவி கொண்டே இதனே ஆரம்பம் செய்கிறேன்.

—அதிபர்

★

# நூல் காப்பு

பெறுவார் பெரும் பொருள் பேரின்ப நிலையை
தருவார் வரம் பல தவத்துறை நூலில்
திருவாம் இல்லத் துறவது ஈந்த
குரு வார் கழலடி குறித்தனம் போற்றி
போற்றி இறை எழில் புனிதா போற்றி
சாற்றுமறை பல சமைத்தாய் போற்றி
ஏற்றி இறைஞ்சினேன் இயல்தரப்போற்றி
கூற்று இடர்தவிர் ஹூதாவருள் போற்றி
அருபாரூப அரும்பொருள் நிலையை
உருவார் உயிரின் உள்ளிடக்காட்டி
திருவாம் இறையைத் தெரிசனையாக்க
கருவாம் இல்லத் துறவது நூலே
நூலிடத் தமைந்த நுண்பொருள் மிகவே
காலும் தலையும் கல்பது வடிவம்
தாள் பொன்னடியின் தாட்பாள் திறக்க
ஆளு முறைமை அலிபுலாமீமே
அலிபுலா மீம்தரு அகமியக்குறிப்பை
கலிமா பிரணவ காட்சி நிலையால்
வலிமார் ரிஷிகள் மகத்தாம் செம்மல்
தெளிந்த நல் வணக்கம் தெளிதரத் தருமே
தெளிந்த மதியினோர் தெள்ளெனக் காண்பார்
தெளியார் உள்ளம் சிந்தை நெகிழ்வுரு
துள்ளம் உருகி ஊன்றிப் பயில்வதால்
கள்ளம் நீங்கியே கல்பது திறக்கும்
கல்பது திறக்காக் கயமையர் பலரின்
தில்லுமுல்லெனும் திரித்துரை வழியும்
உள்ளமை மறைக்கும் உலுத்தர்கள் சிலரின்
கள்ளர்கள் வேடக் கருத்தற விளக்கும்
கருத்துகள் வேதக் கருத்துகள் பொலிவுற
குறித்தபல் சமயக் கொள்கைகள் ஒன்றிட
திருத்தமும் பொருத்தமும் சிறந்தபல் உவமைகள்
அறந்தரும் வழியில் ஆங்காங்கு நிற்கும்
அறம்பொருள் இன்பம் அமைவதே இல்லம்
துறவது சூட்சச் சுடர் திறப்பாகும்
பரன்லிக்க வடைந்த பரவச நிலையோர்
துறவது இல்லத்துறவறம் இதுவே!

# பொருள் துதி.

### காப்பு

தஞ்சமா மென்குருவே தானவனோ டானவரே
வஞ்சம கற்றுமோர் வல்லவரே—விஞ்சையென்ற
மெஞ்ஞானந் தந்துயர்ந்த மெய்ப்பொருளோ டாக்கியெனை
அஞ்ஞானத் தாக்கா தருள்.

### நூல்

மன்னவனும் இறையருளை
மகிழ்பெறவே மதித்தறியாச்
சின்னவனும் பெரும்பிழையேன்
சீருறவென் னோர்கலிமாச்
சொன்னவராம் மெய்க்குருவைத்
தொழுதிறைஞ்சி யதன்மகிமை
வின்னமிலா தோதவருள்
விற்புருவ மெய்ப்பொருளே! (1)

மெய்ப்பொருளாம் சடாச்சரமே
மேகவண்ண னுயிர்நிலையே
கைப்பகற்றும் மெய்ப்பாலே
கல்புக்கண்சி ரோன்மணியே
ஐயமிலா அறுபுரிநூல்
ஐம்பத்தொன்றும் ஏறுபடி
வையமெலாம் ஈன்றவாலை
மஹ்மூதா பதிப்பொருளே! (2)

மஹ்மூதா பதிநிலையே
மக்கமதி னுவரசே
மூமீன்கள் தாயகமே
முதுகுக்கண்ல லாடவழி
அகம்புறமும் குளிர்தருவாம்
ஆயிரத்தெட் டிதற்கமலம்
மிஹ்ராபாம் சுஜூதுநிலை
முண்டகமா மெய்ப்பொருளே! (3)

முண்டகசி ரோரத்னம்
முன்னுள்நா மிருந்தரூபம்

அண்டர்கோன் நமக்களித்த
அமிர்தநிலைக் கலசமென்பார்

பிண்டவுரு பெருவிரலார்
பெருமுனிவர் பொதிகைமலை

சண்டாளர் கண்காணுச்
சாம்பவியாம் தனிப்பொருளே! (4)

சாம்பவியாம் முத்தரையே
சாம்பவசின் முத்திரையே

ஓம்புவன சுந்தரியே
ஓங்கார பீடம்நீயே

நாம்நானென் றற்றநிலை
நான்நாமென் றுற்றபொருள்

ஆம்ஆமீன் அருள்பதியே!
ஆருயிராம் அரும்பொருளே! (5)

ஆருயிரின் சூக்மதேகம்
ஆதிவஸ்து அஹதுநிலை

நூருயிரின் ரூஹுல்குத்தூஸ்
நூல்பலவின் உயிர்நாடி

தாரகம்நேர் மந்திரமே
சாயுட்சிய சின்மயமே

பூரணத்தின் பொக்கிஷமே
புனற்றுறையே புதைபொருளே! (6)

புனற்றுறையின் கணபதியே
பூமகளார் மனோன்மணியே

மனக்கண்ணென் றிருதயமே
மதிசுரந்தார் திரளமுதே

கனகப்பொன் னம்பலமே
காராளன் பசுபதியே

தினமிரவு பகலற்ற
திருப்பதியாம் மெய்ப்பொருளே! (7)

திருப்பதியாம் பஞ்சவர்ணன்
திரிகோண முச்சுடராம்

அறுகோணச் சக்கரத்தின்
ஆலிலைமேற் சயனமென்பார்

சிறுமியென்றும் வயதுபத்து
திருமகளார் பாத்தின்முத்து

குருபெருமான் புள்ளிகொள்ளும்
குணங்குடியே மெய்ப்பொருளே! (8)

குணங்குடியாம் அறந்தாங்கி
கோளனிப்லீஸ் வணங்காவிடம்

ஜனனவிடம் மரணவிடம்
தான்சாகா திருக்குமிடம்

வணங்குமிடம் வணங்காவிடம்
வணங்கவழி துலங்குமிடம்

எனக்குள்நின்றே குருபெருமான்
இயங்கவருள் மெய்ப்பொருளே! (9)

இயங்கவந்தேன் இணங்கவந்தேன்
இருநிலத்தும் சிறக்கவந்தேன்

தொடர்ந்துகொண்டேன் துணிவுகொண்டேன்
துயர்முழுதும் தீரவென்றேன்

பயம்தவிர்த்தாய் குருவருளே
பதத்துகளைச் சிரமணிந்தேன்

ஜெயஜெயமே ஜெயமளிப்பாய்
ஜெகம்புரக்கும் ஜெயப்பொருளே! (10)

—★—

# திருவுரு காதல்

ஆதிதிருவுன் னுருவைக் காண ஆவலாகுதே
அன்பின்வதனங் காணுநாளில் ஆவிதயங்குதே

வேதநாத கீதமோதி
விண்ணோர்சேரவே
வெற்றிகண்ட விமலநாத
ரிசைகள்பாடவே
ஜோதிமறையும் ஆகமங்கள்
துதிகள்கூறவே
தொண்டரடிகள் முடியிலேறத்
தொடர்ந்துவருகவே — ஆதி (1)

எல்லாம்வல்ல சித்சொரூப
ரூபமல்லவோ
இகமும்பரமும் அகமும்புறமும்
இயங்குதல்லவோ
சொல்லால்எழுத்தால் கணிக்கொணுத
சூட்சமல்லவோ
தொடர்ந்தபக்த ரடிகள்பற்றும்
சுடரதல்லவோ — ஆதி (2)

தனக்குத்தானே தனக்குநிகராய்த்
தனித்தவல்லவா
தனக்குத்தானே எனக்குள்நின்ற
சக்தியல்லவா
எனக்குமுனக்கு ளிணக்கம்தந்த
ஏகனல்லவா
என்மேற்கருணை பெருகவைத்தாள்
இறைவனல்லவா — ஆதி (3)

கருவினுருவில்த்தி ருவினுருவாய்க்
கலந்துவாழ்பவா

கன்மவினைகள் கதறிநீறக்
கருணைசூழ்பவா

கருணைவழியும் கடைக்கண்விழியைக்
காட்டியாள்பவா

காதல்மீறி ஆஷிக்காணேன்
காட்சியருள்பவா — ஆதி (4)

அன்ப!அன்பர் அன்பினுறவே
அன்பில்அமைபவா

அன்போரணுவும் அறியாஎன்னை
ஆளும்சுமைபவா

தென்புதிறனும் உன்தவக்கல்
திறமையீபவா

தெளிந்தமதியோர்க் கமைவுதந்த
துமதுநிமைபவா — ஆதி (5)

எங்கும் உலகோர் இருளில்ச்சிக்கி
இசைந்துவாழ்கிருர்

ஏகன்இறைவன் உறவைவிட்டு
எளிதில்ஆழ்கிருர்

கங்குல்பகலும் தங்கள்விதியால்
கடுகமாள்கிருர்

கனகநிதியென் புனித!வந்தாள்
கயவர்மூழ்கிருர் — ஆதி (6)

துப்புத்துலக்கப் பலபேர்பேச்சைத்
தொடர்ந்துவாடினேன்

துப்புத்தெரியா மாந்தர்பின்னே
துறவுநாடினேன்

இப்புவியில் ஏதுஎன்ருர்
எங்கும்தேடினேன்

இன்பமலருன் அடியைப்பற்ற
எளிதில்க்கூடினேன் — ஆதி (7)

அப்பா!அம்மா! அரசே!ஐயா!
ஆவல்மீறுதே

அம்மானத்தான் மாமாமாமி
ஆவிசோருதே

இப்பார்ஒப்பார் உண்டோஇல்லை
இதயம்சோருதே

எங்களிறைலிக் காவைக்கண்டால்
யாவும்தேறுதே — ஆதி (8)

பரமபதமாம் அருஷிலேற
பக்தியறிகிலேன்

பக்தர்சென்ற வழியைக்கூட
பாதையுணர்கிலேன்

சிரமம்தவிர்க்கும் துணைவர்தேறச்
சேடிதெரிகிலேன்

சித்தம்வைத்தி ரட்சித்தாள்வாய்
சேவைமலர்கிலேன் — ஆதி (9)

வானவீதி ஏழுந்தாண்டி
வருவாய்நாயகா

வானமலர்கள் ஏழும்கொண்டு
தருவாய் தாயகா

சேனைவானோர் திகழவந்து
சேருபாயகா

சென்னிமலையில் மலரடிதந்
தாள்சகாயகா — ஆதி (10)

—★—

# அற்புதக் கீர்த்தனை

பல்லவி

அற்புதம் கண்டேன் அண்ண லிரசூல்
பொற்பதம் கொண்டேன்—நான்
அற்புதம் கண்டேன்

அநுபல்லவி

அற்புத மாகிய பொற்பாத மலரிணை
சற்குரு நாதனின் சரணடி சார்ந்தபின்
—அற்புதம்

சரணங்கள்

நற்பய னருளிட
ரஹ்மானும் ஆதத்தைப்
பொற்பதம் பணிவீரென்
றேவிட விண்ணோரை
துர்ச்ச னஜாஸீல்சு
ஜூதிட மறுத்ததை
அற்புத மானஅ
லிபுலா மீமென்றே — அற்புதம் (1)

அலீப்லா மீமென்று
அருளினன் குர்ஆனில்
தெளிவிலா உலமாக்கள்
தெரிந்தவ னவனென்றார்
நலிவிலா இறையவன்
நமக்கெனக் கூவினன்
கலிதீர வகைதேடிக்
காமிலின் கதம்பற்ற — அற்புதம் (2)

அலிபதாய் நீண்டது
லாமாய் வளைந்தது

அலிபது சுழித்ததால்
மீம்தலை யானது

அலிபின் நிழல்நீண்டு
ஏழ்புள்ளி யானது

அலிபுலா மீமென்ற
இருதய ஜோதியில் — அற்புதம் (3)

மேல்மாடம் நோக்கியே
நீண்டது அலிபதாம்

கீழ்வீடு கண்டுகீழ்
இறங்கிடக் காலதாம்

காலெட்டு நாலுமே
கலைகளில் ரவியதாம்

ஏழெட்டோர் பாதமிங்
கெழில்மதி யாகிய — அற்புதம் (4)

மேலேழ் புள்ளியே
விண்ணேழ் வானமாய்

கீழேழ் புள்ளியே
மண்ணேழ் பூமியாய்

கால்மேல் ஆனதே
கத்தன் அமானிதம்

வால்மீ மானது
நபுசேழு மாகிய — அற்புதம் (5)

நபுஸேழில் அம்மாரா
இச்சித்த லைந்திட

இபுலீஸின் வஞ்சகக்
கெடுதலா லல்வாமா

குபுரினில்ச் சென்றிட
முல்ஹிமா தூண்டிட

அபவாதம் நீக்கியே
அருள்முத்ம இன்னுவாய்— அற்புதம் (6)

நேசித்து கந்திட
ரஹ்மானை ராவியா

கோஷித்த தனுடன்
மருவிட மருவியா

ஆஷித்தி ரண்டறக்
கலந்தது காமிலா

வாசிக்க லைபணி
ரெண்டெனும் ஷம்ஸதாய் — அற்புதம் (7)

மீம்தலை சுழித்திட
அக்கினிக் குண்டமாம்

தாம்வன்னி கருநெல்லி
தலைதனிற் றுலங்கிடும்

ஓம்என்ற குண்டலி
நடுநிலை நாயகம்

ஆம்இது வாம்என்று
அறைந்திட்ட காமிலால் — அற்புதம் (8)

ஏழ்நிலைக் கோபுரம்
எட்டியே பார்த்திட

ஏழ்நிலைக் கம்பும்
எளிதில்த் துலங்கிட

ஏழ்மாட மேறிய
மானிதம் பெற்றிட

ஏழ்புள்ளி யாகியே
என்னுள் நிலைத்திட — அற்புதம் (9)

ஒருபுள்ளி ஹயாத்தாகி
ஓர்புள்ளி இல்மாக

ஒருபுள்ளி இராதத்து
ஓர்புள்ளி குதரத்து

ஒருபுள்ளி சம்ஆகும்
ஓர்புள்ளி பஸரென்று

ஒருபுள்ளி கலாமாக
நிலவு பதினாருய் — அற்புதம் (10)

புள்ளியே அணுவாயும்
அணுவே கணுவாகக்

கள்ளமி லாஅக்
கணுமுற்றிக் கரும்பாக

சொல்லாத சொல்லும்
எழுதா தெழுத்தாக

அல்லல் அகற்றிநல்
அருள்தரும் பாதத்தில் — அற்புதம் (11)

கண்டதைக் கண்டவன்
கண்டகண் காட்சியால்

விண்டனன் தன்னில்
விளங்குவர் சாட்சியால்

அண்டிடு மென்குரு
அடிநிழல் ஆட்சியால்

பண்டு பழகிய
பாகவி மாட்சியால் — அற்புதம் (12)

—★—

# ஆனந்தக் களிப்பு

தீன் தீன் தீன்குருநாதன்—செல்வச்
சீர்பாதம் கண்டு தெளிந்திடு நாளும்
தீன் தீன் தீன்குருநாதன்

எல்லோரும் போற்றுவோம்
வாரீர் எங்கள்
ஏக பராபர
நாதனைத் தேடி
சல்லல் லாஹ் குருவெனச்
சாற்றும் ஷெய்கின்
சரணடி மலரிணை
சார்ந்தவர் கோடி — தீன்தீன் (1)

சிறப்புள்ள தீன்கலி
மாவை நாதன்
திறப்பட என்னுள்
திறந்தவர் காட்ட
சிறந்து நற்சீர்
பாதம் கண்டேன் நாளும்
செல்வ நிலைகளைச்
சீர்பெறத் தந்தார் — தீன்தீன் (2)

வருண பேதங்களை
மாற்றி வைக்கும்
மாசற்ற ஞானத்தை
மோனத்து ளாக்கி
தருண சகாயத்தை
யூட்டி வைத்த
சற்குரு நாதனின்
சரணடி போற்றி — தீன்தீன் (3)

எக்குலப் பிறப்பினு
மில்லை ஞானம்

எவருயர் படிப்பினு
லடைவது மில்லை

திக்குளோ ரடைவது
மில்லை முர்ஷித்

திருவரு ளல்லாற்
தெளிந்தவரில்லை — தீன்தீன் (4)

கானக மலைந்தாலும்
காணீர் வீணில்

காய்கனி சருகினைக்
கற்பமென் றுண்பீர்

ஊனமாம் காயமீ
தென்பீர் தம்மில்

உருவிலா உருவினை
யுள்ளத் திலறியீர் — தீன்தீன் (5)

அபின்கஞ்சா அருந்துவோன்
ஞானி ஐயம்

அரஹரா தாயிரா
அவன்பெரு ஞானி

அபிநயக் குறிசொல்வோன்
ஞானி என்ற

அஞ்ஞான இருளினை
அகற்றிய காமில் — தீன்தீன் (6)

காயாசம் அணிந்தவர்
ஞானி என்று

கலிகாலக் கொடுமையால்
கருது மஞ்ஞானி

ஆயாசம் நீக்கியே
கேள்நீ நாதன்

அணிவிக்கும் காஷாயம்
அகத்தினிற் பார்நீ — தீன்தீன் (7)

தாடிச டைமுடி
வளர்த்து கையில்

தஸ்பீஹு ஜுப்பா
தலைபாகை தரித்து

பாடிப் பழங்கதை
விரித்து பையில்

பணஞ்சேர் பசாசங்கள்
பலரையும் விடுத்து —தீன்தீன் (8)

சுனன் ஹிம்மத் தென்றநம்
நாடு தன்னில்

சூட்சமா யிலங்கவே
அறுகோண வீடு

உனக்குள் நீ நின்றதைத்
தேடு என்ற

உண்மையை உணர்த்திய
குருவடி போற்றி —தீன்தீன் (9)

கன்ஸுல் மஃறிபியா
என்ற ஹக்கன்

கருவுக்கு ளுருவாகக்
கலந்தாடு பொருளை

இன்சொலால் விளக்கினுர்
நாதன் அடியேன்

இன்புற்றேன் அதைக்கண்டு
இறையடி போற்றி —தீன்தீன் (10)

பஞ்சாட் சரமெனச்
சொல்லி வாயால்

பசப்பியே மக்களைப்
படுகுழி தள்ளி

அஞ்சக்க ரமெனக்
கூறும் புலையர்

அலறிட உயிருள
அட்சரம் தந்தார் —தீன்தீன் (11)

பச்சை வெண்மஞ்சள்
செந்நீலம் பார்க்கப்

பகட்டுதே பஞ்சாட்ச
ரமதன் ஜாலம்

முச்சுடரா ராமதைக்
கேளும் தன்னில்

முன்னவ னெளிவதா
யமைந்திட்ட கோலம் — தீன்தீன் (12)

அறுகோணச் சக்கர
மென்பார் அதில்

ஆருயிர் அட்சரம்
ஐங்கோண மிதுபோல்

திரிகோணம் சட்கோணம்
யாவும் இறையை

தெரிசிக்கும் உயிர்நிலைச்
சித்திரம் தந்தார் —தீன்தீன் (13)

வாசி வசமாக
வாசி மன

வாசி யாஹூவென்ற
வல்லபம் வாசி

வாசி வாசிக்க
நீநேசி என்று

வாசி வசமாகும்
வகைவழி தந்தார் — தீன்தீன் (14)

கும்பித்தல் ரேசித்தல்
மேலும் மனம்

தம்பித்தல் பூரித்தல்
யாஹூவை மாற்றிச்

சிந்தித்தல் வந்தித்தல்
காணீர் என்று

சிந்தை துலங்கவே
சீர்வழி தந்தார் —தீன்தீன் (15)

ஆரண நேர்மை
இலங்க அதன்

ஆகம மேகலை
யேகலை ஓங்க

பூர்வ சமாதி
துலங்க தன்னில்

பூரண மாகும்
பொற்பதி தந்தார் — தீன்தீன் (16)

—✶—

# மெஞ்ஞானப் பெண்

காப்பு

தன்னையும் தன் தலைவன் ஞானப்
பெண்ணையுமே பேசிவர—உண்ணியவர்
பேறனைத்தும் உயர் சீரனைத்தும் பெறக்
காரணக் குருவே காப்பு

நூல்

தன்னை யறிந்தவன் எண்ணியே பேசுருன்
சற்குரு பாதத்துணை தேடி
நின்னயமாகவே அன்னவர் பாதத்தை
நேரில் கூறடி ஞானப் பெண்ணே! (1)

நேரில் கூறுவோம் தோழியரே —நீங்கள்
நினைவுடன்தினம் போற்றி செய்வீர்
பாரில் சிறந்த மதினு நகர்தீன்
மார்க்க பூபதி ஞானப் பெண்ணே! (2)

மார்க்க மென்றதைக் கேட்டதினுல் —மன
மாற்றங்களெல்லாம் மறந்துவிட்டு
தீர்க்கமாகிய தீன்கலி மாவதைத்
தெளிந்து கூறடி ஞானப் பெண்ணே! (3)

தெளிந்து ரைப்பவர் காமீலாகும் —அதைத்
தேடிக்கொள்பவர் மூமீனும்
ஒளி சிறந்தது மெய்யாகும் —அதன்
உண்மை, கூறடி ஞானப் பெண்ணே! (4)

உண்மை கூறிடில் ஐந்தெழுத்தாம் —அதை
ஊமை என்றவன் ஏதுரைப்பான்
வெண்மை கருமை சிவப்பு மஞ்சள் பச்சை
விபரம் கேளடி ஞானப் பெண்ணே! (5)

விபரம் கூறுவோம் மண்ணுடனே தண்ணீர்
விரிவான காற்றுத் தீ ஆகாயம்
சுபமுடன் கூடியே மண்டல மூன்றுகத்
தோன்றுது கண்முன்னே ஞானப் பெண்ணே! (6)

தோன்று மண்டல வாசியிலே —உயிர்
துணிந்து நிற்குது முச்சுடராய்
சான்று சொன்னவர் பாதத்தைப் பற்றி —நீ
சமிக்ஞை தெரியடி ஞானப் பெண்ணே! (7)

தெரிந்துரைத்த கலிமாவிலே தன்னை
தெண்டிக்கு மூன்றெழுத் தென்னவென்றால்
பரிந்துரைக்கிறேன் ஹா ஹூ ஹீ யதைப்
பக்குவம் பண்ணடி ஞானப் பெண்ணே! (8)

பக்குவமாய் நின்று பார்க்கயிலே —அதில்
பஞ்சவர்ணனைக் கண்ணுடி
திக்கது எட்டுப் பதினறு கோணமும்
தீன் என்றுரைக்குது ஞானப் பெண்ணே! (9)

தீனெனும் குண்டலி வட்டத்துளே நின்று
திருவை நோக்குவர் தீனவர்கள்
மானெனும் இருகண் மயக்கத்தாலே —அங்கு
மருண்டு திரிகிறுர் ஞானப் பெண்ணே! (10)

மருண்டு விரண்டுமே ஓடிடுவார் சில
மன்பதையாம் ஞான சூனியர்கள்
திரண்டு உருண்டுமே சேரும் அழுக்கவர்
திரும்பிப் பாராதே ஞானப் பெண்ணே! (11)

திரும்பிப் பாராமல் திக்கதை நோக்கிடு
திருப்பரம் குன்ற மலை யோரம்
குரும்பை விட்டுக் குணங்குடி நாதனின்
குகையைப் பாரடி ஞானப் பெண்ணே! (12)

குகையைக் கண்டுநீ குன்றதின் மத்தியில்
கூசாமல் ஏறிடு வாசியதால்
சிகையைக் கூடிடத் தினகரன் மதி
சிறப்பைக் காணலாம் ஞானப் பெண்ணே! (13)

சிறப்பைக் கண்டதும் பாதத்தைப் பற்றி நீ
சிவபாத வல்லி மலை யேறத்
திறப்பட வென்றே ஆதத்தின் பாதத்தைத்
தேடிக் காணடி ஞானப் பெண்ணே! (14)

தேடிக் கண்டு நீ தென்திசை நோக்கியே
திரும்பிப்பார் தகுத்தர் ஜெயிலானி
ஓடிச் சென்றுமே உல்லாச மாகவே
உபயங் கேளடி ஞானப் பெண்ணே (15)

உபயங் கூறிடில் மூன்றெழுத்தா மங்கே
உபநிடதனென்றே பேராச்சு
அபயங் கூறியே ஆதரிப்பாரையன்
அடியைப் பற்றடி ஞானப் பெண்ணே! (16)

அடியைப் பற்றி நீ அனுதினம் தொழ
அலறி யோடுவான் இபுலீசன்
படியினிலிவன் பகையை வென்றதும்
பகரக் கேளடி ஞானப் பெண்ணே! (17)

பகரும் சூரியன் சந்திரனு மங்கே
பதுங்கி யோடுவான் உன்னைக்கண்டு
சகல சித்தர்கள் முத்தர்கள் கூடியே
சங்கை செய்வார்கள் ஞானப் பெண்ணே! (18)

சங்கை பெற்றதும் குகையின் வாயலில்
தனியாய் நின்று தவ மியற்றி
எங்குரு நாதன் முஹியித்தீன் நாமத்தை
இறைந்து கூவடி ஞானப் பெண்ணே (19)

கூவியழைத்திட வேணுமென்ருல் —மனம்
கூசாமல் நோற்றிடு நோம்பதனை
நாவிலூறும் காமதேனுவதின் குணம்
நவில நாவுண்டோ ஞானப் பெண்ணே! (20)

நவின்று பேசாத தவங்கள் செய்திடு
நழுகிடா தொரு கால்தூக்கி
பவிசு பாக்கிய மனைவி மக்களின்
பலனைக் கோராதே ஞானப் பெண்ணே! (21)

பலனைக் கோரிடில் பாவியாவான் —அதைப்
பயந்து கொண்டவன் ஞானி யாவான்
சலனங் கொண்டுமே நின்றிடாமல் —வலம்
ஜல்தி சுற்றடி ஞானப் பெண்ணே! (22)

சுற்றிச் சுற்றியே ஆடிவர —இர
சூல் முகம்மதைப் போற்றிசெய
எற்றிசையுமிலா மண்டல மாணிக்கம்
ஏகப் பெருவெளி ஞானப் பெண்ணே! (23)

ஏகப் பெருவெளி சென்றவர்கள் —மனம்
இகத்தில் சஞ்சாரம் செய்வ தெங்கே
ஆகம வேதக் கலைக்கதிபன் என்ற
அண்ணல் இவனடி ஞானப் பெண்ணே! (24)

அண்ணல் எனும் பெயர்நாமம் கொண்டு நல்ல
அன்பியா குத்பென வீறு கொண்டு
சின்னமதைக் கையில் வாங்கிக்கொண்டு—என்றும்
சிரஞ்சீவி யானுர்கள் ஞானப் பெண்ணே (25)

சிரஞ்சீவி என்றதும் பல்லைக்காட்டி வாயைத்
திறந்து விழித்திடில் யாது பலன்
அருள்தரும் ஞானக் குருவடி தென்றலில்
அன்பைப் பூட்டடி ஞானப் பெண்ணே! (26)

அன்பைப் பூட்டி மெய் ஞானிகளும் —வலி
அன்பியா குத்துபுகள் ஆரிபானுர்
நம்பி யடிபணிந் தெங்கள் முஹியித்தீன்
நாளும் குருவானுர் ஞானப் பெண்ணே! (27)

நாளும் குரு அப்துல்காதிர் ஆண்டவர்
நல்ல குருவடி கண்டடைந்தார்
ஆலி முஹம்மது சாலிஹு நாதரென்
ஐயன் தணிகையர் ஞானப் பெண்ணே! (28)

தணிகை வள்ளலும் மச்சமுனி கோத்ரம்
தகைதரும் கைலாய பரம்பரையாம்
முனிவர் சித்தர்கள் யாவரும் குருபாதம்
முனைந்து கண்டனர் ஞானப் பெண்ணே! (29)

முனைந்து பார்க்காதே மூதேவி இபுலீசன்
முன்னவன் வலிகள் இல்லை யென்று
நினைந்து பார்ப்பவர் தங்களையே வந்து
நித்தம் கலைக்கிருன் ஞானப் பெண்ணே! (30)

நித்தம் வயிறு பிழைக்கும் சோம்பேறி
நீசன் போலவே அலைந்தலைந்து
பித்தம் தலைக்கேறிப் பிணற்றித் திரிகிருன்
பேயனவனடி ஞானப் பெண்ணே! (31)

பேயா யலைந்துமே ஊரூராய்ச் சென்று
பிழைக்கும் பசிவந்து பிதற்றுகிருன்
வாயால் மொழிவதை இன்னதென்றும் வழி
வகை தெரிந்திடான் ஞானப் பெண்ணே! (32)

வகை தெரிந்திடும் மக்களுக் கென்றே
மதியா யுரைப்பதை மகிழ்வுடனே
தகைபெறும் ஞானகுரு வள்ளல் மக்கள்
சார்பில்ச் சொல்லுகிறேன் ஞானப் பெண்ணே! (33)

சார்புடைய இறை சகல காலத்தும்
தகுதி நிறை தயை குறைவதில்லை
ஏற்கனவே மக்கள் இன்பம் அடைந்ததை
இன்று மறுப்பதேன் ஞானப் பெண்ணே! (34)

இன்று உலகிடை உள்ள மக்களை
இனிது பயனுற இசைந்திடாமல்
பொன்றும் படி செயப் பொருந்தும் காரணம்
புவியில் ஏதுண்டு ஞானப் பெண்ணே! (35)

புவியின் மக்களைக் காலங் காட்டியே
புல்லர் நல்லார் என்றேக நாயன்
நவின்று கூறிடில் பாகுபாடான
ஞாயம் ஈதல்லவோ? ஞானப் பெண்ணே! (36)

ஞாயம் குன்றுத எங் களிறை யவன்
பஸ் அலு அஹ்ல திக்குரா வென்று
காயிமாகவே காட்டும் மறையதில்
கண்டு கொள்ளடி ஞானப் பெண்ணே! (37)

கண்டு அறியாத மாந்தர்களும் —'லிக்கா'
கண்டவர் தம்மிடம் கேளுமென்று
விண்டு உரைத்ததும் வேதமொழியடி
வீணாய்த் தள்ளாதே ஞானப் பெண்ணே! (38)

வீணான வேடங்கள் பூண்டு வந்து —மெத்த
வேதம் படித்தவன் போல நின்று
தோணாத மக்களைக் கெடுப்பனென்று —இப்லீஸ்
தோற்றம் கூறுவர் ஞானப் பெண்ணே! (39)

தோற்றத்தைக் கண்டு மயங்கிடாமல் —இறை
ஜோதி லிக்காவதைக் கண்டவர்கள்
ஏற்படி மக்கள் இடையிலுண்டு —வீணில்
ஏங்கி யலையாதே ஞானப் பெண்ணே! (40)

ஏங்கி யலைந்து திரிந்தே அலுத்தவன்
இயலாச் சோம்பேறி போலவந்து
பாங்குடன் தேடுதல் பாரவான் தங்களை
பாவ மீதென்கிருன் ஞானப் பெண்ணே! (41)

பாவம் பழிகளை மூட்டை கட்டி —யதைப்
பாவியவன் தலை யேற்றி விட்டுச்
சீவன் விடாமுனம் ஆதியிறைவனைத்
தேடிக் காணடி ஞானப் பெண்ணே! (42)

தேடிக் கல்பிடை கண்ட மூமீன்களும்
தெரிசித்த கலிமாவின் யாததனுல்
நாடியிறை எழில் ஜோதி ஒளியினில்
நாளும் ரசிக்கிருர் ஞானப் பெண்ணே! (43)

நாளும் ரசித்திட நாதமும் கீதமும்
நல்ல உஜூ தங்கே தோன்றுதடி
தோளில்ப் படித்த ஏட்டைச் சுமந்ததால்
தோனுமோ? தோணுது ஞானப் பெண்ணே! (44)

தோணுத வீணர்கள் தொப்பை நிறைந்திடச்
சொல்லும் கதைகளைக் கேட்டுக்கொண்டு
தானுகும் மெய் நெறி தன்னிற் சார்ந்திடச்
சற்றும் தயங்காதே ஞானப் பெண்ணே! (45)

சற்றும் தயங்காது வேத சூட்சத்தில்
சாற்றும் கருத்துகள் மெத்த வுண்டு
பற்றும் கருத்துடன் பார்த்தவர்க்கு —வேதப்
பண்பு வெளியாகும் ஞானப் பெண்ணே! (46)

பண்பும் அதன் எழில்ப் பாங்குகளும் —பரி
பாஷை யுரைத்திடு நோக்கங்களும்
கண்பரமாகவே சொல்லிவிட்டோம் —அதைக்
கருதிப் பாரடி ஞானப் பெண்ணே! (47)

கருதிப்பார் மெஞ்ஞான மயில் —வழி
காட்டும் இருபது பாட்டதுவும்
சுருதி கூறும் அலீப் லாம் மீமதின்
சூட்ச விளக்கதே ஞானப் பெண்ணே! (48)

சூட்சம் விளங்கிட என்குரு பாதத்தில்
சொன்னேன் அற்புதக் கீர்த்தனையாய்
மாட்சிமை சேர்ந்திடத் திருவுருகாதல்
மெய்ப் பொருள்த்துதி யடி ஞானப் பெண்ணே! (49)

மெஞ்ஞானக் களிப்பதும் திருவடிச் சிந்துகள்
மேலு மறிவுரை யனேக முள
மெஞ்ஞானகுல மக்கள் மேவிப் படிக்கவே
மெஞ்ஞானத் தெளிவுண்டாம் ஞானப் பெண்ணே! (50)

ஞானப் பெண் பாட்டுகள் ஐம்பத் தொன்று—மெய்
ஞானம் தெளிந்திடப்பாடி வைத்தேன்
ஞான மதி கொண்டு பாடி நடக்கமெய்
ஞானி களாம் ஆமீன் ஞானப் பெண்ணே! (51)

—★—

# ஞானமயில்

## காப்பு

திருவுருவாய்த் திகழுருவாய்த் திவ்யகுண
மருவுமயில் மஹ்மூதாய்—வருபொருளே
பூரணமாய் ஞானமயில் புகழ்மாலை சூடுதற்குக்
காரணகுருவே காப்பு.

## நூல்

ஆடுமயிலே தெளிந்தாடு மயிலே—நம்
ஆசான் பொற்பாதமதைத் தேடுமயிலே!– ஆடுமயிலே!

அலீபு லாமீமென்ற அக்ஷரத்தையே—நமக்
காதி இறக்கி வைத்தான் ஆஷிக்காகியே
ஆஷிக்காகி யே தன்னில் அறிவதற்கு
ஆனந்தப்பீர் பாதங்கண்டு ஆடுமயிலே!—(ஆடு) (1)

சந்திரனைச் சூரியனைத்தன்னில் அடக்கி —உயிர்
சாயுட்சிய முத்திரையால் நேர் பிளந்ததை
சொந்தமுடன் நத்தினவர் இருளகற்றும்
துய்யகாமில் கதம் போற்றி ஆடுமயிலே!—(ஆடு) (2)

எக்காலமு மறவா இல்மதனையே—நமக்
கின்ப முடனூட்டி வைத்த சற்குருவினை
மக்காமன் மஹ்மூதா வெனும் தலத்திருக்கும்
மக்கா நபி தாள்பணிந்தாடு மயிலே!—(ஆடு) (3)

முந்தின பர்லாகிய தன்னை அறிந்து—நாம்
மோட்சமடையு முயர் வழிதிறந்து
விந்தை யுள்ள கலிமாவின் பொருளறிந்து
வெற்றி யுள்ள பாதங்கண்டு ஆடுமயிலே!—(ஆடு) (4)

காபகௌ ஸைனி என்ற வழிதிறந்து—கண்
காணுத காட்சி யெலா மதிற் றெளிந்து
காப் ஹாயா ஐன்ஸாதின் கருத்துணர்ந்து
காமில் கதம் பற்றி நின்ருடு மயிலே!—(ஆடு) (5)

அனு வெனும் அக்ஷரத்தின் வட்டமதனை—அத
னலி பெனும் உளியினுல் அடிதிறந்து
பனு வெனும் பாம்பினை அறத்துணித்து
பக்குவ மாயுள் நின்ருடு மயிலே!—(ஆடு) (6)

எமன்வரும் வேளை யதிலிருக்கும் பாரு—யாரும்
எட்டியே பார்த்தவுடன் உதைத்துவிடு
சமனில்லா ஆஜராவான் இப்லீஸவன்
சாக்கிரதை யுடன் நின்றுஆடு மயிலே!—(ஆடு) (7)

இழுத்திளித்துப் பேசுவான் இதம் போலே—உன்
எச்சில் முகம் துப்பிவிடு ஓடிப் போவான்
கழுத்தில் மணியங்கி வேஷம் கட்டிவருவான்
கலங்காமல் துணிந்து நின்ருடு மயிலே!—(ஆடு) (8)

வேதமதின் நாதன் போல விரித்துரைப்பான்—பொய்
வீணுன கதைசொல்லி வீறிழப்பான்
பாதமதை எடுக்காதே இடத்தைவலப்
பாதமதா லுதை கொடுத்தாடு மயிலே!—(ஆடு) (9)

குன் என்ற அட்சரத்தின் குணம்தெரிந்து—குன்
ஹூவென்ற சக்கரத்தால தைப் பிணைத்து
விண் எனும் ஆகாய வழிதிறந்து
வெற்றியுள பாதங் கண்டு ஆடுமயிலே!—(ஆடு) (10)

ஐன்எனும் கருவினு லுருச்சமைத்து—திரு
அலிபெனும் தண்டத்தால தைத்திருத்தி
நயினுரடி முடி சிகரம் ஏற
நசிந்தோடும் பிணி என்று ஆடுமயிலே!—(ஆடு) (11)

எட்டிரண்டும் பத்தான இடத்திருந்து—தன்
இகலோக சாதன மெலாம் மறந்து
கெட்டி யுடன் கலிமா வால்கனிந்துருக
கசிந்த முதூறுமென்று ஆடு மயிலே!—(ஆடு) (12)

பத்து வயதுள்ள எந்தன் கண்மணியை—வாலை
பாத்துமுத்து நாச்சியெனு மனேன் மணியை
சுத்த சன்மார்க்க இரசூல் மணியை
சூட்ச மதியாலறிந்து ஆடு மயிலே!—(ஆடு) (13)

ஐந்துபூதம் ஐந்துபொறி ஐந்துபூதியம்—ஐந்து
அட்சரங்கள் தொன்னூற்ருறு தத்துவங்கண்டு
மெய்ப்பொருளாம் மெய்ப் பொறியின் மெய்யுணர்ந்து
மெய்யுணர்வு ததும்பி நின்ருடு மயிலே!—(ஆடு) (14)

மெய்யெதெனக் கேட்கும்போது மேனிஎன்பார்—வீணர்
மெய்யழியாப் பொருளெனும் மதி யிழந்தார்
பொய்யகற்றி மெய்யளித்த புண்ணியனைப்
போற்றியவர் தாள்பணிந்து ஆடு மயிலே!—(ஆடு) (15)

அஷ்டதிக்கு மோர் நொடியிலாடியே சென்று—தன்னில்
அஷ்டதிக்குப் பாலர்களின் ஆணையைக் கொண்டு
அஷ்டகிரி அஷ்டநாக மதனைக் கண்டு
அஷ்ட சித்தாலாட்டி நின்ருடு மயிலே!—(ஆடு) (16)

பஞ்சாக்ஷரமதனுல்ப் பாம்பை யடக்கி —பரி
பக்குவத் திறமையால் பல்லை நீக்கி
விஞ்சையுயர் மந்திரத்தால் விடம்போக்கி
வீரியமாம் பாதம் பற்றி ஆடுமயிலே —(ஆடு) (17)

வீரியமாயாடி நிற்க அமுதம் தங்கும் —அரி
விஷ்ணுவதின் சக்கரத்தால் விருந்தளிக்கும்
பாரி விதை யறியாமல்ப் பரிதவிக்கும்
பாவிகளைச் சேர்ந்திடாது ஆடுமயிலே! —(ஆடு) (18)

ஆடுவதும் பாடுவதும் ஆஷிக்காகியே —நான்
ஆடிநின்று போற்றுவது ஆதிநாதனை
நாடுவதும் கூடுவதும் நாதன் சிர்ரையே
நாடியாடிப் பாடி நின்று ஆடுமயிலே!—(ஆடு) (19)

நாடிய என் குருகுலம் நாளும் வாழியே—தீன்
நான் மறைக் கிறைவன் றன்னை நாடி வாழியே
பாடிப் படித்துப் பலன் பெற்றோர் வாழியே
பாவும் இருபத்து வாழ்க ஆடுமயிலே (20)

ஆடுமயிலே! தெளிந்தாடுமயிலே!—நம்
ஆசான் பொற்பாத மதைத் தேடுமயிலே!

—★—

26-B



# அங்காக்ஷரம்

அறிவீர் உடற் கூற்றை—மானிடர்கள்
அங்கமதிலுள்ள உயர் அக்ஷரத்தை
அறிவீர் உடற் கூற்றை—அறிவீர்

இன்ஸானைப் படைத்த விதம்—அரபியில்
இருபத் தெட்ட க்ஷரமென வகுத்தார்
பண் சாயல் குணங்களெல்லாம்—உலகினில்
பலபல பாஷைகளிப்படி யுரைக்கும் —அறி (1)


அருள் தரும் அலிபதனைப்—புருவநடு
அக்ஷரமென் றமைத்தபின்—பேதேயை
இருபுரு வமதாகக்—கண்டு
இருத்தினர் தே நெற்றிஜீம் தலையாம் —அறி (2)

புய மிரண்டும் ஹே ஹேயாம்—தால்தால்
புகழிரு முழந்தாள் ரேஸேயும்
வயமிகு விலா வென்பு—என்று
வருத்தியே ஸீன் ஷீன் வருமார்பு —அறி (3)

ஸாது லா திருசெவியாம்—தோய்லோய்
தனித் திருபாதமெனும் கணுக்காலாய்க்
கோதிலா அயின் ஙைனும்—இருபுறக்
குடங்கை யென்றறிந்து குறிப்புடனே —அறி (4)

பே காப் விரல் கணுக்கை —காபாகப்
பேசுகிருர் பெலமான முதுகந் தண்டை
வாகாய்த் தொடை லாமும்—மீமது
வண்மையுடன் மூளையென வகுத்துரைத்தார் —அறி (5)

27-A



27-B



நூனது கண்ணென்பார் —இவர்கள்
நுட்பமுடன் அல்குல்தனை வாவென்றார்
தானம் ஹே யதற்குத் —தொப்புள்
சாற்றுமுயிர் ஏய்அதுவாய்ச் சமைந்ததனால் — அறி (6)

வேதம் நான்கதற்கு —சடலம்
வெற்றியுள்ள அக்ஷரமாய் விளங்குவதால்
போதம் பெறுபவர்கள்—ஞானப்
பொக்கிஷ நிலை யதனைப் போற்றுமென்றார் —அறி (7)

தன்னை அறிந்திஸ்லாம்—ஆகி
தனியோன் லிக்காவதன் தகுதி பெற
மன்னர் நபி இரசூல்—ஹதீதில்
மன்னரப நப்ஸஹு வென்றருளியதால் —அறி (8)

இன்னும் எடுத்துரைப்போம்—இறைவன்
எழில் தரும் கலிமாவின் இரகசியத்தை
எண் மூன்றக்ஷரமாய்—உடலில்
இலங்கும் விதமதனை எழிலறிய —அறி (9)

லா என்ற மண் தசையாம்—அதனி
லிலாஹ வெனும் அக்ஷரம் நீ ரிரத்தமதாம்
இல்லாவும் காற்ருகும்—மூச்சாக
ஏறி இறங்க உயிர் தேறிவரும் —அறி (10)

அல்லாவே நெருப்பாகும்—உஷ்ணமாய்
அங்கமுழுது மெங்கும் தங்கி நிற்கும்
எல்லாம் ஹூ வுணர்வதற்கு—ஆகாயம்
உணர்ச்சியை யளித்திடும் ஸ்பரிசமதால் அறி (11)

முஹம்ம தென்றக்ஷரமே—சொரூபமாம்
மீம்தலை ஹே புயம் மறுமீமும்
தகுந்த நல் இடுப்பாகும்—கால்கள்
தாலாகும் அதன் முறை திருப்பிடுவீர் —அறி (12)

ரஸூலெனும் நான்கெழுத்தால்—கெர்ப்பம்
தகுதியா யமைந்த நற்றலமாகி
துஸ்மன் அணுகாமல் —அல்லாஹூ
துதி செயும் கல்பதின் நான்கெழுத்தால் —அறி (13)

சுல் ஹூடன் முர்ஷிதவர் —நமக்கு
சூட்சமா விளங்கிட குத்துபு தாரா
கல்பெனும் இருதயத்தில்—வந்து
கலிமா வாயிலங்குமே காக்ஷரமாய் —அறி (14)

இன்ஸானே ஆலம் ஸிர்ராம்—தேகத்தில்
இருக்கும் நற்பொருத்துகள் யாவும் கூடி
முன்னூற்றறுபதாகும்—அதுவே
முன்னூற்றறுபது நாள் வருடம் தனில் —அறி (15)

ஜடலம் பூமியதில்—மலைகள்
தாட்டிக என்பு பின் மூளையதும்
திடம் பயிர் விளையுமிடம் —உட்பாகம்
திரைகடல் குடல் அதின் சிற்ருரும் —அறி (16)

நரம்புகள் ஓடைகளாம்—கொழுப்பு
நைப்புள மண் ரோமம் புற்பூண்டு
உரோமக் கால் மணற்காடு—முதுகு
ஒருவருக் கெட்டாப் பெருங்காடு —அறி (17)

மூச்சதே காற்ருகும்—பேச்சு
முழக்கமா மேகத்தின் குமுரல்போல்
ஆச்சென்ற பெரும் அலறல்—இடிமின்
அரும்பிய குருநகை அழுதல் மழை —அறி (18)

சந்தோஷம் பகலாகும் துக்கம்
சதிபல நிகழ்ந் திடுமிரவி னிருள்
விந்தை மவுத்து ரக்கம்—ஹயாத்து
விழிப்புடன் அறிவு சூழ்நிலையாம் —அறி (19)

பதி புருவத்திடையே—மேல்வானம்
பகரும் லா மக்கான் நெற்றியதாய்க்
கதிர் மதி கண்ணிரண்டாம்—இருதயம்
கஃபத்துல்லா பைத்துல் முகத்தீசு —அறி (20)

ஜனனம் பயனமதாம்—வருமூச்சு
ஜெகத்தினைத் தாண்டிடும்—ஓரெட்டாம்
கணமே நாழிகையாம்—வயது
கணக்கிட மன்ஸில் காதவழி —அறி (21)

இளவல் கார் காலம் வாலிபம்
இதம் போல் பயிரிடும் குளிர்காலம்
கிழமாம் கோடையது—கைக்குக்
கிட்டிய பலன் பெறல் பூரணமாம் —அறி (22)

சிந்தை உணர்வு நெஞ்சு—அருஷ்
சிரம் அதில் குர்ஸி யுள்மூளை
செந்தில் ஏறுபடி—பிடரிக்கண்
செவ்விய அகக்கண் லௌஹுல்மஹ்பூல் —அறி (23)

பூரணம் நிறைகலிமா—மூன்றெட்டு
புதுமையா மிப்பாடல் மூவெட்டு
காரணம் நிறைந்த பலன் —எட்டெட்டு
காமில்கள் திருப்பாதம் முற்றிற்று —அறி (24)

★

# திருவடிச் சிந்துகள்

தங்கமாமெழில் மங்களமே இங்கு
சங்கை பணிவுடன் வாடி யுக
மெங்குமே நாதாக்கள் தேடிக்—காணச்

செய்த தவங்களும் வீணிலாகின
தேடியயர்ந்தனர் கோடிகோடியாய்த்

தீன் கமழ்திருச் சிவனடி பாதத்தில்
சிரம் பணிவோம் மலர்சூடி—ஐயன்
திருவருட்பா விணப்பாடி—நாளும்
தெளிந்தென் குரு நிழல் நாடி —தங்கமாம் (1)

நிழல் தருஊம் எழில் பூங்கமழ்சோலைசூழ்
நன்னில பாக்ய வுல்லாசன்—மக
ராஜர் மகிழ் விசுவாசன்—தினம்

நாடிப் பாடியே கூடியாடிட
நரர்கணங்களும் சுரர்களாகினர்

நவமுயர் சுகப்பத மலர் தேடிட
நலம் புரிவாருபதேசன்—நாம்
ஜெயம் பெருவோ மிகுநேசன் —தங்கமாம் (2)

ஜய ஜயாவுடன் தெந்தினத்தினத் தந்தோம்
தினத்தந்தோம் தினத்தந்தோம் தானே—ஜகம்
தகிடு தத்தோம் தெரிமானே—உயிர்

செம்மலும்பர் பரி அன்புமிக்ககவி
சங்கு தக்கதொனி தங்குகிண்கிண்மணி

சேவடிபெறத் தெரிசிப்போம் என்குரு
தீன்மார்க்க முஹியித்தீன் கோனே—காண
தென்பு பெறுவாய் ஈமானே —தங்கமாம் (3)

ஈமான்தனையுணர் ஓமென்ற
எந்தை மொழியுரை கண்டேன்—அந்த
எல்லையே இல்மெனக் கொண்டேன்—பந்த
இன்னலால் வரு பின்னமோடிகள்
எண்ணுபோதிலே விண்ணமாகிட
அறுவரை கண்டதன்வழி சென்றிட
ஆனந்தத் திருநிலை யடைந்தேன்—அன்னை
அருள்தரும் பொன்னிழல் நின்றேன் —தங்கமாம் (4)

அருள் தந்தாள் எங்கள் அன்னைமனோன்மணி
அம்பிகை வாலை மஹ்மூதாள்—ஈஸ்வரி
அம்மணி கல்பிடை யமர்ந்தாள்—தன்னை
அண்டிடும்பல தொண்டரின்புற
அண்டபிண்டமும் எண்டிசைநிறை
அனைத்துயிர் இவள் அகிலாண்ட ஈஸ்வரி
ஆத்தாளே என்னுயிர் காத்தாள்—கௌரி
அம்மையே என்துயர் தீர்த்தாள்—
தங்கமாம் எழில் மங்களமே (5)

(2)

எண்ணிப் பணிவோம் எந்தை நாதனைத் —தினம்
ஏற்றிப் புகழ்வதென் போதனை—துயர்
எள்ளளவும் இல்லை வாதனை—எங்கள்
எழிலார் நபி மஹ்மூதுரை
வழுவாமலே கலிமாவினை
எடுத்தளிப்பார் பதம் சிந்தனை செய்து—
என்றென்றும் பாடுவீர் வந்தனை —எண்ணி (1)

என்றென்றும் கலிமாவைப் பொருளதாய்க்—காண
ஏகன் விதித்திட்டான் பருலதாய்த்—தங்கள்
இதயம் திறந்து முச்சுடராய்க்—கண்டு
அறியார்மனம் குருடாமென
அறைந்தானிறை குர்ஆனிலே
இயம்பும் கலிமாவை நேரதாய்க்—காட்டும்
எங்கள் குருவடி சீரதாய் —எண்ணி (2)

சீரடி பணிந்தவர் பாக்கியர்—குரு
தெரிசனை கண்டவர் யோக்கியர்—பாடித்
தினம் தினம் புகழுமெய் வாக்கியர்—ஐயன்
திருவாய் மொழி செவி யேறிட
மருள் மாயையும் விரண்டோடிடும்
சேயெனப் பணிபவர்க் கைக்கியர்—சான்று
சேர்ந்ததிற் சிறந்திட்டோர் சாக்கியர் —எண்ணி (3)

சிறந்தென் குரு கழற் சீரடி—வந்து
சிந்தை தெளிவுற்றே கூரடி—விந்தை
தெரிசனை கலிமாவிற் பாரடி—பார்க்கச்
சிந்தித்திறை யொளி கிந்தில் வடிவென
புந்தித் தெளிவுறப் பந்தச்சுடரதாய்த்
தெளிந்துன் கடமதனில்ச் சேரடி—என்று
செப்பும் மறை மொழி நூரடி —எண்ணி (4)

செப்பும் பல பல மந்திரம்—திக்ரு
செய் யெனக் கூறிடு தந்திரம்—எழுதிச்
செபியெனக் கூவிடு மந்திரம்—வேஷத்
திருடர் பிழைவழி தெரியாதிருந்திடக்
குருடர் முன்னிலை கூறுமுபாயம்
திருமறைப் பயன்காணச் சுந்தரம்—என்று
சொல்லிப் பணிந்திடு சுதந்திரம் —எண்ணி (5)

(3)

[வேறு]

சொல்லும் சொல்லுமே தீனேரே
முகம் நேரே கூறும் நீரே—நானை
சுவர்க்கம் நமக்கே என்பீரே—இறை
சுடர் பெற்றிடக் கடம் பெற்றதில்
திடமுற்று நீ ரிடம் பெற்றிரோ
செப்புவீர் கலிமாவின் பொருளை—மனம்
ஒப்பும்படி குருவருளை —சொல்லும் (1)

குருபிரான் உனக் கெவர் கூறும்
கலைதேரும்படி நீரும் —தகு
குணம் கண்டவர் நிலை சேரும்—அதன்
குறியும் உயர் நெறியும் எழில்
தெரியும் வகை யறிந்தாயெனில்
குன் என்ற அக்ஷரம் எங்கே—அதன்
சின் னம் உடலினி லெங்கே —சொல்லும் (2)

உடலென்ன வெறு மண்ணின் மேடோ
அன்னக் கூடோ பிழையோ டோ—அரன்
ஓடி யொளித்திரு வீடோ—மேலாம்
உம்பர் பலரின் புற்றுமே
வரம் பெற்று நற்பதி யுற்றதால்
உண்மை யறிந்துரைப் பீரே—மக்கள்
நன்மை பெறு வழியில் நேரே —சொல்லும் (3)

வழியென்ன கன்ஸுல் மஃபிய்யா
கவனிய்யா தீனிய்யா—வந்த
வகை தெரிந்தோரின் ஸானிய்யா—நல்ல
பதம் பெற்றுமே தெளிவுற்றவர்
கதம் பற்றி நீ மதி பெற்றயோ
வழுத்திடும் பீர் நிலைதானே—குரு
வள்ளல் பதம் தர ஈ மானே —சொல்லும் (4)

வள்ளல் நபி யரசரெங்கே
மக்கா எங்கே மதினு எங்கே—உந்தன்
வரமாம் ஷபாஅத் இடம் எங்கே—நல்ல
மௌத்தும் அதன் தகுத்தும் நிலை
வகுத்தும் மதி புகுத்தும் படி
மன்னர் பாவா முஹியித்தீன்—கழல்
வந்து பெறுவீர் உயர்தீன் —சொல்லும் (5)

★

# நாடுங் குருபாத நிலை

நாதனெனும் போதனவன் நல்கும் குர்ஆன் வேதமதில்
ஆதமவர் பாதமதில் அடிபணிய மறுத் தெதிர்த்த
சூதனவ னிப்லீஸு சொன்ன பல காரணம் போல்
வாது செயுங் குணமகற்றி வகுத்த எங்கள் தாயேமோ
வல்லகுரு பாதநிலை வகுத்த எங்கள் தாயேமோ (1)

வல்லிருளமா வாசை வாரி விழுங்க ஜகம்
நல்லிருளாய்க் காணுமென்று நயவஞ்சனபு ஜஹில்தன்
சொல்லியலால் நௌ ஷேர்வான் சொர்னமதி பிளந்துவலம்
நல்ல நபி பதம் பணிய நாடி நின்றோர் நன்றேமோ
நாடுங் குருபாத நிலை நாடி நின்றோர் நன்றேமோ (2)

நான் மறையாம் புர்கான் நல்மூமீன் தியாகிகட்கு
வான்பொருளை வாரி வாரி இறைப் பதற்காம்
மேன் மகுட மலிபுலா மீ மென்று மெய்யுணரத்
தான் தந்த காரணத்தைத் தந்தது தெங்கள் தாயேமோ
சாந்திகுரு பாத நிலை தந்த தெங்கள் தாயேமோ (3)

வாசியென்று மூச்சடக்க வல்லசரம் ஒடுங்கு மெனும்
தோசியர்கள் கூற்றைத் தொடராதே என்மகவே
நாசி நுனிகபால வழி நயனத் திடை நடுவே
ஆசி யென்று வாசி நிலை அருளிய நற்றாயேமோ
அண்ணல் குரு பாத நிலை அருளிய நற்றாயேமோ (4)

சோமன்கலை பதினாறு சுடர்கலைதான் பன்னிரெண்டு
வாமகலை வன்னி எட்டு வகையுணர்ந்தார் பாதம்தொட்டு
காமகலை ஞேயம் விட்டு கதியுறவே காலை நட்டு
நேமநிட்டை கூடுவழி நெறியமைத்தார் தாயேமோ
நேமகுரு பாத நிலை நெறியமைத்தார் தாயேமோ (5)

கண்டவரும் விண்டதிலேகவி விண்டவரும் கண்டதிலே
திண்டாடு மனத் தழுக்காற்றெளியாப் பரமபதம்
அண்டாண்ட முகடு வெளி அளந்த அடிமுடியைக்
கண்டாரும் காட்ட கதிசரணம் தாயேமோ
காமில் குருபாதநிலே கதிசரணம் தாயேமோ (6)

அருமறையிற் றிருவுரை யோனமானத் தளித்தபொருள்
வரமுயர் மானிடர்க்கே வரும் சிபத் தேழதுவாய்
தரம் தரும் நபுஸேழும் தவத்தார் மெய் மெய்யுணரச்
சிரத்தார்ப் பதம் பணியச் செய்தார் நற்ருயேமோ
செம்மல் குருபாத நிலே செய்தார் நற்ருயேமோ (7)

வெண்சாரை கரு நெல்லி விண்டதல்லாற் கண்டதில்லே
வெண்சாரை பாயும் விதமறிந்து விவேகமதால்
உண்பார்க்குக் கருநெல்லி உயிர்நிலே மெய்காய சித்தி
என்பார்க்கு உற்றபடி எனக்களித்த தாயேமோ
ஏந்தல் குருபாத நிலே எனக்களித்த தாயேமோ (8)

ஊழிப் பெரும் விதியை உணர்த்துமெய்க்கலமெழுது
கோலின் நுனி மறுக்கும் கூர்கண்டெமதிறைவன்
வாளித்திருநாவகிர் கொண்டெழுத கலம்
பாலிப் பெழுதும் கலே படிப்பித்தார் தாயேமோ
பாக்ய குரு பாதநிலே படிப்பித்தார் தாயேமோ. (9)

எங்கும் நிறை பொருளே இரணியன் மறுத்திகழ
துங்கம் பிரகலாதன் துணேகொண்டு தவமியற்றித்
தங்கும் பயனுணராத் தந்தை மிரள நர
சிங்கம் வெளிப் பாய்ந்த சித்தளித்தார் தாயேமோ
ஜீவகுரு பாதநிலே சித்தளித்தார் தாயேமோ (10)

★

# வேத சூட்சம்

காப்பு

விருத்தம்

ஆதியாகிய பரம் பொருளாய்
ஆலமடங்களும் நிறைவிலாகி
ஜோதி முகம்மதாய் அநேக காலம்
தோற்றம் தோற்ருதாய் மறைவிலாகி
வாதி யாவர்க்கும் அருள் சுரக்க
வல்ல நாமங்கள் யாவும் பூண்டு
காதிமாகிய அடியான் தன்னை
கடாக்ஷித் தருளிய குருவே காப்பு. (1)

காப்புத் தேடினேன் குரு பாதத்தில்
கருதா என்பிழை நீ பொறுக்கக்
காப்புத் தேடினேன் மகிழ்வடைய
காட்சி யருளிய குருவைநாடி
காப்புத் தேடினேன் கருவைக் காட்டிக்
கருத்தில் நினையாத பலன் பெற்றதால்
காப்புத் தேடினேன் மார்க்க வேந்தே!
கடையேன் கைமாறு வேறுகாணேன். (2)

வேறு காண்கிலேன் உன்னையன்றி
வேத கீதங்கள் வேறு முண்டோ
தேருங் கல்பினில் நிறைவதற்குத்
தெளிவும் ஒளிவாகி நிறைவாகினுய்
பாரில் நின் தொழில் செய்வாருண்டோ
பகரும் பக்தரும் முத்தர்களும்
யாரும் புகழ்வது நின்னுமமால்
யானும் புகழ்நாமம் வேறுமுண்டோ. (3)

உண்டென் றுரைப்பது நீயே ஆதி
உண்டென் றுறைந்ததும் நீயே யதில்

விண்ணென் றெழுந்ததும் நீயே ஜோதி
விளைவா யமைந்துமே வெளியிலாக

மண்ணில் அணுமுதல் மலைகடலும்
மருவும் ரவிமதி தாரகையும்

எண்ணில் உயிர்களும் நீயாகையால்
என்னில் இருந்து நான் இன்புற்றேனே. (4)

அறுசீர் விருத்தம்

எண்ணிலாத் தவங்கள் கோடி யாகங்கள் முதலாய் மற்றும்
தன்னிலாத் தலங்கள் சுற்றித் தரித்திர பாத்ர மேந்தி
இன்னிலாத் தீர்த்த யாத்ரையேகமா யோடிச் செய்தும்
நின்னிலா ஞான ஜோதிநேரிடா தறிந்தேன் நாதா. (5)

நூல்

எண்சீர் விருத்தம்

நாதனருள் சுரந்தினிதாய் நமக்களித்த
நலமான வேதமதின் சூட்சமின்னூல்

ஞாலமதில் உள்ளவர்கள் அறியவேண்டி
நானறிந்து தெளிந்துரைத்தேன் ஞானமார்க்கம்

தூலமதில் அறிந்துரை யென்றைய ஞேதத்
துணிந்துரைத்தேன் அறிவாக அறியார்கூடி

ஓலமிடாதிருந்து மனக்கசட்டை நீக்கி
உண்மையுடன் பார்த்தவர்க்கு விளங்கும் ஜோதி. (6)

ஜோதியடா ஜெகஜ்ஜோதி கருவின் வட்டம்
ஜெகஜ்ஜால வித்தையெலாம் அதிலேநின்று

பாதியடா பச்சை வட்டம் பவளங்கூடிப்
பஞ்ச வர்ணமாகி நின்ற விபரம் பாரு

ஆதியடா முச்சுடராய் அமைந்த சூட்சம்
அது அவனுய் அவன் அதுவாய் அமைந்த தேசி

வாதியடா யாருமின்னுள் சொல்வோர் தம்மை
வழிகெட்டோன் மொழி கேட்டால் வருத்துவானே. (7)

வருத்துவான் என்றதொரு பயத்தை நீக்கி
வானுலகும் ரவி மதியும் என்னுளாக்கிக்

கருத்துடனே இழி குலத்தோர் தீங்கை வென்று
கதிபெறவே எனக்களித்தார் எந்தை நாதர்

விருப்புடனே அவரினிரு மலற்ருள் பற்றி
வீரமுடன் விரித்துரைக்க முனைந்ததாலே

வெருப்பதனை அறவிட்டு வீம்பை விட்டு
வேணுமென்று ஊன்றிடிலோ தோணுந்தானே. (8)

தோணுதுபார் ஆயிரத்தெண் மலரின் தோற்றம்
தோகைமயில் விரித்தாடும் வண்மைபோலத்

தோணுது லோபிகட்கும் காமிகட்கும்
தொடரும் பவ வினையாலே சாபத்தாலே

கோணுத மனதுடைய வீரன் ருனும்
கொடு வஞ்சம் கோள் புரட்டு விட்டதாலே

கோனுன ரஹ்மானின் லிகாவும் பெற்று
குதி கொண்டு மதிகண்டு விதியை வெல்வான். (9)

விதியறிந்தால் அவன் யோகி அவனே சித்தன்
விதியறிந்து உரைப்பவனே ஆசானுகும்

விதியறிந்து வென்றவனே காமிலாகும்
விவேக முத்தியடைந்தவனே விதியை வெல்வான்

விதியதனை அறியார்க்கு மதியங்கேது
விதியென்ற வித்துடைத்தால் மதியே தோன்றும்

விதி பிளந்து மதி யென்ற முளையே காணில்
விருக்ஷமதின் வகைநான்கும் வெளியாம் பாரே. (10)

வகையென்ற நான்கதுவே இலை பூக் காயும்
வலிமையுள பழமதுவாய் அமைந்த சூட்சம்

தகையுடையோர் உரை நாமம் ஷரீஅத் தென்றும்
தன்மை யுள தரீக்கத்து ஹகீகத்தென்றும்

மகிமையுள மஹரிபத்தும் கூடினுக்கால்
மானிடற்குத் தௌஹீதின் விருக்ஷமாகும்

பகையற்ற ஞானமதும் இதுவேயாகும்
பாலகனே விதியகற்றி மதியைக் கூடே. (11)

கூடென்று சொன்னபடி நடந்தோர் தம்மைக்
கூறுகிருன் குர்ஆனில் நாயன்ருனும்

வாடுகின்ற விதியகற்றி அச்சமற்ற
வள்ளலேயே ஒளலியா வென்றுகூறி

நாடுகின்ற அலாஇன்ன ஒளலியாவாம்
நல்லதொரு ஆயத்ததின் கருத்தைப்பாரு

ஆடுகின்ற ஆட்டமெல்லாம் அவனே யாகில்
அப்தென்ற அடிமை விதியாருக்கெண்ணே. (12)

எண்ணியே அடிபணியென்ருதத்திற்கு
ஏவினுன் மலக்குகளை சுஜூது செய்ய

உண்ணியே செய்தவர்கள் வானேர் கூட்டம்
உதறியே தள்ளினவன் இப்லீஸென்று

பண்ணியே இறைவனவன் வேதந்தன்னில்
பகர்ந்துரைசெய் ஆயத்தது இது குல்னுவாம்

நண்ணியே பணிவது நாம் ரஹ்மானுக்காம்
நாதன் அருள் தேடுவது நமக்காமன்றே. (13)

நாதனருள் தேடவென்றே நாமிருக்க
நாயனுரை கேள்மகனே ஆதத்திற்குப்

போதமுடன் அடிபணி யென்றன் பாய்ச்சொன்ன
போதமொழி யாது பலன் பெறவோ தன்னில்

வேதமொழி யேவுவதும் வீணுக்கல்ல
வீணன காரியத்தை யேவான் நாயன்

பாதமதில் அடிபணி யென்றேவும் விந்தை
பகருவீர் பகருமவர் ஆலீமாமே. (14)

ஆலீமாய் உலகு தனில் வருவாருண்டு
ஆலீமைப்போல் வேஷமதும் அணிவாருண்டு

ஆலீமின் வகையனந்தமாயினும் மெய்
அறிவுடைய இல்மறிவார் சைனுச் சென்றும்

ஆலீமாய் இல்மறிவான் அவனே மூமீன்
ஆனமட்டும் தவமியற்றி ஆரிபான

ஆலீமே உய்யும் வகை உலகோர்க் கீவான்
அவனல்லா வேஷமவன் இப்லீஸாமே. (15)

இப்லீ ஸென்றுரைப்பவனும் அஜாஸீலாகி
இன்னிலத்தில்ப் பலபேர்க்கும் அறிவு கூறி

இப்லீ ஸென்றறியாத மாந்தர் தம்மை
இதம்போலே கலைத்திடுவான் மதியதில்லா

இப்லீஸா யாதத்திற்குப் பணியாதாலே
இல்மென்ற பாக்கியத்தை இழந்தே போனுன்

இப்லீஸாய்ப் போகாமல் ஏவல் கண்டு
இல்மதனை உரைப்பவனே ஆலீம் ஆகும். (16)

கலிவிருத்தம்

இல்மை அறிந்திட இதமுட னேதுவீர்
இல்மை யறிந்திடு பாஷையெப் பாஷையோ
இல்மை அரபியா யெண்ணிய மாந்தரே
இல்மை அறிந்திட என்சொன்னுன் புர்க்கானில். (17)

புர்கானில் நாயனும் புகலுவான் இல்மதை
தர்க்கமில் லாமலே தயவுடன் கவனிப்பீர்
அற்புத மாகவ அல்லம்னு ஹூவதில்
நற்பயன் பெற்றிட நம்வசத் துள்ளதாம். (18)

உள்ளதாம் இல்மது பாயமா யறிந்திட
வல்ல நாயனின் வரிசைகள் பெற்றிட
கள்ளங் கபடக் கருத்தைய கற்றிட
ஸல்லல் லாகுரு சரணடி பணிவமால். (19)

அறுசீர் விருத்தம்

சரணடி பணிந்தா யானுல் சற்குரு பாதங்கண்டு
அரனடி பணிந்த வேதம் அனைத்தையு மீன்றுகாக்கும்
பரனடியதுவாய் நின்ற பரிவுள இல்மைக் காட்டத்
தரமுள ஞானபாஷை சகலதின்ருயாய்க் காண்பாய். (20)

எண்சீர் விருத்தம்

காணுமடா இல்மதுவின் கருவைச் சொல்வேன்
கால் மேலும் தலை கீழாய் நின்றே பாரு

வேணுமென்று மேல்நோக்கிப் பார்க்கும்போது
விண்ணெழுந்து நின்ற வெழு வானங் காண்பாய்

தோனுமதின் கீழ் நோக்கத் துணிந்தபேர்க்குச்
சொல்லாமல் விளங்குமடா ஏழு பூமி

தானுமதிற் சொன்னபடி உலகீ ரேழும்
தாரகையும் ரவிமதியும் தனக்கே தோன்றும். (21)

தாரகையும் ரவிமதியும் தோனும் போது
சந்திரனைக் கூர்ந்துபார் நீண்டேகாணும்

பாரமுள அலிபதுவாய மைந்த சூட்சம்
பகருவேன் அமானித மென்றன் பாய்ச் சொன்ன

வீரமுளகுர்ஆனில் நாயன் இன்னு
விபரமுடன் அர்லு நல் அமானத்தென்று

தீரமுடன் ஏழுதுவாய்ப் பகிர்ந்து பார்க்கத்
தெரியுமடா அணு அணுவாய் உயிரின் தோற்றம். (22)

உயிரென்ற ஹயாத்துடனே இல்மும்மங்கே
உணர்வென்ற ராதத்துடன் குதரத்தங்கே

சைக்கினையாம் சம் உடனே பஸருமங்கே
சகல கலை பேசும் உயர் கலாமுமங்கே

தைரியமாய் நின்றவரே காண்பாரப்பா
தயிரியத்தை விட்டவனே வீரிழப்பான்

மயிரென்ற பாலவழி இது தானுகும்
மகிமையுடன் சென்று நீ இல்மைப்பாரே. (23)

பாரென்று சொன்னபடி மதியைக்கூடி
பக்குவமாய் வெய்யோனில் சென்று பாரு

சீரென்ற சிர்ருடைய தலையில் நின்றும்
திறம் போல இறங்குமடா விழுதாய் நீண்டு

வீரென்ற வீரனடா அதிலே செல்வான்
வீரிழந்த மடையனென்ருல் விழுந்தே சாவான்

தேரென்று சொன்னபடி நின்ருயானுல்
தென்படுமே நபுசேழும் தீர்க்கமாக. (24)

தீர்க்கமுடன் நபுசேழின் விபரங்கேளு
திகைப்பூண்டா யமைந்த திரு மூலமென்பார்

மார்க்க மென்ற ‘அம்மாரா’ ‘லவ்வாமா’வும்
மதியுடைய ‘முல்ஹிமா’ ‘முத்மஇன்ன’

பார்க்க அதிற்றேணுது பார் 'ராலியா'வும்
பக்ஷமுடன் 'மர்லியா' 'காமிலா'வும்
யார்க்கும் பெரிதான தவம் இதுவேயாகும்
யானறிந்த மீமதுவே ஞானபாதம். (25)

மீமதுவின் வால்மேலே ஏறிச்செல்ல
மீட்சியுள்ள தாரகையின் மன்றமாகும்
நேமமுடன் துணிந்தேறிச் சுற்றிப் பார்க்க
நேரிருளின் கார்மேகக் கூட்டத்துள்ளே
சேமமுள்ள சுக்கிரனும் செவ்வாய் வியாழன்
சீர்புதனும் ராகு சனி குரு வங்காகும்
வாமமுடன் அனைத்தையுமே சேர்த்துப் பார்க்க
வன்மையுள்ள லாமதுவாய் விளங்கும்பாரே. (26)

வன்மையுள்ளகுர் ஆனில் நாயன் சொன்னுன்
வஸஹ்ஹரலக்கும் மாபி வாக்கியத்தில்
வன்மையுடன் வான் புவியிலுள்ள தெல்லாம்
வசப்படுத்தித் தருவேனென்றன் பாய்ச்சொன்ன
வன்மைமிக்க கருத்தது தானிது தானுகும்
வகையுடனே பார்த்தவர்க்கு எல்லாம் சித்தி
வன்மைபெற வேணுமென்ரு லின்னுல் பார்த்து
வழிதெரிந்து மதியறிந்து வகையாய்ப் பாரே. (27)

பாரென்று சொன்னபடி பார்த்தாயானுல்
பாலகனே நீயுமொரு சித்தனுவாய்
காரென்று சொன்னபடி காத்தாயானுல்
காணுத காட்சியெல்லாம் கண்ணிற் காண்பாய்
சாரென்று சொன்னபடி சார்ந்தாயானுல்
சற்குருவின் பாதமதில் துலங்கும் பாரே
வேறென்றும் இல்லையடா ஞானபாதம்
வெற்றியுள்ள பாதமதே ஆதம்பாதம். (28)

சந்த விருத்தம்

வெற்றியுள்ள பாதமதே வேதமதின் பாதம்
விண்ணும் மண்ணும் ரவிமதியாய் முளைத்தெழுந்தபாதம்

நெற்றியிலே துலங்கும் ஞானப் பாதமதே பாதம்
நேர்மை மிகவுள்ளவர் கொண்டாடு முயர் பாதம்

சுற்றிச் சுற்றி ஆடிவரும் சூட்சமுள்ள பாதம்
சூட்சமதி யுள்ளவர்க்குத் துணைபுரியும் பாதம்

எற்றிசையும் இல்லாத எங்களிறை பாதம்
ஏகன் நபி முஹம்மதனூர் எமக்களித்தபாதம். (29)

ஏகனொளி முஹ்யித்தீனும் எங்கள் குருபாதம்
ஏகனலிப் லாம் மீமாய் இலங்குந் திருப்பாதம்

ஆகமங்கள் சாத்திரங்கள் அறிந்திடா அப்பாதம்
அருள்பெறவே குருகுலத்தோர் அறிந்ததிந்தப்பாதம்

தாகமுடன் நத்தினவர் தமை அணைக்கும் பாதம்
சகல உயிர் ஜீவனிலும் சாடிநின்றபாதம்

சாகாத கால் வேகாத் தலைய தென்ற பாதம்
தன்முடிமேலடி வைத்த சாயுட்சிய பாதம். (30)

தனையறியா இப்லீசன் தவறிவிட்ட பாதம்
தர்க்கமதியுள்ளவரைத் தகர்த்தெறியும் பாதம்

எனையறி யென்றென்காமில் எனக்களித்த பாதம்
எமன் பயத்தை நீக்க வகை எமக்களித்தபாதம்

இணையில்லா வாழ்வெனக்கு இனிதளித்த பாதம்
இன்னமுதம் அளித்ததேசி எம்பெருமான் பாதம்

நினைவுறவே பலனளித்து நீடூழி வாழ்க
நீணிலத்தில் உள்ளவரே நிச்சயமாய்க் கேளும். (31)

சந்த விருத்தம்

நிச்சயமாக நம் நிமலனின் பாதத்தை
மச்சிலாத நம் மாடியின் தீபத்தில்
உச்சிதமாக வமைந்த உபாயத்தால்
அச்சமகற்றி அறிந்திடு நாதனை. (32)

அச்சமகற்றி அறிந்திடு வேதத்தை
துச்சவினைகொடு துன்பங்கள் நீங்கிடும்
இச்சையுடன்னுளும் இறைதன் லிகாவதை
பச்சமுடன் பார்க்கப் பகருவான் புர்க்கானில். (33)

பகருவான் கஃபிலே புகழ்கடை ஆயத்தில்
புகழுவான் கலிமாவைப் புகழதின் சிர்ரினல்
அகலமாம் கடல்மையை அறிவுடன் கூட்டியே
சகலரும் எழுதினல் தன்புகழ் அணுவதாம். (34)

அணுவிலணுவதை அண்ட பிர்மாண்டமா
யணு விலணுவதற் கப்புறத்துள்ளதாய்
அணுவிலணுவாய் அமைந்தஉள் ஜோதியை
மனுவில்ணுவதாய் மகிழ்வுடன் தெரிசிப்பீர். (35)

தெரிசிப்பீர் முஹம்மது நயினரின் கோலத்தில்
தெரிசிப்பீர் முஹ்யித்தீன் திருப்பாத மலரிணை
தெரிசிப்பீர் முர்ஷிதின் சீர்பெரும் வழியினல்
தெரிசிப்பீர் ரஹ்மானைத் தீன்பயிரேற்றவே. (36)

எழுசீர் விருத்தம்

தீன்பயிரேற்றத் திருமறை பயின்று
தீனெறி புக்கிடா ஆலிம்
வீணெறிபுக்கு உலகியல் தனக்காய்
விற்பன செய்தவம் நாளும்
கோனிறை வேதன் கூறுவான் கஃபில்
குல்ஹல்உ நப்பிஉ வாக்யம்
நான்மறையோர்கள் நலனுற விதனை
நன்னுவீர் சுகமுற இன்றே. (37)

இன்றுளோரென்றும் இருப்பதில் லெனவே
இதமொழி கூறுநல் வேதம்
நன்றுள நாளே யனைத்தினு மேலாய்
நயனுற நரர்களும் சுரராய்ச்
சென்றுமே பவனித் தெருவழி கூடித்
திகழுநாட் டிறமென மேலோன்
என்றுமே இன்ன அன்ஸல்ன ஹுவென்
றியம்பிய அம்மயத் ஜுஸுவால். (38)

இயம்பிய வேதன் இக்ரஃ வெனல் கேட்
டெதுவென இறைநபி கேட்ப
இயம்பினுன் இஸ்முல் அஃலமதெனவே
இறைசிர்ரின் நாமமதென்ப
இயம்பலும் மறையோர் இக்ரஃ பிஸ்மென்
றிறை ரப்பிக்கல்லதீ கலெக்கென்
றியம்பியபோது நபி யெனக் கூர்ந்த
இஸ்மதை உணர்ந்தவர் திடனே. (39)

சந்த விருத்தம்

திடங்கொண்டு நல்லிடங் கண்டிடத்
திருவாய் மொழி இரசூல்
சடங் கண்டிட நடவென்றனர்
சைனு நகர் சென்றும்
மடம் வென்றவர் இடை சென்று நீ
மதியாம் மனம் படைத்தால்
கடம் என்ற உன் சடம் என்றதில்
காண்பாய் இறை ஒளியை. (40)

இறை உண்டென மறை விண்டதில்
எழிலாம் முறை அதனில்
துறை கண்டவர் நிறைகண்டபின்
துணிந்தார் பெருந்துறையை
பறை உண்டதின் முறை கண்டிடப்
பதமே தினம் பணிந்தால்
நிறை வுண்டு நீ விரை யின்றுடன்
நினைவாய்ப் பத மலரே. (41)

பதமா மலரிதமாகிய
பதியாம் இதை அறிந்து
கதமா மிடை கலை மாறியே
கனிவாய்த் தினம் தொழுக
மிதமாக உன் மதம் மீறியே
மிளிரும் மதி யமுதம்
அதமாம் பல அஞ்ஞானமும்
அகன்றே உயர் திருவாம். (42)

வெண்பா

திருகமழும் தீன்மார்க்க திவ்யகுரு வேந்த
னிருகமல மலர்த்தா ளிறைஞ்ச—அருள்சேர்
அகந் தெளியும் அகமுகந் தெளியும்
சக மயம் தெளியுந் தான். (43)

தானுன நானுன தற்பரமே தாயான
கோனுன என்குலக் குருவான—வானாளும்
வல்லா னவன் புகழை வாயோ புகழ்முடிக்கும்
கல்லா லடி யமர்ந்த காட்சி. (44)

கல்லாலடி யமர்ந்து கலாமறைக் குமொரு
சொல்லாற் பொருள மைத்ததுய்யோனே—வல்லாநீ
எல்லாமா யல்லவுமா யென்னிலிருந்த உனை
யல்லாமல் வேறே அது. (45)

வேறு மனமது வேறுண்டு கண்டீர்
கூறு மதிதரக் குதிகொள்ளும்—நேராம்
வாலறிவன் நற்றுள் வணங்கி முடியேற்பக்
காலுயிர்க் கலிமாவைக் காண். (46)

கலிமாப் பொருளைக் கண்டுமனந்தேறி
நலியா துரைத்த நாயகமே—ஒலிமார்
"அலிப் லாம் மீமை" அகத்திலறிந்திருக்கச்
சலியா தருள் பெருகத் தா. (47)

சலியா வரமொன்று தந்தே எனது புகழ்
அழியாதிருக்க அருள்புரிந்தீர்—கலிதீர
வழுத்தும் பொருளதனை வரிந்தீர் உடலதனில்
எழுத்தாக நின்ற ஏடு. (48)

ஏட்டோலை கண்டெழுத்தாணி யால் வரிப்
பாட்டாலே ஞானம் பலிக்குமோ—தேட்டாளா
தேடு குருவருளைத் தேடா துனக்களிக்க
ஏடு சுமந்த நாளென். (49)

எண்ணாத எண்ணமெலாம் எண்ணி எண்ணியே மனது
புண்ணாகக் கண்டதல்லாற் புகலுண்டோ—கண்ணே கேள்
உன்னிலுறு நாதனருளு கந்து மனங்கூடி
விண்ணும் மண்ணும் வினவா வீணர்க்கே. (50)

வீணர் விழிகுருடர் விழியேற்காச் செவியர்
ஊணர் வாய்மொழியா ஊமையர்—ஞானமொழி
சேரா ரவரென்று செப்பு மறைமொழியைக்
கூருது காட்டுமே குன். (51)

குன்னென்றுரைத்த குறியுருக் குறும்பருக்கு
என்னென்றியம்புவது என்கோவே—பெண்ணேகேள்
விண்ணதிலும் மண்ணதிலும் விலைமதியா மாணிக்கக்
கண்ணதிலே கருத்தாய்க் கனி. (52)

கண்ணும் கண்ணின் கருத்தாம் கண்குளிரு
விண்ணும் விண்ணின் விளைவாம்—விண்ணோர்
வானில் வரு வாணியென வாழ்த்தியதவ்வாறிருக்கப்
பேணியதைப் பேறு பெறப் பேண். (53)

பேறும் பெருநிதியும் பிறவாதிருக்க நன்மெய்க்
கூறும் குறுநகையும் கொடுத்து—சீரடியில்
கதிரவனும் முழுமதியும் கணக்காய்ப் பணியாற்ற
பதிதந்தான் என்றலையே பார். (54)

தலையில் முண்டாசு தடிதன்கையில் ஜெபமாலை
மலையேறி வந்தாடை மண்புழுதி—விலையில் வாய்ப்
பேச்சாலே பெரியோனுய்ப் பேசுவது வாய்ஞானம்
ஆச் சென்ருல் ஆமோ அது. (55)

அது இதுவா மென்றஃறிணையிற் றனியோன்
துதி இதுவென்றுரைக்கும் துன்மதி—மதுவிதென
கஞ்சாவும் கள்ளரக்கும் கணக்கிலா தருந்திடினும்
அஞ்சுவீர் பெண்ணெனன்பான் அலி. (56)

பெண்ணையும் மண்ணையும் பேர்பெறு பொருளையும்
நண்ணு நடத்தையர்க்கே நவிலுவாய்—வன்னி
சுடுமாம் அதுவே சுடர்தருமாம்
விடுவென விடுவரோ வீணர். (57)

விடுவன விடுத்து வெற்றிதரும் வழியைத்
தடுப்பன தடுத்து சற்குருவடி—அடுக்கஅவர்
காட்டும் கருநிலையைக் கள்ளமிலா ஞானமதிற்
பூட்டும் காடேகாப்புத்தி. (58)

காடலைந்து ஞானம் கற்ருேமெனப் பேசி
வீடடையா வீணர் வீணரே—காடலைந்த
கடுவாயும் புள்ளினமும் கண்ட பலனேது.
சுடுவாய் அவர்முகத்தே சுடு. (59)

சுடுவீர் வங்கத்தைத்துருசுச் சுண்ணமதால்
இடுவீர் தங்கத்தை இடைக்கிடை—மிடிதீரப்
பொன்னு யமையுமெனும் பொய்வேடப் புழுக்கையர்கள்
அன்னமென்றேங்கியலைவர் (60)

அன்னமருந்தோமென்றகிலப் பறைசாற்றி
உண்ணுவது பழம் பாலுறட்டி—நன்ருக்கேள்
அகிலப்பிரபஞ்ச ராசைகளை ஈடுசெய்ய
மகிமை யிழந்தோர் வாய் மண். (61)

மண்ணிலுற்பவிக்கும் மரக்கிழங் கிலைதளிர்கள்
உண்ணும் பரிச்சியத்தாலுருசியுடன்—அன்னமதை
நண்ணேம் நாம் என்றுலகில் நவிலுங்கால் நடையினங்கள்
உண்ணு விரதமிதாம் ஓர். (62)

உண்ணுவிரதம் உண்பதுவோ ரொட்டிபால்
எண்ணிலாப் பழ மேப்பமிட்டு—அன்னமிகழ்
சூனியரை ஞானி யெனில் சொல்வேனெரு வார்த்தை
கானில் அரவமென்ன காண். (63)

N57



காணும் மூச்சடக்கக் கண்ணிருட்டிக் காதடைத்துத்
தோணும் சாண் எழும்பிய தோற்றமென—வீணரவர்
கூற்றுக்கியைந்த பலன் கொடுவாயுமூலவினை
சாற்றும் பழமறையே தான். (64)

பழங்கந்தை பலசேட்டை பல்லிளித்துப் பவனிவரப்
புலங்கடைப் புளிப்புணவு புசித்துண்ண—வழவழென
வடியுமெச்சில் வகைதெரியான் வள்ளலென வோர்ந்து
அடிபணியு மந்தகனும் அசடு. (65)

அடியே பணிரெண்டாறுறு நான்கதுவும்
முடியா யமைந்த முழுமதி—நடுநிலையே
வன்னியதும் இருநான்காய் வழுத்தும் பொருளதனைத்
தன் தலையிற்றந் தானென்தலை (66)

தன்னுனைத் தன்னிலுறு கண்ணுனை
மன்னர் கோனாய்த் திகழுவல்லோனைச்—சொன்ன
நிமலனிரு கமல மலரடி பணியச்
சகலதுயர் வினையகலத் தான் (67)

சகலகலா வல்லித்தாயே! என் வாக்கு
செகமெலா மோங்கு செல்வாக்காய்—அகமிளிரப்
பொன்வாக்குத் தந்த பொன்னடியை என்றலையில்
என்னாளும் காசினியில் ஏற்றேன். (68)

காசினியிற் காரிகையர் காவலனின் காட்சிபெறல்
ஏசிதமாம் ஏசரவு ஏகமாய்—ஏசிவரச்
சதுர்மறையின் சதுர்பெருகு சகலகுண சம்பத்து
இது இவர்க் கென்றியம் பியதை இசை. (69)

விருத்தம்

இசைத்திடும் இறைவனவன் இயம்பிய இதமொழியில்
இழுக்கு மிழிவு மில்லையென்
நிஸ்திரிகட்கே இரங்கி ஏவல் விலக்கலில்லை
இருநிலம் பெருகுமக்களைத்

TAMIL NADU ARCHIVES LIBRARY
111460

திசைகளில் பிரசவித்துத் திரியுமோரியந் திரமாய்த்
திருமணம் புரிந்த கணவன்
இசைத்த மொழி கேட்பதல்லால் இறைவணக்க
மென்பதில்லை என்றுரைத்த வேதமெதுகாண். (70)

வேதமதில் நாதனவன் மேதினியிலாடவரை
வேதமறை வாய்மை கூடியே
நீதமுடன் பெண்டு பிள்ளை நீ ணிலத்தின் சுற்றமெலாம்
நீதியோடு நேர்மை காட்டென்ற
போதமொழி நீயுணர்ந்து போற்றிடாமற் பொன்றுவதால்
போற்றிடு பெண் ஏழை மக்களைப்
பாதகக் கொடுமை கொடு பேதமாய் நினைத்தகெடு
பாதகர் படு பாவி மக்களே. (71)

மக்களுக்கிறை வேதத்தில் வமாஹலக்துல் ஜின்னவென்றும்
வல்இன்ஸி இல்லாலி யஃபுதூன்
திக்குமனு ஜின்கள் குலம் ஹக்கை யறிந்திறைஞ்சவன்றித்
திசையிற் படைத்த தில்லையால்
எக்குலத்தும் ஆண்கள் பெண் ணென்றிறை பிரித்துக்
எவரும் அறிதல் கடனும் [கூறவில்லை
ஹக்கையறி தன்னிலென்று மக்கநபி வாக்குணர்ந்து
ஹக்கைத் தெரிசித்தர் திடனே. (72)

விருத்தம்

சித்தர் முதல் முத்தர்களும் தேவாதேவர்
ஜெகம் புகழும் கௌது முதல் குத்பாம் ஜெம்மல்
கத்தனருள் ஆரிபீன் ரிஷிகள் மற்றும்
காலவரை கடந்து நின்ற முனிவர் யாரும்
பத்தியது சிறந் தாசான் பதமே பெற்றுப்
பேரின்ப வழியடைந்தார் ஆணும் பெண்ணும்
முத்தியது அடைந்தாலே ஆண் பெண்ணென்ற
முழுவிசனக் கிடங்கை விட்டும் மீள்வார்தாமே. (73)

சந்தவிருத்தம்

மீளவென்று மறைகள் மற்றும் வேணதெல்லாம் ஓதுவீர்
நாளுமிறையை நாடித்தொழுது நலன்பெறவே தெரிகிலீர்

பாழில் உழைத்துப் பலன்கள் கிட்டாப் பாவியான மாந்தரே
கோலன் இப்லீஸ் குதர்க்கம் விட்டு குருபதத்திற்
சேருமே. (74)

குருவிலாத வித்தை யொன்று குவலயத்திலுண்டுமோ
மருவிலாத இறையைக்காண மனம் துணியும்மட்டிகாள்
அரும் பெரியோன் திக்ரை நீங்கள் அறிந்திடா அக்காலையில்
பெருமைகண்ட பேரை இறைவன் பேணுமென்றுன்
வேதத்தில் (75)

வேதம் படித்தபோதே நீங்கள்வெற்றி கொண்ட மாந்தர்
போல்
போதங்கண்டு வாழும் மார்க்கம் புகுந்திடாது அற்பராய்
வாது சூது பேசிப் பேசி வாழு நாளைப் போக்கிடா
வேத நீதி கற்ற நேர்மை விளங்கு இறையைத்
தன்னிலே. (76)

தன்னிலிறையை அறியவென்று தாஹா நபி யோதினுர்
மன்னரப நப்ஸ ஹூவில் மானிடற்கே நேரதால்
உன்னிலுள்ள ரப்பின் ஜோதி உண்மையாய் விளங்கிடத்
தன்மை கண்ட ஷெய்கின்பாதம் சார்ந்து
காண்பதுண்மையே. (77)

உண்மை உளவு தந்தபோதே ஊனமற்ற காயமாம்
உண்மை உளவுகண்டு ரப்பை உகந்திடு தஜல்லியாம்
உண்மை உளவு பெற்றபோதே உறுதி ஈமானிஸ்லாமாம்
உண்மை உளவு காணுமாந்தர் உலுத்தர் காணும்
உண்மையில். (78)

உண்மையில் கலிமா ஐந்தும் உடலுக் காதி மூலமாம்
உண்மையில் கலிமா ஐந்தும் உகந்த ரூஹின் சிர்ரதாம்
உண்மையில் கலிமா ஐந்தும் உலகம் பல தோற்றமாம்
உண்மையில் கலிமா ஐந்தும் உண்மை ஷெய்கின்
பாதமே. (79)

எண்சீர் விருத்தம்

பாதமது திருப்பாதம் ஆதம் பாதம்
பாருலகை ஒரு காலால் மதித்தே மற்ற

பாதமதால் விண்ணளந்து முடியே கண்ட
பாரளந்த மூர்த்தி எங்கள் பெருமாள் பாதம்

காதலுடன் கண்டவர்க்குக் காட்சி தந்து
கதியளிக்கும் காராளன் காமில் பாதம்

போதமதால் கண்டவரே புண்யர்மற்ற
போஜனப் பிடாரிகட்குப் புலனுகாதே. (80)

புலனுகும் கண்ணுதலே புனிதவானே
பொற்பெழில் சீர்சீலமதி ஒழுக்கம் ஏற்கப்

பலகலையும் நிலவுலகின் பதங்கள் யாவும்
பரம் பொருளும் அவனருளும் பண்பிதாக

நலனுரையும் சிரவணத்தால் நாட்கள் தோறும்
நன்மொழிகள் நுண்மதியாம் நயங்கள் காட்டிக்

குல பெருமான் நலமொழிகள் கூறிநிற்கும்
குறிப் பறிந்து நடந்துவரக் குதிகொள் நப்ஸே. (81)

நபுஸே!

நீ நித்திரையில் கண்டு மறந்துவிட்ட கனவானது, சிற்சிலகால் மனத்தின் கண்ணே தோன்றித் தோன்றி மறைவதே போல் நித்திய, நிமல, நிராமய, நிரந்தரக் கடவுளான அல்லாஹு ஸுபு ஹானஹு வத்தலாவை உன் மனத்தோற்றத்தில் வரிக்கிறதும் பின்னர் அதை மனமழுப் பலுடன் ஊன்றிக் கவனியாது மறந்து வாளாயிருந்து விடு கிறதுமான ஒரு மனத்தோற்றம் உன் பிரபஞ்ச வாழ்க்கை யின் இடை இடையே ஜனிக்கிறதை, அதன் நிச்சய, காரணக் காரணுனுபவக் காரியம் யாதென விளங்கி அறிய முனையாதிருப்பதால் உனக்கு ஞாபகமூட்டத் துணிகிறேன். (81 அ)

நபுஸே!

தன் தலைவனிட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றும் சாதனங்களுக்கான சகல வசதிகளும்பெற்று சத்தியம் செய்து வீறிட் டெழுந்து விரைந்த ஒருவன் தலை தந்த சாதனச் செருக்கால் ஆணைமறந்து அவன் ஏவல்

மறந்து தனது இஷ்டப் பிரயோகம் செய்து வருங்கால் கேன்மை மிக்கோன் கேடெனக் கூறி கெடுமதி நீக்கல் போன்று, நீ அரனளித்த அமானிதமாம் அருஞ் செல்வத்தை அல்பவாழ்வாம் அகிலப் பிரபஞ்ச மயக்கத்தால் அதற்கு ஈடு செய்து, அரன், அரன் ஆக்ஞை, அரன்லிகா அனைத் தையும் அறவே மறந்து அதன் வினைப்பயன் அறியாது ஆனந்த மயக்கத்தில் ஆழ்ந்திருப்பதை அறிந்து உண்மை உணர்த்தி உளவு கூற முன்வந்துள்ளேன். (81 ஆ)

நபுஸே!

கப்பலோடிக் கரைகடந்து கதிபெறக்கருதி மைந்தன் கப்பலோடிக் கரைகடந்தும் கவனமின்றிக் கவர்ச்சியற்று கதியிதுவெனும் கருத்தறியாக் காலத்தில் தாதையவன் சுதனெனுஞ் சோகத்தால் சுகிர்தமெய்ச் சுருதியாம் லிகித வசனங் கொண்டு சுகானந்தச் சுகானுபவ சூட்சமதிதந்து துலக்கல் சான்ருய் ஆதியிலே அகண்டாகாரவெளியிலே அரூபாரூப ஓம் தத்சத் எனும் தாத்தாகிய பரப்ரம்ம பரஞ்சோதிச் சுடரொளியிலே விளையாநின்று அது இது வெனப் பகுக்கப்படா பரிபூரண நிலையில் தான் தாளுய் தனித்து நின்ற நீ, புதை பொருளாய் நின்ற கன்ஸுல் மஹ்பி எனும் பொக்கிஷ நிலைவந்து தத்துவ தத்து வாதீத கரணங்கள் சூழப் பெற்று அல்ஹம் தெனும் பஞ்சாக்ஷர ரூபியான மயில்வாகன கப்பலேறித் தாதுக்கடல், தாவரக் கடல், கிருமிக்கடல், ஊர்வனக்கடல், மச்சக்கடல், பக்ஷிக் கடல், மாவெனும் விலங்கினக்கடல்களான ஏழுசமுத்திரா சாகரங்களும் தாண்டி அப்பால் மன் பதையாம் மக்களெனும் மானிட சிகர மைதான உச்சவெளியிலே மண் வீதியிலே மஹா மஹா மஹோன்னத மாப்பெரும் மாட்சிமைதங்கிய மஹ்பூபிய்யத்தான ரஹ்மானிய்யத்தை யடைந்து தன்நிலை உணர்ந்து தவநெறிகண்டு அருட்பெருஞ்சோதி தனிமுதல் பொருளில்ரஹித்து இரண்டறக் கலக்க ஹேதுவான நிலை யில் ஹயாத்தென்னும் உயிர், இல்மென்னும் அறிவு, இராதத் தென்னும் நாட்டம், குதரத் தென்னும் தத்துவம், ஸம்உ என்னும் கேள்வி, பஸரென்னும் பார்வை, கலா மென்னும் உரையாடல்களாகிய அமானிதப்போதப்

பொருள்களை மாயை என்னும் மதி மயக்கத்தால் இச்சாதேவி வயப்பட்டு வீண் விரயம் செய்து தத்தளித்துத் தயங்கி நிற்கக் கண்ட தயாநிதியாகிய தனிமுதற் பெரியோன் தன் பிரதிநிதியாம் தீர்க்க தரிசன சித்துப் புருஷர்கள் வாயிலாக ஆரண மென்னும் வேதக்கட்டளைகளால் ஆக்ஞாபித்து அறிவுறுத்தும்படியான நீதவேதங்களைக் கவனியாதிருப்பதால் அதன் உண்மை உணர்ந்து உய்வகை தெரிவாயென உரைக்க முந்துகிறேன். (81 இ)

நபுஸே!

சுருதியுடன் கூடிய கண்டத்வனியானது சுரசாஹித்யங்கள் நிரம்பப்பெற்று அதிஉன்னத சங்கநாத ஒலியை நிகற்ப செவி புகுவோர் உள்ளம் தித்தித்துத்திருத் தாண்டவமாடும் தன்மையுடைத்தாயுள்ள இசைவாணியின் இயல்பைக் குறிக்குங்கால் இதே குயிலெனவும் குரலொலியைக் குயிலோசை யெனவும் கூறிக் குறிப்பிடுவோர் தன் கருத்தைச் சரியென்பதில் சந்தேகம் கிஞ்சிற்றும் தோன்ருதனவாய் உலகமக்கள் யாவரும் ஒருமித்துக் கூருநிற்கும் குயிற்பேடுவானது தன் பருவ பக்குவ காலம் வந்துற்றபோது படியுடைமக்கள் பலரும் பரிகசித்து, பதைத்து பறவை இனத்தில் பதிதை இதுவெனக் கருதும் கருநிறக் காகமானது கருமாறி முட்டையிட்டுக் காத்திருக்கும் நிலையில் வெளியேகும் சந்தர்ப்ப காலங்கண்டு விரைந்து சென்று தன் கருவாம் அண்டங்களை அதனுட்புகுத்தி மறைந்துவிட, மர்மம் விளங்கா மடக்காகம் தனதெனவும் பிறவெனவும் தணிக்கை தெறியாத்தனத்தால் யாவற்றும் தனதேயெனக் கருதி அடைகாத்துக் குஞ்சுபொறித்து அக்குஞ்சினங்கள் பறவையுறும் அந்நாள் வரை பாது காத்து உணவூட்டிப் பரிபாலித்துவர பறவை கூடும் பக்குவ காலங்கண்ட கோகிலமானது கூண்டிடை ஓடோடியும் வந்து குறிப்புணர்த்துங் குரலால் கூவி நிற்கக்கண்ட குயிற்குஞ்சானது காகமே தன் தாயெனக்கருதிக் களிப்புற்று கவலையற்றிருந்த பெருமாயை யென்னுமிருள் நீங்கி சுய உணர்வு பெற்று ஒரே குரலுடன் சுயம்விளங்கிப் பின் தொடர்ந்து பிரிந்தோடல் சான்ருய், ஓங்காரமென்

னும் ஈமான் மண்டபத்தில் உயிர் நிலையாம் ஹயாத்தின் அறுபத்து நான்காம் கலைபீடத்தமர்ந்து சுருதியென்னும் தம்பூராவில் கலிமா வெனும் வாசியால் அஜபா வெனும் சுதி மீட்டி அச்சுதி ஒலிக்கும் சுகானுபவ ரீங்காரத்வனியால் இன்னிசை தர, அதாவது 'இன்'எனும் இன்பந்தர 'இசை' யென்னும் இசைந்தாற்கு இசைதல் என்னும் இஷ்குமீறி இன்ப மையல் கொண்டு இன்னிசைக் கற்பம் உற்றிருக்கும் இசைநாத வள்ளல் ஐம்பூதம் ஐம்பொறி ஐயறிவால் அந்த காரமாயை வயப்பட்டு சுயம் உணராச் சோம்பேறி களாய்ச் சுழன்றுருண்டு 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' எனத் திரிந்திடையுங்கால் ஆரணம் என்னும் வேத வியாபக இன்னிசைத் தலைவன் அவன்பால் அணுகி ஆணவம் எனும் ஆசைவழிகாட்டி அதன்வழி யேகவிட்டு, வஞ்சகம் குபாடம் பொய் சூது முதலியனவே நிறைந் திருக்கும் அவன் கல்பாம் மனோநிலை இருப்பில் நின்றும் சிலவற்றை எடுத்தெறிந்து அதற்கீடாய் நன்நம்பிக்கை யெனும் இன்னிசைக் கருவூட்டி இன்பம் நல்கிச்செல்ல அதுவே கருவாயமைந்து உருவாய் வெளிப்போந்த இன் குழற் செல்வன் தன்னிலை தான்தெரியாத் தனத்தால் தவ றிடை சென்று சாதித்துத் திரியுமன்னுள் ஓர் சொல் வாக்கிய உத்தமநாத சங்கத்வனி ஒலிக்கக் கேட்டு பிற நிலை மாறிச் சுயநிலைவந்து சுயப்பிரகாச நித்தியானந்த பாதத்தடியில் பக்தனுகி நிற்கிறுன். மற்றையோன் மருண் டோடுகிறுன். இதையே நான்மறையோன் வேதவசனத் தில் (வலவ் அல்லமல்லா) 'ஆண்டவன் அவர்களை நலவு டையவர்களாகக் கண்டால் அவன் சொல்லைக் கேட்கக் கூடியவர்களாக ஆக்கிவிடுகிறுன். அவர்கள் கேட்கும் பொழுது அவர்களுடைய பிற்போக்கில் நின்றும் திரும்பி விடுகிறுர்கள்.' என்று சுட்டிக்காட்டும் சூட்சத்தை உணர்ந்து சுயம் தேடும் உண்மையாளர்களுக்குக் கருப் பொருளாம் கலிமாவின் காட்சி நிலையை இதனடியிற் தர இசைகிறேன். (81 ஈ)

நபுஸே!

கலிமாவெனும் பிரணவ முத்தாகிறது மஃரிபா வாகிய ஞானசமுத்திரத்தில் கல்பென்ற மனச்சுழலின்

மத்தியில் அறிவான் கெபிபீடத்தில் நிறைந்திருப்பதால் அதை அடைய விரும்புவோன் ஞான சமுத்திர முகத் துவாரக் கரையை அடைந்து மனச் சுழலின் வேகத்தைக் கண்டு மிரண்டு திகைத்துவிடாது தன் முயற்சியால் எவ் விதத்தும் அடைந்தே தீருவது என்ற துணிவால் நன்னம் பிக்கை யென்னும் வீர வைராக்கிய சித்தத்துடன் ஞான சமுத்திரத்தில் தாவி மூழ்கிவிடுகிறன். சுழலின் சுயமே தன்னைச்சார்ந்தோரைக் கரை சேர்ப்பதென்ற முடிவின்படி கலிமாவெனும் முத்து இரா நின்ற கெபிபீடத்தின் கரையில் ஒதுக்கிவிடவே வீரபுருஷன் காணுது க்ண்ட ஜெயம்ஜோதி சுயப்பிரகாச மகிமை கண்டு ஆனந்தங்கொண்டு தன் எண்ணக் கணிதத்தால் முன்கணித்த குறை மதிப்பு மீறி எத்தனையோ அளவிலா மடங்கு அதிகரிக்கச் சீரும், சிறப் பும், மாட்சியும், மகிமையும் உயர்வும் ஒப்பிலா உன்னதங் கண்டு ஆனந்தக் கூத்தாடி பக்திப்பரவசனுய் அவ்வமயம் கரையில் தயங்கித் தயங்கி நிற்கும் ஏனையோர்களை விளித்து –நீங்கள் பார்க்கவில்லையா அல்லாஹுத்தாலா உவமையால் கலிமாவைத் துய்தாக்கினதை– "அலம் தரகைப லரபல்லாஹு மதலன் கலிமத்தன்" என்ற திரு மறைக் கூற்றிற்கிணங்க 'ஓடிவாருங்கள் ஆணிமுத் தாகிறது குவியல் குவியலாகக் கணக்கில்லாமல் நிறைந்து கிடக்கிறது. நீங்களும் அதைப் பெற்றுக்கொள்ளல் எவ்வி தத்தும் தடைப்படாது கிஞ்சிற்றும் சிரமமில்லாது பெற்றுக் கொள்ளலாம் சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். என்று அனுதாபத்துடனும் அன்புடனும் புளகாங்கிதம் கொண்டு கூவி நிற்க, அதுகண்ட கோழைகளான பயப்பீதி பிடியுண்ட பாமரமக்கள் ஆஹா இவனுடைய கூப்பாடு எத்துணை தூரம் விசேடம் இவன் கெபியில்த் தாழ்ந்தது மல்லாது நம்மையும் வஞ்சிக்க எத்தனிக்கிறன். இவ்வஞ் சகன் மொழியைக் காதாலும் கேட்காது ஓடிவிடுங்கள் என்று கூக்குரலிடுபவர்கள் சிலர் இவ்வீரனுடைய கூப்பாட் டைக் கண்டு பரிகசிப்பவர் சிலர். இவன் செயலைப் பழிப் பாய்க்கண்டு கற்கரடு செத்தை குப்பைகளை வாரி இறைப் பவர் சிலர். நிஜமோ பொய்யோ என்று சந்தேகித்த பேர்வழிகள் ஆழமென்ன, அதன் நீளமென்ன, நிறமென்ன, வரமென்ன, என்ற விசாரணையாலேயே விசாரமடைந்

தோர் பலர். இவ்வாறு பலபல இழிகுணங்களால் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பாக்கிய பலனையுமிழந்து பரிதவிக்குமிடியர்களாய்த் திகைக்கிருர்கள். சிலரோவெனில் அவ்வீரனின் அமுத வாக்கியத்தை நம்பி அச்சுழலில்த் துணிந்து குதித்துத் துணைபெற்று அப்பெரும் பாக்கியத்தில் பங்கெடுத்துப் பயன் பெறுகிருர்கள். ஆகவே ஞானத்தை அடைய விரும்பும் நிலையும் விரும்பாநிலையும் அடையும் நிலையும் அடையாது தவிப்போர் நிலையும் ஊன்றிக் கவனிக்குமிடத்து ஞானபிதாவாம் தேசிக மாமுனி சிரேஷ்ட ஒளலியாவின் திருவிளையாடல் நுட்ப விசேடச் சிறப்பை உணர்த்துவதால் படிர், பகை, பயமுறுத்துதல் முதலான உலகினர்களின் பூசல் கூற்றுகளுக்குச் செவி சாயாதிருந்து "தன்னில்த் தலைவனறியும் தவமுறை" தெரியத்தக்கன கீழே தருகிறேன். (81 உ)

விருத்தம்

தருவதென்ன என்மகனே! கண்ணே சொல்வோம்
தயங்காதே படிமடையர் தடையே செய்வார்

திருவுருவும் கருநிலையும் திறந்தே காணத்
தீன் நபியின் கடாக்ஷவழி சிறந்தமார்க்கம்

பெருமை பெற மெய்வழியின் சாலைசென்று
பேசும் உயிர்கலி மாவைப் பெலமாய்த் தன்னில்

உருபொருளாய் ஆண்டவரும் உகந்து காட்ட
உன்பொருளின் வகை தெரிந்து உணர்வாய்
நெஞ்சே. (82)

நெஞ்சமெனும் உறுதியது நன்னம்பிக்கை
நெறிமுறையாய்க் கண்டவர்க்கே நவில்தலாகும்

அஞ்சாத நெஞ்சதனை அறிந்த பேர்கள்
அது இது வென்றலையார்கள் அறியாப் பேதைப்

பஞ்சைகளைப் போற்றிநின்று பல்லைக்காட்டார்
பதம் பெறவே வழிதிறந்த பாக்கியத்தார்

தஞ்சமெனக்குரு வடியிற் சார்ந்து மேலாம்
சரணகமலாலயத்தில்த் தரிப்பார் காணே. (83)

சரணகமலாலயமே பெருவிரல் பார்
சாம்பவியின் முத்திரையே நீலமேகம்

புருவநடு மைய்யமதே சிரோ ரத்னம்
பிடரிக்கண் திறந்தவர்க்குச் சோதியென்ற

விருக்ஷமது சிதரத்துல் முந்தஹா "ஓம்"
விநோதமிதே குண்டலி ஓங்காரபீடம்

பிரணவமாம் கலிமா மெய்ப் பொருளேதன்னைப்
பிண்டமதில் உற்பவிக்கும் கருவாம் இன்னும் (84)

கருப்பெறுமுன் நாமிருந்த கன்னிரூபம்
ஹகீகத் முகம்மதென்ற மயிலின் கோலம்

அறுபுரிநூல் ஆலிலையின் சயனமான
அன்றும் என்றும் வயதுபத்துக் கன்னிவாலை

சுருதியுடன் கல்புக்கண் சூக்மதேகம்
சுடர்தரவே அறிவிருக்கும் வசந்தமேடை

குருபெருமான் பள்ளிகொள்ளும் திருப்பாற்கடல்
குறிப்புடலில் காண்பதுவே புதுமைகண்டீர். (85)

புதுமை யென்ன புதுமையறி புதுமை நீயாம்
புர்க்கானில் இறைபுகலும் புகழைக் கேண்மோ

அதுபெரிய அஃஜப (க்) கல் அஃஜபுவ
அன்த்தல் அஃஜபுவதுவின் கருத்திற்காணும்

சதுர்முகத்தும் உன்புதுமை சகலவேத
சாய்ட்சய சின்மயத்தின் முத்திரையால்

சதுர்ப்புஜனும் ஐங்கரனும் அறுமுகனுமதை
சாற்றும் பல சமய மறைக் கூற்றிதாமே. (86)

சமயமறை வேதமெல்லாம் சமயங்கண்டு
சர்ச்சணரை யனுப்புவிக்கச் சமயமாச்சு

சமயநெறி மக்களிடை புகைந்தகாலைச்
சமயகுரு குறவர்களை அனுப்பிநாளும்

சமயமதின் கருப்பொருளைத் தழைத்துஓங்கச்
சமைத்தவனும் தருவனென மறைகள்கூறச்

சமயமெனும் தருணமதில் நழுகாயாவும்
சமமெனவே கண்டவர்கள் சமத்தர்தானே. (87)

சமத்துமிக வுள்ளவனே சகலமார்க்கம்
தனிவழியே பிரியாதே யாவும் ஒன்ரும்

சமத்துமிக உண்டானல் ஆசான்சொன்ன
சமிக்ஞை யெனும் கலிமாவைத் தன்னில் நோக்கச்

சமத்துடனே சகல கலை வேதமெல்லாம்
சரியாகத் தோன்றிவிடும் அதனில் நில்லு

சமத்துமிக்க கருத்ததனை வேறு காணில்
தான்பெற்ற பிரணவமும் ஈனமாச்சே. (88)

பிரணவத்தில் ஈனமதும் எங்கே யுண்டு
பேசியுனக் களிப்பவனின் பித்தாலாட்டம்

கருநிலையை அறியாத கயவர்தானும்
கண்டவர்போல் பிறர்க்களிக்க வேடந்தாங்கிக்

குருவடியில் தொண்டு செய்யக் குணஷ்டை பண்ணிக்
குருட்டுவழி சென்றவனும் மனம்போல் வந்து

தருவதென்ற கலிமாவால் தானும் கெட்டுத்
தன்வழியை யடுத்தவரைக் கெடுத்தார்மாடே. (89)

கெடுப்பதென்ன தன்னிலையை அறியாமாண்பர்
கெடுமதியால் ஞானிகட்கு வரம்புகூறித்

தொடுப்பார்கள் பலவகையால் வாக்குமீறித்
தோசியர்கள் மனம்போல வேடம் கேட்பார்

தடுத்தாலும் செம்மல்களோ தயவுகாட்டார்
சகமிரட்டும் மாய வலைக் கள்வர்தானும்

அடுத்தவரைக் கெடுத்திடவே ஜாலம்செய்து
அவரவர்க்கு ஏற்றபடி நடிப்பார்தாமே. (90)

நடிப்பார்கள் அவர்மனம்போல் குறிகள் சொல்லி
நல்லதுணி கட்டாது மானம்போகக்

குடிப்பார்கள் கள்ளரக்கு அபின் கஞ்சாவும்
குடியாதால் நிஷ்டை நிலைசேராதென்று

படிப்பார்கள் ஞானவழி நூல்கள்போலப்
படித்தவுடன் ஜதுபதுவும் வந்ததென்று

துடிப்பார்கள் தடிகொண்டும் சாட்டுவார்கள்
சுணைகெட்டோர் மதிமயங்கித் தொடர்வார்
காணே. (91)

தொடர்ந்தவர்க்கு வாசியென்று மூச்சைக்காட்டித்
தொப்புள்வழி நோக்கவெனக் குறிகள் காட்டி

தொடையதனை வளைத்ததன்மேற் கணுக்காலேற்றித்
தொட்டியர்கள் நாய்போல குந்திக்கொண்டு

அடைத்துவிடு மூச்சதுவும் மேலே யேற்ற
அண்டமெலாம் சுற்றிவரப் பலநாளானல்

சடைமுடியும் தாங்கி நிற்கச் சித்தனுவாய்
சதகோடி காலமது வாழ்வாய் என்பான். (92)

சதகோடிகாலமது வாழ்வாய் என்றும்
சதமில்லை இவ்வுலக வாழ்வேயென்றும்

அதமென்றும் இவ்வுலகம் அழியாதென்றும்
அருணகலை சந்திரகலை ஆட்சிசெய்யப்

பதமென்றும் புதமுலகில் ஏதுவென்றும்
பலவகைகள் முன்னுக்கும்பின் முறணுய்க்கூறும்

விதமதனை நம்பினவர் விமல நாதன்
மெல்லடியிற் சேர்வதுவும் எந்தநாளோ. (93)

எந்தநாளோ வெனவே மனங்கள் குன்றி
ஏங்கி நீ தவியாதே மூச்சாடாதே

சொந்தமனை பெண்டுபிள்ளை தாயார் தந்தை
சுற்றமெலாம் துறந்து மலைகாடேகாதே

பந்தமெனும் பிறப்பறுத்துப் பயமே நீங்கிப்
பாருலகோர் வாழ்க்கையதிற் கூடிவாழ்ந்து

சந்ததியும் நீங்களுமாய் தனியோன்லிகா
தனைத்தெறிந்து குருவருளால் மௌத்தை நாடு. (94)

வெண்பா

மௌத்தாம் தகுத்தை மதியுடனே யறிந்து
மௌத்தாகுமுன்னே மௌத்தாகி—மௌத்துவர
அன்னுஸு நியாமுன் இதாமாத்து இன்தபஹு
மன்னர் நபிமறையாம் மாண்பு. (95)

மாண்புடைய அண்ணல் மக்கள் பெண்டீர்சூழ
ஆண்டிருந்த வன்மை யறியாயோ—ஆண்மையுடன்
அருமை மௌத்தூகப்ல அந்த மூத் தென்றறிந்து
பெருமையாய் நடந்த பெற்றி. (96)

பெற்றிதரு மௌத்தைப் பிறிந்தெங்கே யோடுவது
சற்றும் தளராது தன்னை உணர்—வெற்றிதரும்
வஅல்லைஸலில் இன்ஸானி இல்லாமா ஷஆவனச்
சொல்லாமற் சொன்ன சூடு. (97)

சந்த விருத்தம்

சூடுகண்ட பூனையென்றும் சூட்டடுப்பணுகிடா
மாடு கன்று யாவுமிந்த உண்மை கண்டு மறுத்திடும்
காடுசென்று கதியடைந்த கதையிருந்தால் மறந்து உன்
வீடுகண்டு நாடுமௌத்தை விலகு உலகமாய்கையே. (98)

மாயை மாயை மாயை யென்று மதிமயங்கப்பேசுநீர்
மாயைவிட்டு விலகுமென்றால் மருண்டுருண்டு மலைக்கிறீர்
மாயை யென்னும் இருள்விலகும் மதியதின்சுடரதால்
மாயை இருளும் மதியின் சுடரை மறைப்பதெங்கு
மாண்பரே. (99)

மறைக்கவேறு பொருளதேது மதிமறைந்து இருளதாம்
உரைக்கக்கேளு வஷ்ஷம்ஸியின் உட்கருத்தின் சீரிதாம்
சிறக்கவதனைத் தெளிந்து பார்க்கத்திருவிளங்கும் பாதத்தில்
திரைக்குளிருக்கும் தீன்விளக்கைத்தீண்டு சுடரும்
தோணுதே. (100)

விருத்தம்

சுடரென்ற நூரொளியின் விபரம் சொல்லும்
சூராவே நூரென்று சுருதிகூறும்
கடமதனில் இறையொளியைக் கண்டுதேறும்
கருத்துரையே அல்லாஹு நூரேயதில்
திடம்பெறவே கிந்தீலின் வடிவம் காட்டித்
திரியுடனே எண்ணையதின் தெளிவும் காட்டி
இடம்பெறவே இகத்தோர்க்கு மதியும் பூட்டி
இயம்பும்வழி தருபவரே இன்ஸான் காமில். (101)

இன்ஸானைப் போன்ற தொரு இனியபொருள்
இகத்தில்நான் படைக்கவில்லை யென்று மேலோன்
வன்மையுடன் வத்தீனி மரத்தின் மீதும்
வஸைத்தூனி யென்ற தொரு தூரிஸீனை

குன்றதனைச் சத்தியமாய்க் குறித்துக் காட்டி
குணம்பெறவே அபயம் தரும் வீட்டைக்காட்டி
நன்மைபெரு மாண்பரையே இழித்துக் கூறி
நலம்பெறுவோ ரின்ஸானுய் நவின்ருன் காணே. (102)

நவின்ற மரம் குன்றுகளை ஆணைகூறி
நலம் பெறுவோர் ஒதுங்கும்தல வீடுகாட்டிப்
புவியிடத்தி லுள்ளபொருள் சிலதைக்காட்டி
பொற்பு மிகுசத்தியமாய்ப் புகன்றதேனே
தவிர்த்து நிற்க இறைவலியில் மிக்கதாமோ
தன்னிகரிலா மறையோன் சத்தியம் செய்து
அவம் விடவே சொன்னதென்ன ஆஹா விந்தை
அரும் பொருளின் கூற்றறிந்தோர் ஆரிபாமே. (103)

ஆரிபாம் அணுமுதலா யறிந்த ஞானி
அருமறையை அங்கமதி லறிந்த தாலே
ஆரிபா யணுவதனை யகண்டமாக்கி
அகண்ட மதிலுள்ளதெலாம் அணுவுளாக்கி
ஆரி பென்றறிந்தவர்க்கு அணுவைப்பூட்டி
அண்ட பிண்டம் வேதமதி கருவுங்காட்டி
ஆரிபென்றறியார்க்கு விரலைக்காட்டி
அகந்தை நசிந்துணரும் வரை அகல்வார்வேறே. (104)

உணரும்வகை உணர்த்துவது எளிதோ மைந்தா
உள்ளபல அண்டங்களை அணுவிலாக்கி
அணுவதனை மனுவதனில் அமைத்து நாயன்
அருள்புரிதலென்ற தொரு அருள்வாக்காக
நுணுக்கமுடன் கூறும் ஒரு மொழிக்குள் வைத்து
நுவலு மறைகலிமா வென்றதற்கு நாமம்
மனுக்குலத்தின் தந்தையவர் ஆதம் அன்று
மனம் தெளிந்த கலிமாவே உணர்த்துமார்க்கம். (105)

மார்க்க மறை கூறும் பத்த லக்கா ஆதம்
மிர்ரப்பிஹீ கலிமாத்தின் என்ற சொல்லை
தீர்க்கம் பெறத்திருவருளப் பெற்றபோது
திருந்திய பொன்மொழியாகும் ஓர் சொல்வாக்கே

கூர்க்க விதைத் தன்மகவாம் மேதைகண்டு
குணமனங்கள் இனமுதலாய்ப் பரிசோதித்து
ஆர்க்குமிவன் அண்ணல் என நாமம் சூட்ட
அடியடியாம் வாழையென ஆரிபாஞர். (106)

வாழையடி வாழையென வந்த செம்மல்
வழுத்திய சன்மார்க்கமதை இகழா நோக்கும்
கோழைமனம் குணங்குறிக்கும் அப்பால் நின்ற
குர்ஆனும் வேதநெறி குறித்தநாக்கும்
ஏழையென வந்த பொன்னடியார் மக்கள்
இயல்பெறவே உளமிளிறு இனியவாக்கும்
சாலையெனும் மெய்வழியை ஜெகத்தோர்க்கீயத்
தகுதியதும் பெற்றுலக ஆரிபாஞர். (107)

தகுதியுடனல்வாக்கு நீக்குப் போக்கு
ஜனசமுக மகிழ்பெருகு சாந்தநோக்கு
மிகுவினயச் செல்வாக்கு மிக்கோர் கேட்கும்
விகுவான கேள்வியதின் சங்கை நீக்கு
அகம்புறமும் ஒன்றெனவே அண்டினேர்க்கு
அறிவுறுத்தும் செயலதுவே போது போக்கு
செகமிடிந்து வீழ்ந்திடினும் அசையா ஊக்கு
ஜெயமுதலாய்ப் பெற்றுலக ஆரிபாஞர். (108)

ஜெயமுடைய மேதையற்குப் பொறுப்புயானே
செயல்பலவும் என் செயலாம் வலியாய்நிற்க
அயனவன் அல்லாஹுவலி யுல்லதீன
ஆமனூ யுஹ்ரிஜ்கும் என்றவாக்யம்
நயம்பெருகு பிரகாச வீட்டிற் சேர்த்து
நல்லிருளின் பயம்விலகச் செய்வோமென்று
இயம்பு மதிகுர்ஆனின் இனிய கூற்றவ்
வியல்பிதுவே கண்டவரைக் கண்டுபோற்றே. (109)

அறுசீர் விருத்தம்

கண்டவரடியைக் கண்டு
களிபெறென்றுரைத்தபோது
விண்டபல் சமயவேதம்
விளக்கிய தவங்களேனே

மண்டலம் மதித்து நாளும்
மறைநெறி இதுவே என்க
கண்ட நற்பயனைக் கூறக்
கருதிய மகனே சொல்வோம். (110)

சொல்வதென் மகனே வாத
வைத்திய சூத்ரம் பார்த்து
கல்லடம் மாந்திரீகம்
கணிதமும் பலவாய்த் தேறி
புள்ளியும் ரேகை நாடி
புதிரதின் பக்ஷிசாத்ரம்
எல்லையில் ஓதிஓர்ந்த
இயல்பதன் இனிமைபாரே. (111)

இயல்பதன் முறையே தேறி
இரசமுடன் லிங்கம் பூரம்
மயிலெனும் துரிசு கெந்தி
மனோசிலை கல்நார் சிங்கி
ஒயிலுடன் நிமிளை தாரம்
உலோகம் பல் வங்கம் தங்கம்
செயல்பல நீற்றும் மாற்றும்
செம்மையாய்த் தெளிந்தோர்தானே. (112)

செம்மையாம்லேஹியங்கள்
செயநீர் முப்பூ வினங்கள்
வன்மை சேர் பஸ்பம் சுண்ணம்
வகைபல செந்தூரம் இன்னும்
எண்ணையாம் தயிலம் மாத்திரை
எழிலுடன் குளிகையெல்லாம்
உண்மை சேர் முறை தப்பாது
உயர்ந்த நற்பாகம் செய்வார். (113)

உயர்ந்த பொற்பாகம் சொன்ன
உண்மையை நோக்கும் காலை
ஜெயமுள முனிவர் சித்தர்
ஜெகம்புகழ் லுக்மான் ஹக்கீம்

தயையதால் மான்பர் வாழத்
தந்ததோர் வரமீதன்றி
நயம்பல மந்த்ர பூஜை
நவின்றதும் பெரியோர் காணே. (114)

நவின்றதோர் முறையொன்ருலே
நாடிய பாகம் செய்யப்
புவியிடை மாந்தர் யாரும்
புத்திர பாக்யம் கிட்டா
தவிர்ப்பவர் சோகம் நீங்கத்
தந்திடு மிதனுலென்று
கவிகளில் படித்ததந்தக்
கைமுறை தெளிந்த தாமே. (115)

கைமுறை நிசமே யெனில்
கணவனை மறுத்தாற் குண்டோ
மெய் மறை மருந்தென் றெண்ணி
மெல்லியாள் கணவன் வாழ்க்கை
ஐயமென்றதனை நீக்கி
அடிமையைப் போக்கவென்று
தையலார் சொன்ன நீதி
சாத்திரம் இதுதான் என்னே, (116)

சாத்திரம் வேதம் எல்லாம்
சாற்றும் பல் யோகமார்க்கம்
ஆத்திரம் பொங்கிநின்ற
அணங்கென அலைந்திடாமல்
கோத்திர வழியாய் வந்த
குருகழல் போற்றி நீதான்
சூத்திரக் கருவும் பெற்றுச்
சுடர்மதி யோகம் பாரே. (117)

சுடர்மதி துலக்கும் வேந்தே
சுகிர்த மெய்த் துணையே தன்யன்
படிர்பகை கருதானுனேன்
பாத பங்கயமே பற்றி

துடர்ந்தவர்க் கறிவாய் நிற்கத்
துணிவிலாச் சோம்பர் வாழ்க்கை
இடர் படயேது வுண்டோ
எனும் மகன் சங்கைவெல்வோம். (118)

சந்தவிருத்தம்

சுடர்மதியாய்த் துலக்கம் தந்த
தூண்டுகுரு வேந்தே
சூட்சமறை நெறி யருளி
துணைபுரிந்தகோவே
படிர் பகைகள் யாயும் விட்டேன்
பதிதை குணம் விட்டேன்
பரமகுருவடி பணிய
பக்திமிகக் கொண்டேன். (119)

இடர்படவோ யானிருந்தேன்
இல்லை இல்லையானல்
இயம்பவொரு சங்கையுண்டு
எடுத்தெறிவீர் நாதா
கடவுடலில் ஜனித்தவர்கள்
கதிபெறவே குருவை
கருதாதார் வாழ்க்கையதின்
கணக்கெதுவோ மறையில். (120)

மறையவனும் மறையதனில்
மறைத் துரைத்தானில்லை
மதிதரவே இன்னஜஅல்
நஷ்ஷயாத்தின் வரைவில்
இறையவனும் கூறிவிட்டான்
இவற்குகுருஷைத்தான்
இழிபெறவே இபுலீஸன்
குலவழியிற் சேர்வார். (121)

நிறைபெறவே வழியுமில்லை
நிச்சயமேயில்லை

நிந்தனையும் குந்தகமும்
நினைவழிவும் பெற்று

திரையுலகின் இருட்சுழலில்
சிதறு மனம்போலே

திரிந்தலைவான் திரும்புமதி
ஜெயம்பெருதலெங்கே (122)

ஜெயம் பெறுதற்கிறைவன் மொழி
செம்மையுள்ளவஸிலா

தேடுவதும் தியாகமதும்
தீனவர்க்கே பர்லாம்

யாஅய்யு ஹல்லதீன
ஆமனுத்தகுல்லாஹ்

வபுத்த கூயி லைஹில்வஸீ
லத்தவஜாஹி தூபிம் (123)

நயமுடைய ஆயத் முற்றும்
நடுநிலையிற்பாரு

நல்கும் குரு ஒளிமலையை
நாடஎக்கீன் தங்கும்

பயம் விலகும் வழிதுலங்கும்
பதிநிலையே இலங்கும்

பக்தி பரவசமடைய
பாக்கியம் வெகுமதியே (124)

விருத்தம்

வெகுமதியே தருவதென்ன பெருவதென்ன
விவேகமதால் விரும்புவதேன் மக்கள் என்ன

வெகுமதியைத் தரும் கனவான் யார் யார் என்ன
விருப்பமென்ன வெறுப்புமென்ன விதந்தா னென்ன

வெகுமதியாய் ஓங்குபொருள் எதுவோ என்ன
வெற்றிதர நமக்கதுவும் எழிலோ என்ன

வெகுமதி யென்றழி பொருளைப் பெற்ருரென்றும்
வீண்படவோ எனக்கருதி உரைப்போம் கேளு (125)

கருதியுரை கேள்மகனே கவனம் கவனம்
கவனமிலாச் சோம்பரகக் கபோதிவாழ்க்கை

உறுதியடா வெகுமதியே உடையோன் மேனுள்
உவந்தளித்த சீதனமே வானோர் போற்ற

வறுதியதால் வானேழும் நிமிர்ந்து ஓங்க
வலம் பெறவே மண்ஏழும் விழுதாய் நீன்டு

சுருதி பலகாய்கனிகள் சுடராய்த் தோன்ற
தொன்புவியிலின் பமலி கலிமாவாச்சே (126)

தொன்புவியி லின்பமறை மதலன் கலிமத்தன்
தொய்யிபத்தன் கஸஜரத்தன் என்றே கூவிப்

பண்புகளை விரித்துமறை பார்த்தே தேர்வாய்
பாலகனே நீயுலகிற் ஜனன காலம்

கன்மவலி வெவ்வினைகள் கருத்தை மாற்ற
கதறியங் கழுதிருந்தாய் கவனம் நீங்கி

மங்கிய உன் ஸ்ரீ தனமே அமானிதமாய்
மதிபெருகத் தருவேனது வெகுமதியாம் (127)

மதிபெருகத் தரும் தனவான் யாரே என்று
மறையுரைக்கும் யாபனிய ஆதம்இம்மா

எஃத்தி யன்னக்கும் ருஸூலும் மின்க்கும் என்ற
இயல்படைத் தோருன் குலத்தினிடையே தோன்றிப்

பதிநிதியந் தரவருவர் பணிந்தே போற்றப்
பதம்பெருவாய் அவம் விலக அச்சம் வேரே

நிதி இதுவே பெற்றவர்க்கு துக்கம் ஏது
நியதியிது உனக்குரைத்தேன் பண்டைத்தேரே (128)

எழுசீர் விருத்தம்

பண்டை நான்மறையைப் பதமுடன்சுறுக்கி
பக்குவ நெறிபுக்கு மடியார்

உண்டமுதூறி உலகெதிர் சிதற
உதவிய எழில்மதி ஜீவ

பண்டித எங்கள் பரமசர்க்குருவே
பையலுக் குணர்த்திடு முணவை

உண்டிடு விளக்கம் உயர்சுவையறிய
ஓதெனும் மகன்தனக் குரைப்போம் (129)

ஓதுவோ மகனே உத்தமநெறியோய்
உடலினை உய்விக்கும் உணவை

காதலாய் ஐந்து கரம்கொண்டு விரும்பி
கனிவுடன் அருந்துதல் கடனே

ஏதுவாய்ப் பரிச உணர்வெனுங் கரமும்
இன்சுவை மதித்திடு நாவும்

கோதிலா அழகைக் குவித்திடு கண்கள்
கோணமும் நுகர்ந்திடச் செவியே. (130)

செவியதின் நாதம் ஐந்ததும் பொருந்தி
திருப்தியாய் மனந்தனக் களிக்க

சுவையுடனழகும் சுகந்தமென்நாதம்
சூழ்ந்திடல் உத்தம உணவாம்

இவைமுறை ஐந்தில் இரண்டது குறைதல்
இயல்நடு மத்திப உணவாம்

நவையது மூன்று குறைந்திடில் அதமம்
நான்கது குன்றிடில் மருந்தே. (131)

மருந்துடன் ஐந்தும் வெறுத்திடல் விடமாம்
மனமுடல் உயிர்தனக் கழிவென்

றறிந்துடல் தனைக்க அமுதிதுவாகும்
ஐங்கரன் செயலிது கண்டு

குருவடி நிழலை யடைந்த வரிகத்தில்
குறிப்பு நற்குண நலம் தேர்ந்து

சிறப்பதைப் பற்றி செகந்தனில் வாழச்
செப்பின னிதுமுறை எளிதே. (132)

செப்பியதலையேர் மகிபர்கள் கோவே
ஜெகதலம் சிறக்க நல்லுணவை

ஒப்பிய புகழாய் உணர்ந்தனன் மேலும்
உணவென்ப தாகாரம் தானே

இப்புவியோர்கள் எங்கணும் இதுவே
இயல் பெனக் கருதிடல் வழக்கால்

தப்பிய கருத்தோ சரி இது முறையோ
சாற்றிட வேண்டினேன் சரணே. (133)

சந்த விருத்தம்

சரணே எனும் மகனே நலச்
சான்றோர் குலச் சுதனே
திறனே வினு மறந்தாரிவண்
ஜெகத்தோரிது தெளிவாய்
நரனே உடல் வளர்வா ரென
நயமாம் பல உணவால்
பரனே விதித் தளித்தானதின்
பயனே ஜடம் விளைவாம். (134)

விளைவாம் உயிர் எழில் மீறிட
விண்ணோர் பதி உயர்வார்
கலைமேலிது உயிரோம்பிடும்
கணக்கே செவிமடுப்பாய்
விலைமீறிய உயிராற தின்
விருந்தே யாகாரம்
நிலை மேவிட உயிரோங்க நீ
நிகழ்த்தும் பரிசுரைப்போம். (135)

பரிசோடறு சுவை யாறதும்
பதிசேர் பண்படைவால்
விரிந்தோங்கியே உயிர் நாடியும்
விளைவாம் அதின் துணிபால்
அருஷேரிடும் வலுமீறிட
அதனோ டெழும் மனவீர்
குறி தாழ்ந்திடும் பொறி ஓய்ந்திடும்
குணநேர்மிக எளிதே. (136)

எளிதானதோர் வழி வாழ்வதன்
ஏழ்மை நிலையதனை
நலியா மனம் சளையாமலே
நாடும் பலன் மதியின்
வலுவேறிட ஒலியானவர்
வதிந்தா ரதன் எளிமை
அலை மீறிட அறிவாகரம்
அருந்தும் புலன் எளிதாய். (137)

விருத்தம்

அருந்து மனம் புலன் வழியே அறிவா காரம்
அருவ உணர் ரூப ரஸ கந்தநாதம்

பொருந்த அதன் எழில்படியும் நுட்பம் தேரும்
புதிரகலும் மதிதிரளும் போதம் மீறிச்

சிறந்து மனம் பல கோடி அண்டம் தாண்டி
சிறுநொடிக்குட் பதி யேறி உயிரோடொக்கும்

திறள் பெருக மனம் எளிதே அன்பாம் கண்ணே
தெளி வுணவு ஆகாரம் அறிவாகாரம் (138)

அறிவாகும் யாஅய்யு ஹல்லதீன
ஆமனு குலூவஷ்ர பூமின்

திருவாகும் அறிவா காரத் தெளிவாகும்
தெளிமனது ஒளியாகி தீன் தீன் என்று

உருவாகும் உஜூது நாட வெளியாகும்
உடல் உயிர் தன் ஆத்மபதி அருஷேறி

உறவாகும் அகமிய மெய் யுணவாகும்
உளவாகும் வேதநெறி உணர் நீ நெஞ்சே! (139)

வேத முதல் யிதிகாஸ புராண சூத்ரம்
வெகுகோடி வாக்கியங்கள் விளங்கித் தேர்ந்து

வேதியனே யென்குருவே விமலநாதா
வெகுவான சங்கை யொன்று விளங்கா நின்றேன்

நாத மணிகருவேரு திருந்த அணு
நசிந்து வெளியேகிய தின் நிலை தானேது

போதநிலைபுக்கு மோதான் புகுதாவீண் புலருமோ சொல்
புண்ணியனே நின்னடியேன் புரியும்வாரே. (140)

சந்த விருத்தம்

அணுவே யணுவாகி அகண்டமாகி
அணுவா யடங்கிய அணுவானது

மனுவிலணுவாகி மகிதலத்தில்
மருளு மிருபார்வை மாடமேறி

கணுவின் தணுவாலே கலங்குநேரம்
கைகொண்டிழுத்திட ஆசைவெள்ளம்

துணையாய் நெருப்பு நீர்காற்று மண்ணும்
துலங்கக் கருவூர் வந்துற்றதாமே. (141)

துலங்க வந்திடும் கருவானது
துருசு கண்டுமே சோம்பிவிழ

சலத்தின் ரூபம்போல் மண்ணிற் பாய்ந்து
தயங்கித் தயங்கியே பலநாள்மட்டும்

நிலத்தில்ச் சுற்றியே புற்பூண்டுகள்
நிலைக்க உணவாகிச் சுவையுமாகி

பிழைக்க உண்டவர்க்கிரத்தமாகி
பிந்து நிலைவந்து நாதமாமே. (142)

விருத்தம்

கலைபல வேதக் கனகநந்நிதியே
கற்பகத் தருமலரமுதே

தலை யெனதுயிரின் தவமணிச்சுடரே
தமியனையாள் குருபரனே

பிழைவழியணுகா நல்வழி புகுவ
பெருவழி கூடிய மாண்பர்

நிலைபெருநன்மை நிகழ்த்திடுதீமை
நிமலநன்னெறி வழியோனே. (143)

அறுசீர் விருத்தம்

நிமலனென்றிருகை கூப்பி
நின்ற யென் மகனே சுத்த

விமலனும் ஞானநாத
வித்த கன்னிருப்புக் கூடி

கமலமாம் ஞானஜோதி
கலந்ததில் ரகிக்க மேலாம்

சமவெளிப்பாட்டை கூடச்
சான்றதின் விபரம் கேளு. (144)

சான்றதாம் ராஜபாட்டை
தனிவழியோடு நாளில்

ஏன்றிடா மனம் தயங்கி
இளைப்புற நினைப்பார்க் கென்று

தோன்றிடு நன்மை தீமை
தோகுத்தனர் யிருமருங்காய்

ஆன்றவர் மறையைக் காட்டி
யமர்வதின் முறையே சொல்வோம். (145)

அமர்ந்திடு சோம்பர் முற்றும்
அயர்ந்ததில் தரித்ததாலே

சமத் தரில் சிலரைக் கண்டு
தன்நிலை மறைப்பின் வேண்டி

சமருடன் தடையே செய்தல்
தனிமறைக் கூற்றே யென்று

திமிருடன் சான்று காட்டி
தீங்கதில் மலிந்தார் தானே. (146)

தீங்கதாம் முட்புதரின்
தீ வழி சாடினும்

பாங்கதாம் சோலை நாடிப்
பணித்த திற்றூங்கினும்

யேங்கியே சுழன்றுருண்டு
யேகுதல் தடைப்பட்டாலும்

ஆங்கவர் அடையும் பேற்றை
யகன்றதில் சரிதானென்றே. (147)

—✶—

# பாரூக் ஈமான்

### காப்பு

தங்குபுகழ் எங்களிறை சங்கைபெறுநயினுர்
திங்கள் நபி மஹ்மூதர் சிங்கஉமரென்றே
பங்கமுல கெங்குமிருள் பதறிவிண்டோடக்
கங்குகரையற்ற உரை கலிமா மெய்க் காப்பாம்.

### நூல்

### ப:ஃறெடை வெண்பா

சுத்த சன்மார்க்கச் சுகவாரியின் பொருளை
நித்தனித்தம் புகழுநித்தியனை—பத்தியுடன்

பணிந்தேற்றுவான் கருணைப்பய காம்ப இரசூல்
நனியோங்கு நண்பர் நால்வரிலே—துணிபுடைய

உமருபாரூக்கு வந்த கலிமாவதனுல்
கமழுமிஸ்லாத்தின் கண்ணடைந்து—சமம்படைத்த

காரணமாம் பூர்வமதைக் காட்டுகிறேன் பாவதனுல்
நேரடைய வேண்டி நிற்பாற்குப்—பாரிகழும்

தூர்த்தனபுஜஹ்ல் துவ்வாநெறி யரங்கம்
பார்த்தொருநாட் பகருவிளி—தேர்ச்சியுடன்

தாதையோர் ஏற்றவழி தானேற் காமுஹம்மதவர்
பேதையெனப் பிதற்றிப் பின்னுமுயர்—பாதையென

காசினியின் மாந்தர் கணக்கற்றவர் கூடி
பூசிதமாம்நபி பொற்பெனலால்—ஏசிதமாம்

வீரங்கள் பேசி வீண்போக்கா வல்லுநர்கள்
தீரங்கள் பேசித் திகழுவரேல்—பாரோங்க

மயக்கு முஹம்மதவர் மண்ணிற் படிந்தொழிய
பயக்குமவர் சிரம்பற்றிவரில்—தயக்கமிலாத்

தாவடமாம் பூடணங்கள் தான் தருவேனேரெனவே
போவது வுமிக்கணம் போகவென—ஏவல்தரச்

சீறிச் சினந்த சிங்கமதாய்ச் செல்வ உமர்
பாரித் தெழுந்தே பற்கடித்து—வீரியமாய்

கோழையனும் நீய ரங்கக் கொற்றவனபுல்ஹிகமே
வாளையுனக்கே வரித்திடுவேன்—காளையர்

சேனையெனக் கண்டு செய்வகை விளம்பத்
தானையோர் தகுதி தாளாதோ?—ஏனைவிதி

இயலாத மட்கடம் என்றனையோ? நீ தலைவ!
இயற்றலிதுமுறையோ? இயம்பு—வியப்பிதென

கடாவு மொழிகண்ட காவல் நடுங்கியான்
அடாது புகன்றிலை அண்ணலே—படாப்பழி

தீன்கதிரோ வானோங்கித் திகழொளியாய் ஜெகம்பரவ
ஏனென்றுகேட்ப திழுக்கலவே—தூண்டுதலால்

வீரவாளெடுத்து வீறிடமுஹம்மதவர்
சீராரும் சிரசைச் சிதைத்திடுதல்—நேரெனவே

அம்பலமா மிவ்வரங்க அதிபனுமே நீயாகும்
எம்மானை இது தருணம் ஏற்றருளும்—சிம்மமெனச்

செப்பு மொழியேற்ற தீரர் உமர் பாருக்
வெப்பமுடன் சீறி மெய்துடிக்கத்—தப்புவதோ

முஹம்மதவர் சிரந்தான் மும்மூர்த்தி வந்திடினும்
தகர்த்திடாதடக்கத் தரமுண்டோ — சகமிரட்டும்

சிரமே கவர்ந்து திரும்புவதலால் யான்
கரம்பிடித்த வாள் என்ன கற்புளதோ—முறன்படுமே

வருவேனிது தருணம் வழி விடுவீர் வல்லவர்காள்
தருவேன் சிரமெனத் தாவிவர—தெருவதனில்

முதுமை தவழ்ந்து முன்கூனிக் கோல்பிடித்துத்
ததும்பித் தள்ளாடி யொருதாதை வரச் — சதுர்பெறவே

ஏன்காணும் உமர்கத்தாப் எங்குற்றீர் வாளுடனே
தீங்கேதுமுண்டோ தேயமதில்—வாங்காணும்

ஓதுமெனக் கேட்டொலி யேற்று மர்வீரர்
யாதுவெனத் திரும்பி யாளியெனச்—சோதனையால்

காலமதின் நேர்மை கலியால் மறைந்ததனுல்
கோலமுஹம்மதவர் கொடுவஞ்சம்—ஞாலமதில்

மன்பதையாம் மக்கள் மனம் புரண்டு ஊடுருவித்
தன் தெய்வம் வேறெனச் சாற்றிவரத்—துன்மதியாம்

மாயமுஹம்மதிவண் மண்ணிற் படிந்தகலத்
தேயமது சிறந்தே சீர்பெருகும்—நேயமுடன்

சென்று சிரம் கவரச் செல்லுகிறேன் நன்றெனவே
என்றும் மக்களவ ரினிதுபெற—என்றதுமே

நீதத்துருவமது நீயெனவே நானிருக்கப்
பாதகத் துளுழலப் பதட்டமேன்—கோதகற்றல்

தான் திருந்தத் தன்மனை திருந்தத் தாயாதி
வானுலகும் திருத்த வயப்படும்—ஏன்தலைவ

கூடப் பிறந்ததொரு கோதைபாத்தவளின்
மூடக் குணமகற்ற முனைந்திலையே—நாடறிய

முஹம்மதவர் முன்மொழி யேற்பச் சதிபதிகள்
பகரு மிஸ்லாத்தைப் பற்றி நிற்க—விகசிதமாய்

நின்றுயே ஈன்றெடுத்தாள் நின்னூடேயே வளர்ந்தாள்
அன்றேயோ சென்றதையகற்ற—நன்றேயாம்

எனப்புகல முதியவரும் இளைஞ உமர்ச்சிங்கம்
சினமிளிரச் சீறிச் செந்தீப் பறக்க—கணப்பொழுதில்

தங்கை பாத்திமா அவளின் தலையுருளச் செய்ததனை
என் கைவாட்கே இரையிடுவேன்—பங்கமிலை

நன்றெனவேதான் திரும்பி நங்கையர் தம்வாயிலுற
அன்று நபிக்கிறை அருள் செய்த—வெண்றியுரை

முஸம்மிலெனும் பதிகம் முஹம்மதனுர் தமக்கிறங்க
விஷயமுணர்ந்ததொரு விபுணன்—வசதிபெற

யாழிசை யொப்பால் நவின்றுஉரை செய்து
ஆழிய கருத்துவந்திட அன்று—நூலியல் நுகர்ந்து

கபாடக் கதவுகளைக் கால் கொண்டே தானிடித்து
குபாடமது செய்யுங் குரவர்கள்—சபாஷ்டனே

திறவுங்கள் கதவென்னத் திகைத்தவளாய் பாத்திமா
கரமே நெறித்துக் கலங்கிமிகப்—பரபரப்பாய்

மறையே பயில்விக்கும் மகத்தவரை மறைத்ததன்பின்
முறையே வேதம் முகடுறவே—புரைதெரியாத்

தயங்குமத் தம்பதிகள் சட்டெனத் தாழ்திறந்து
பயத்துடன் நிற்கப் பார்த்த உமர்—வியர்த்தர்காள்

ஓதியதோர் வேதமதை யுரைத்திடுவீர் யாதெனவே
சூதியம்பா துரைப்பீர் துரிதமென—சோதிமறை

பாடத் துணிந்தோம் பரனடி யடைய நாம்
நாடத் தகாதோ நாயகனை—கேடகற்றி

நாடும் வரமளிக்க நாடோறும் போற்றிடுதல்
பாடும் பழக்கமெனப் பைங்கொடியாள்—சேடுஉமர்

மூத்தாள்பாதி முகநோக்கி முனைந்தவர்
ஆத்திரமொழியாலே அரற்றி—வாய்த்திறம்

வேதமதின் வாய்மை விளங்கிடா மண்டுகம்
ஏதும் புகலலாம் எளிதெனவே—ஓதவோ?

மாள மருந்துண்ணும் மட்டிகாள் மதிதருவேன்
வாழவென்ருல் வேதம் வரட்டும்—ஏளனமோ?

விழியாதீர் ஷஹீதவரே வீண்போக்கா வேதமதை
நலியா தளித்திட நலவதுவே—ஒளியாதீர்

என்று உமர்விளம்ப ஏந்திழையார் பாத்திமா
நன்று புகன்றீர் நற்கதியே—ஒன்றுவிதி

முழுக்காம் அழுக்ககற்றி முன்வரவே வேதமதை
இழுக்கில்லை ஈய இதுதருணம்—வழக்கிதுவே

என்றுமொழியேற்ற இளவல் உமர்கத்தாப்
கண்ணும் அழல் ஏரார் கனல் தெரிப்ப—துன்மதியே

கோளன் முஹம்மதுரை கொடுவஞ்சகப் பலனே
ஏளனமோ? இதனை ஏற்றுக்கொள்—வாளருகால்

தமக்கையர் சிரமதைத் தகர்த்திடுங்காலை
சமநிலை தவறித் தயங்கிட—அமளியாய்

இரத்தமது பொங்கி ஏங்கித் துடித்தவள்
சிரமது கபாலந் திறந்திட—பிரமித்தே

சிந்தை மிகக் கலங்கி செய்யும்வகை தெரியா
நொந்து மனம் வாடி நோக்கிய—பந்தஉமர்

சூரமெனும் வீரமதும் சூழ்ந்திருந்த கோரமதும்
காரணமிதுவாற் கழன்றிடவே—ஈரமுடன்

பேதைமதியின் பேச்சின் துடுக்கலவோ
வாதை அனுபவித்தே வருந்து—மேதையுடன்

வேதமதை ஈந்தால் வீண்படுமோ துச்சமுடன்
பேதமுனக்கேன் பேதமை—போதமுடன்

ஆரணத்தினேர்மை அறிந்துயான் மெய்விளங்கி
காரணத்தின் வாய்மை கழறுவேன்—வீரைவிடு

காரியமாய் வேதமதைக் காட்டிடவே நேர்பெருவீர்
மீறில் இடுக்கண் மீசுரமே—சீரிதென

இளவலுரைக்க ஏந்திழையார் பாத்திமா
மளமளெனக் கண்ணீர் மல்கிடவே—வெள வெளத்து

தன்கையாற் சிரமதைத் தாங்கிப்பிடித்தவள்
உன்கை வாளால் உயிர்விடுவேன்—என்புகன்ருய்

கண்டக் கசப்பதால் காமத்தின் நீரதாய்
உண்ட எச்சில் உமிழ்ந்ததாம்—பிண்டமிது

விண்டபடி நீ யேகி விரைவுடனே நீராடித்
தண்டலிலாது வரத் தயக்கமேன்—கண்டிப்பாம்

உள்ளபடி என்றதனை உமர்கத்தாப் செவிமடுத்து
தொல்லை இதுவென்னத் துயரமுடன்—எள்ளிநகை

கனைத்துச் செருமிக் கண் சிவக்கக் கருமமிது
அனைத்து முயிர்க்கு அனர்த்தமே—நினைத்தக்கால்

கொணர்வீர் நீரதனைக்குதர்க்கமேன் ஷகீதவரே
எனப்புகல நன்னீர் எதிர் வைக்க—கனப்பொழுதில்

(இ)ஸ்னனமது செய்ய இளங்கோ உமர்கத்தாப்
துஷ்மனிபுலீஸின் துடக்ககற்றி—பிஸ்மிலுடன்

வேதமிதோ வென்ன வேந்தர் கரத்தெடுத்து
போதம் பொருந்தியே புலம் விளங்கச்—சோதரியே

நாதனுரைத்த நன்மறையே—நான்புல்லன்
வேதம் விளங்கா விழலேன்—காதகனுன்

தீங்கு கோள் நிறைந்த தீநெறி மாந்தர்
பாங்குபோல் நடந்த பாவியேன்—ஏங்குகிறேன்

ஆஹா! இதுபுகழே ஆரணமா மகிமை
சாகானருளிய சத்தியமே—தாஹா நபி

இறைதூதர் ஆலநபி இரக்ஷண்யமது தேடக்
குறைமிகுந்த குறும்பனதால்—நிறையிதெனக்

கலங்கிப் பரிதவிக்கும் காளையர்தம் வதனம்
விளக்கமது நாட விமலை—துலக்கமுடன்

காமாதி லோபமும் காதகக் குபாடமும்
பூமான் நபிக்குப் புறமதுவால்—சீமானும்

நவமணி நாயகம் நயினார்முகம்மது
தவநிலையறியத் தரிபடும்—அவம் விடு

ஹப்பாபு ரலியவரும் கலக்கமாய்த் திரையிருக்கச்
செப்பா திருந்தோம் திகிலுடனே—இப்பொழுதே

அத்தன் நபி இரசூல் அவர்கள் திருப்பாதம்
சுத்தமுடன் பணியத் துரிதமாய்—எத்தனிப்போம்

நால்வர்களென்று மொழி நவிலல் கேட்டுமர் வீரர்
மாவிதுவென மகிழ்ச்சியுற—நூல்சகிதம்

சபாநிலைதேடிச் சதுரர் வழிநடக்க
அபாய இயல்பிதென அஞ்சிய நம்—ஹப்பாபவரும்

முருசலிரசூல் தமக்கு முன்கூட்டி எச்சரித்து
அருகிலழைத்து வர அனுமதித்து—தரும்பதிலை

ஏற்றுவரவென்று இளவல் தனக்குரைக்கச்
சாற்றிவர வென்னச் சம்மதமாய்—மார்க்கமதில்

மூவர்களும் காத்திருக்க முன்னேன் நபிசபையில்
தேவர்கள் புடைசூழ் தீன் நபி—காவலனின்

உண்மைமிக வுணர்த்தும் உபநிடதவன்மை
நன்மைபெற மகற்கு நவின்றிருக்க—துன்மதியால்

சித்தீகு ரலியவரும் சிறப்புடையஹம்ஸாவும்
பத்தியுடன் கலிமாப் பயின்ரேம்—நத்துதலாய்

உள்ளமிகக் கனிந்து உருகிமனம் நெகிழ்ந்து
கள்ளமிலா நற்கருத் தமைக்க—வள்ளல்பதம்

பணிந்தே சலாமுரைத்துப் பகருவர் ஹப்பாபுமர்
துணிந்த கரும மதைத் துலக்கவே—நனிசிறந்த

அஸ்ஹாபுமார்களில் அங்குற்ற யாவர்களும்
இஸ்லாத்தின் பகைவர் இங்குறவோ—துஷ்மனவர்

வேண்டாமெனுந் தொனியே விண்ணெழுந்து வான்பிளக்கத்
தூண்டாமணி விளக்காம் தூதுநபி—சாந்தமுடன்

வலிஇறைதீன் வழிபுக வழியுண்டு
கிலிநமக்கேன் கீர்த்தி உமர்—நளிபெறுவார்

மறைமொழியை மனமேற்ற மன்னருமருலகில்
நிறைமதி சிதறநிறையேது—இறைபோதும்

சமுகமழையுமெனச் சடுதியில் ஹம்ஸாவும்
குமுதம் பொருந்தியே குரிசிலடி—குமுறியவர்

கலிமாப் பொருளை உமர் கண்டால் உயிர்விடுப்பேன்
பழிகருத வாட்குப் பரிசிடுவேன்—ஒளிசிறக்க

வேணு கரத்தேந்தி வேந்தர் நபியருகில்
தாணுவென அவர் தாவி நிற்கப் பேணுதற்கு

உத்தரவுபெற்றேகி உமரை யழைத்துவர
பத்தி மிகத்ததும்பிப் பணிவுடனே—வித்தகனுர்

சுத்தத் திருவடியிற் ரெழுதுமவர் தெண்டனிட்டு
அத்தன் திருநபியே ஆட்கொள்ளும்—புத்தியிலா

மூர்க்க ருறவதனுல் முனிந்தேசிரம் துணிக்க
தீர்க்கமாய்த் துணிந்த தீபாவி—சேர்க்கையதே

திருவுருவாம் திருகமழும் திருநபியே யிச்சிறுவன்
பெரும்பிழையை க்ஷமித்தருள்—பேரரசே

குருவா முஹம்மதுவே குருமஃஷூக் நாயகமே
மருவில்லா மணிமஹ்மூதே—அருமறையின்

கருநிலையைக் காட்டிக் கலிமா நிலையின்
உருநிலையைக் காட்டு முத்தமரே—தறுகனெனை

ஆதரித்தே உயர் நெறியின் அறநிலையேற்கருளுமென.
கோதற்றுமர் வீரர் குழுறியழ—நாதன்நபி

மார்புறத் தழுவி மனங்கசிந் துருகத்தன்
ஆர்வமிகும் உமரையணைத்து—நேர்நிறையே

சிரமேற்குஞ் சீர்பொருளைச் சிரந்தாழ்த்தி யேற்பதலால்
கரம் தூக்குவோர் பணியக் கணக்கோ—திறங்காட்டி

சிரந்தாழ்த்தா தன்றிச் சினந்தவன் பலன்விட்டு
பரம்விட்டபடியென்ற பதிதன்—அறம்விட்டு

தெய்வமிருக்கத் தெய்வகுல மிருக்கத் தெய்வமின்றி
உய்யவகை யுணர்த்த உரியவரார்—தெய்வமிலார்

சேருங்கள் சீக்கிரம் சிரங்கொய்தே திரும்பிடுவோம்
வாருங்களிறை வரமிதென—ஓரங்கள்

கும்பல்மிகைக் கக் குணங்கன் தலையாட்ட
வம்புபுகல் வாயர்வசமாகி—செம்மல்மேற்

கோரம் மிகப்பேசி குதர்க்கம் பலபுரிய
ஈரமிகைத்த இருதயத்தோர்—காரணமென்

கருத்தறிவோ மென்னக் கருதியவர் புலன் விளங்க
மறுத்திடா உண்மையென மதித்து—குருமுகமாய்க்

கலிமாப் பொருளதனைக் கண்டு சிரமேற்கப்
பழித்துத் திரிந்த பாதகத்தோர்—விளிமிரள

மையின் வசியமதால் மக்கள் மனமிரள
ஐயோ! நாம் பார்ப்பதழகோ—நையுமெனக்

குடிலமறியாக் குக்கல் கூடிக் குரைப்பனபோல்
அடிபிடி யென்ன அணிவகுப்பர்—படிவழக்கே

நடந்தன விடுத்துநல நலன்பெருகும் இறைதீனின்
படர்தவிர்க்க இன்றுயான் பரிந்து—திடமுடைய

தீரரொருவரைத் தெளிந்தருள் ஹுதாவென்ன
வீரமிகுவரம் விரும்பிய—சாரமிதால்

வாருமென்றருகழைத்து வகைபல அறிவுரைக்கப்
பாரும் அரன் "லிக்கா" பண்பிதென—நூர்கலிமா

கண்டு உமர்வீரர் கழறினர் "அஷ்ஹது"
அன்லாயிலாஹ இல்லல்லாஹு—அன்னமுஹம்மதன்

உண்மையாமெய்யடிகள் உண்மையுணர்வோர்க்குத்
தன்மையாம் தீர்க்கத் தரிசியென—அன்பொழுக

இருதயத்தாள் திறந்தவுட்பேரொளி
கருவுள்ளே காட்டிய கண்மணியே—திருவுருவே

செகம்புரக்க மயிலுருவாய்ச் சிறந்த கன்சுல்மஃபியத்தாய்
அகம்புரம் ஜோதி அஹ்மதுவாய்—முஹம்மதுவாய்

நூராய் ஐனுய் நொக்த்தாய் அதுமருவி
ஆருய் மூன்ருய் ஐந்ததுவாய்—ஆருருய்

நாலாறிருபத்து நான்கதுவின் நவிலா இஸ்முல் அஃலமதாய்
காலாய் நூலாய் கற்பகமாய்—மேலான

தாஹாயாஸீன் தாயக நபியே
வாகாய் அடியேன் வகைபெறவே—சாகான்

சத்திய நபிமஹ்மூதைச் சத்துப் பொருளாய்த் தந்தருளி
கத்தன் பெருமை காட்டியதால்—இத்தலத்தில்

பெற்றேன் பேர்முழுதும் பெருமை மகிழ்வெய்தப்
பெற்றேன் பெரும் சுகிர்தப் பிரபை—பெற்றேனுன்

பெற்றபேர் உலகவர்க்கே பெருமையா யெடுத்தியம்பிப்
பெற்றவர்கள் உவகை பெற்றிருக்க—அற்றவர்கள்

அரியுருளவநெறி அலறிச்சிர சுருளச்
சரி சரி யெனுவரை சங்கரித்து—நெறிபரப்பத்

துணிந்தேன் இது ஆணைத் தூதரடித்துகள்
அணிந்தேன் சிரமென்ருர்ப் பரிக்க—நனிபெருக

கல்பின் திரையகற்றி, காட்சிமிகவளித்த
எல்லையிலாப்பரன் எழில்நபி—உள்ளமது

மகிழ்ந்தே துஆவிருக்க மன்றுளோருடன் தமக்கை
ஷஹீது அவர் சகிதம் சன்னிதிமுன்—மகிலானந்தக்

கண்ணீர் ததும்பக் கரமேந்தி ஆமீனென
பின்னும் உமர் வீரர் பெருமிதமாய்—அண்ணலென

சத்தியமாம் தீன்வணக்கம் சகமறியக் கஃபாவில்
இத்தருணம் செய்யவென்றே எல்லோரும்—எத்தனிப்போம்

வருமின்கள் முஃமினென வல்லஸ்ஹாபிகளும்
குருவாம் முஹம்மதுடன் கூடித்—தெருவழியாய்

உள்ளமகிழ்ந்து வழிநடந்து உயர்வாம் கஃபத்துல்லாவில்
வல்ல ரஹ்மானை வணங்கிவரப்—புல்லர்பலர்

சென்று அபுல்ஹிகமே செறுக்கருமரவரும்
இன்றே நமக்கு எதிர்முகமாய்—என்றும்பகை

முஹம்மதனுர் தீன்மருவி முன்னிலையாம் கஃபாவில்
சகலரும் வணங்க ஸகாபிகளும்—அகம் புகுந்தார்

சிரமே கவர் வதெனச் சீறிச் சினந்த உமர்
கரமே தாழ்த்தி நபிகைப் பிடித்தார்—திறமிதுவோ

வீராதி வீரரிவர் வெற்றிநமக்கென்றிருந்த
கூரானவேலும் குலைந்தனவே—பாரிகழ

என்றே புலம்புவதை எத்தனபுஜஹ்லீல்
நன்ருய் முஹம்மதின் தன் நயவசியம்—இன்றேல்

செங்கதிரோன் திசைமாறிச் செகமே புறண்டிடினும்
பங்கமடைய உமர் பதிதரல—துங்கமவர்

சென்றதையறவிட்டுச் செப்பும் குரைஷிகட்கு
என்றும் நாம் இதற்கு எதிரியதால்—குன்றலிலே

எனச்சாற்றி அபுஜஹிலும் எழுந்தான் அரங்கம்விட்டு
மனச்சாட்சி ஒப்பால் மன்னருமர்—இனம் போற்ற

முதியவர் மொழியை முறையெனப் பற்றிநன்
நிதியெனும் "கலிமா" நிலவியிப்பூ—கதியுறவே

நீனிலத்தில் தீன்மறை நிறப்பினுர் நிதிபெருக
மானிலத்தின் மக்கள் மதிபெருக—நானிதுகால்

அருந்தவநெறியை அடைந்திட்வே அன்று
பொருந்தியவாறு புகழதாய்ப்—பெருந்தவம்

பெற்றே கலீபாவாய்ப் பெருஞ் செங்கோலோச்சியே
கொற்றம் தங்கிய குறைஷிநபி—நற்ருள்

போற்றி வாழ்ந்தனர் போற்றி போற்றியே!
சாற்று மிதுவழி சார்ந்து போற்றி—ஏற்றுவாழ

விமலனருள் பெற்று வினயமிகு வெண்பாவாய்க்
கமழும்படி உரைத்த கவிதைஇது—நிமலனருள்

பற்றியே பாகவி–புகாரி பகருரை
வெற்றியே தரும் விவேகமிதால்—சூற்றிமிக

அலையாதுமர்சரிதம் அவனிதனில்ப் பரப்பி
கலையாய்ப் பயிலக் கத்தன் துணையே

★

# காமில் முத்து தாலாட்டு

### காப்பு

### விருத்தம்

அருவுறு கருவா யன்புறு மகவாய்
    ஆருயிர்க் கெழில்மிகு சிறப்பாம்

மருவுறு திருவாய் மதியுரு மேவி
    மனுக்குலத் துறையுற மேனாள்

கருபெருங் கலாப மயிலுரு வாகிக்
    ககனமற் றுலகுபல் கோடி

உருவுறு பொருளை உணருங் கண்மணியே!
    உண்மையாய்ப் போற்றும்நீ யாரோ?

### கண்ணிகள்

ஆரா ரோ ஆரா ரோ ஆரா ரோ ஆரா ரோ
ஆராரும் சீராராய் அமைந்தமுத்தே கண்வளராய்

அன்பாம் நிறைபெருக அஊது பில்லாஹி
மினஷ்ஷைத்தா னிர்ரஜீம் மிளிரு முத்தே கண்வளராய்

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம் எனப்பேசி
இஸ்முல் அஃலமதாய் எழுந்த முத்தே கண்வளராய்

ஆதிய னாதிமுதல் அஹதுஹது வாஹிதத்தாய்
ஜோதியருட் பொக்கிஷமாய் ஜொலிக்குமுத்தே கண்வளராய்

ஆதம்எழில்பெருக அவர்சிரசாம் நெற்றியதில்
போதம்தரும் சுடராய் பொருந்துமுத்தே கண்வளராய்

சிதரத்துல் முந்தஹாவில் சிறந்தபஞ்ச பட்சிஅலி
சித்தீக்உமருதுமான் செறிந்தமுத்தே கண்வளராய்

அண்ணால் குத்துப்தாரா அணிபதக்கம் டால்பெருக
மின்னல் ஒளி பாத்தின்முத்தாய் மிளிருமுத்தே கண்வளராய்

இன்பஒளி ஜோதிமின்ன இருகாதின் குண்டலமாம்
அன்புறு ஹஸன்ஹுஸனாய் அமைந்தமுத்தே கண்வளராய்

அருஷின் புலியாகி அலியார் நபிபெருமான்
திருவிரட் கணேயாழி தீண்டுமுத்தே கண்வளராய்

செல்வஜலால் சுடர்வருக சிறந்தஜமால் ஒளிதருக
கல்பும்கமால் களிபெருக காமில்முத்தே கண்வளராய்

தீனேர்தி ருக்கலிமா தெய்வாதி பொக்கிஷமாம்
வானேரி ரகசியமாய் வழங்குமுத்தே கண்வளராய்

வாலைமனேன்மணியாய் வளருமெந்தன் கண்மணியே
சோலைக்குயில்மயிலாய் ஜொலிக்கும்முத்தே கண்வளராய்

தாயார்கத்தீ ஜத்துதான் தகப்பனுர் அஹ்மதுவாம்
சேயாய் இருவருக்கும் செனித்தமுத்தே கண்வளராய்

வருவார் அரம்பையர்கள் வாழ்த்துவார் கூருல்யீன்கள்
தருவார்பெரு வரங்கள் தகுந்தமுத்தே கண்வளராய்

அன்பிய்யா ஔலியாக்கள் ஆலிம்உ லமாக்கள்
நன்மையாக் கேட்கும்துஆ நாடும்முத்தே கண்வளராய்

தாலாட்டும் பதினறு தவப்பேறும் பதினறு
சீலாட்டும் ஆமின்துஆ ஜெயமுத்தே கண்வளராய்

★

# கண்மணித் தாலாட்டு

## கண்ணிகள்

ஆரா ரோ ஆரா ரோ
ஆரி வரோ ஆரா ரோ
ஆரா ரோ ஆரி வரோ —என் கண்ணே
நீயா ரோ நானு ரோ?

சீரோங்கும் செல்வ மணி
செகம் விளங்க வந்தமணி
பாரோங்கும் ஞான மணி —என் கண்ணே
பாலகனாய் வந்தவரோ? (1)

பாலகனாய் வந்துலகில்
பாக்கியங்கள் தந்த கண்ணே
சீலமதி சூழ்ந்த வர்க்கு —என் கண்ணே
சிவலோகம் தந்தவரோ? (2)

சிவலோகப் பொய்கையிலே
சிங்கார மண்டபத்தில்
தவசீலப் புத்திரராய் —என் கண்ணே
தான் வந்துதித்த வரோ? (3)

தானேதான் இருந்த ரப்பு
தன்னொளியைத் தான்பார்த்து
குன்னென்று சொன்னவுடன் —என்கண்ணே
கோலமயிலான வரோ? (4)

கோலம் அஹ் மது வாய்
குணமே முஹம் மதுவாய்
சீலம் மஹ்மூ ததுவாய் —என் கண்ணே
செகம் விளங்க வந்தவரோ? (5)

செகம் விளங்கும் மூன்ருகச்
சிவன் விளங்கும் முச்சுடராய்
அகம்புறமும் ஒன்ருகி —என் கண்ணே
ஆண்டிருக்க வந்தவரோ? (6)

ஆண்டிருக்கும் நாளையிலே
அழகு மயில் கொக்கரிக்கக்
கூண்டில் மனம் ஒன்ருன —என் கண்ணே
குறிப்புணர்த்த வந்தவரோ? (7)

குறிப்பைக் குறிப்பால் அறிந்தெண்
கோணமெலாம் சுற்றிவந்து
கருப்பைய தனில் நின்று —என் கண்ணே
கருவாகி வந்தவரோ? (8)

கருவே உருவாகிக்
கலிமா முதலெழுத்தாய்
திருவே உருவாகி —என் கண்ணே
தீனவிளங்க வந்தவரோ? (9)

தேனோர் திருமணியாய்த்
திருந்தியதும் இரண்டாகி
வானோர் பணியேற்று —என் கண்ணே
வந்துதித்த பாலகரோ? (10)

வந்துதித்த திங்கள் ரெண்டாம்
வரும் திங்கள் மூன்றதிலே
இந்த்ர கிரி சுற்றிவந்து —என் கண்ணே
இதமாய்ச் சமைந்தவரோ? (11)

இதமாய் வழி கழி நீர்
இறுகியதும் வெந்தணலால்
பதமும் இதமாக —என் கண்ணே
பணியாற்ற வந்தவரோ? (12)

பணியாற்றும் நாளையிலே
பாலகனே என் சடலம்
பிணிவாட்டம் கொண்டிருந்த —என் கண்ணே
பித்தம் தெளித்தவரோ? (13)

பித்தம் தலைக்கேறிப்
பின்மயக்கம் கண்டுநிதம்
சித்தம் மயங்கி நின்ற —என் கண்ணே
சிரமம் தணித்தவரோ? (14)

சிரமம் தணியவென்று
சிந்தையுள்ள மக்கள் பலர்
கரமேந்தி துஆ விருக்க —என் கண்ணே
கருணையொடு வந்தவரோ? (15)

கருணை மிகவோங்கிக்
கண்மணியே உன் தகப்பன்
அருமை பெருமை தர —என் கண்ணே
அருள்வடி வானவரோ? (16)

அருள் பெருகும் திங்கள் நாலாம்
ஐந்துமதி யானதினல்
திருவிளங்கும் மேனிதந்து என்—கண்ணே
ஜெயம் விளங்க வந்தவரோ? 17

ஜெயம் விளங்கும் கோட்டையதில்
சித்ரகலை மண்டபமும்
மைய நடுப்பீ[illegible]தும் —என் கண்ணே
மதியால் அமைத்தவரோ? (18)

மதியால் அமைத்த வுரு
மகிழ்தலை கால் கை களதும்
கதியா யமைத்ததினல் —என் கண்ணே
களைதீர வந்தவரோ? (19)

களைப்பு மிக வுண்டாகிக்
கண்சோர்ந்த என்சடலம்
சளைப்பு மிக ஆகாமல் —என் கண்ணே
சாந்திதர வந்தவரோ? (20)

சாந்த ஒளி ரூபமுள
சந்திரனே ஆறாகிக்
காந்திமதி ஏழாக —என் கண்ணே
காரணங்கள் தந்தவரோ (21)

காரணமாம் இந்த்ரகிரி
கர்ப்பநடு மண்டபத்தில்
பூரணமா மேலேறி —என் கண்ணே
புகுந்து நிலை கொண்டவரோ? (22)

புகுந்து மிக வாழவென்று
புண்ணியராம் பஞ்சவர்கள்
அகம்புறமும் சூழ்ந்திருக்க —என் கண்ணே
ஆசனங்கள் தந்தவரோ? (23)

ஆசனங்கள் எட்டெட்டு
அறுபத்து நான்கு கலை
தாசனவர் தொண்ணூற்றாறு —என் கண்ணே
தத்துவங்க ளானவரோ? (24)

தத்துவமாம் சேனைகளைத்
தானேவ என்னிறைவன்
குத்து மிதிகள் தந்த —என் கண்ணே
கோலம் தவிர்த்தவரோ? (25)

கோலமென்ன சுண்டு வலி
குத்துமிரு பக்கவிலா
ஜாலமென்றார் தான்சிரிக்க —என் கண்ணே
சங்கை தவிர்த்தவரோ? (26)

சங்கை தகுதி யென்ன
சந்தோஷ வாழ்க்கை யென்ன?
எங்கும் இதங்கள் தர —என் கண்ணே
இன்பம் அளித்தவரோ? (27)

இன்பமிக மையல்கொண்டு
எட்டாம் மதித் திங்கள்வரத்
துன்பமெலாம் தீரவென்று —என் கண்ணே
தூங்கி விழித்தவரோ? (28)

தூங்காமல்த் தூங்கிச்
சுழுத்தி நிலை தாண்டி நின்று
பாங்கா யிறைவனடி —என் கண்ணே
பற்றி நின்ற பாலகரோ? (29)

பற்றிப் பரமனடி
பதம் பெறவே வரங்கள் பெற்றுக்
குற்றம் தவிர்த்துநிற்க —என் கண்ணே
குறிப்பாக வந்தவரோ? (30)

குறிப்பாய மானிதங்கள்
குணமா மிக வரங்கள்
சிறப்பாக பெற்றுவந்து —என் கண்ணே
ஜெயம்விளங்க வந்தவரோ? (31)

ஜெயமாய் விளைந்த முத்தாய்த்
திரிலோகச் செல்வமுத்தாய்
பயமே தவிர்த்த முத்தாய் —என் கண்ணே
பதம்பெற்று வந்தவரோ? (32)

பதம்பெற்ற பாக்கியத்தால்
பதியேற்று வாழ்ந்திருக்கச்
சுதனென்ற பாலகனாய் —என் கண்ணே
சுகம் பெற்று வந்தவரோ? (33)

சுகமாதம் ஒன்பதுவும்
சுபதினங்கள் பத்தாகி
அகம் நொந்து நான் மிரள —என் கண்ணே
ஆவென்று தித்தவரோ? (34)

ஆவென்றே நான் அலற
அருள்மொழியால் 'ஙுஆ' வென்று
ஊவென்றெ ஊவிளித்து —என் கண்ணே
உலகில் ஜனித்தவரோ? (35)

உலகில் என் தோழியர்கள்
ஒழுங்கிதென நீராட்ட
மலமயக்க மாய்கை தர —என் கண்ணே
மருண்டு விழித்தவரோ? (36)

மருண்டு நீ அழலாமோ
மருந்து தரும் உன்பாட்டி
குருவந்து காட்சி தர —என் கண்ணே
குணமாகத் தூங்கிவிழி! (37)

குணமான பிள்ளையென்று
குதிகொள்வார் உன் தகப்பன்
சினம் அவர்க்கு வாராமல் —என் கண்ணே
சீர்பெருகத் தூங்கிவிழி! (38)

சீர் தரவே உன் மாமன்
சிலம்பு மணி கொண்டு இதோ
தேர்வீதி சுற்றி வாரார் —என் கண்ணே
தேம்பாமல்த் தூங்கி விழி! (39)

தேம்பி அழுதாக்கால்
தேகம் பெருக் குமென்று
வேம்பு மாமி சொல்வதனுல் —என் கண்ணே
விரைவாகத் தூங்கி விழி! (40)

விரைந் துனக்கு அமுதூட்ட
விழித்திருந்து தாலாட்டி
அருகமர்ந்து பாடுகிறேன் —என் கண்ணே
அன்பாகத் தூங்கி விழி! (41)

அன்புடைய மாதத்திலே
அறிவிலொன் றிரண்டாகி
இன்ப சுவை கண்டதினுல் —என் கண்ணே
இயல்பாகத் தூங்கிவிழி! (42)

இயல்பான திங்கள் ரெண்டில்
இரு பார்வை அறிவு பெறக்
கயல்மான் மருளும் விழி —என் கண்ணே
கலங்காமல்த் தூங்கிவிழி! (43)

கலங்காமல் நாற்றிசையும்
கற்பகமே செவி சாய்க்கத்
துலங்குமதி மூன்ருனல் —என் கண்ணே
சுகமாகத் தூங்கி விழி! (44)

சுகமான நித்திரையில்
சுந்தரிகள் ஓடிவந்து
அகங்கழித்து எக்களிப்பார் —என் கண்ணே
அழகாகத் தூங்கிவிழி! (45)

அழகான ரம்பையர்கள்
அருமையுடன் தாலாட்டப்
புலம்தேடி வருவார்கள் —என் கண்ணே
புகழ் பெருகத் தூங்கி விழி! (46)

புகழ்பெருகும் கன்னியர்கள்
புதுமையுடன் தாலாட்ட
செகமுழுதும் தேடிவாரார் —என் கண்ணே
சிணுங்காமல்த் தூங்கி விழி! (47)

சிணுங்கி யழுதாக்கால்
சிரிப்பார் சிறுக்கியர்கள்
முனங்கி யழாமல் நீ —என் கண்ணே
முகமலரத் தூங்கி விழி! (48)

முகமலர்ந்து பரிமளிக்கும்
முழுமதியே நாலானல்
அகம்களித்து முத்தம் தர —என் கண்ணே
அருகிருப்பேன் தூங்கி விழி! (49)

அருகமர்ந்து விளையாட
ஆசைவரும் மாத மைந்தில்
பெருமைகண்டு களித்திருக்க —என் கண்ணே
பேசாமல்த் தூங்கி விழி! (50)

பேசாமல் ஆறு திங்கள்
பிரிந்தோடி ஏகியதால்
கூசாமல்த் தவழ்ந்துவர —என் கண்ணே
குறிப்பாகத் தூங்கி விழி! (51)

குறிப்பாகக் குறிப் பறிந்து
கொஞ்சுமொழி நாச்சுழல
சிரிப்பாய் 'எம்மம்மா' வென்று —என் கண்ணே
சிறப்பாகத் தூங்கி விழி! (52)

சிறப்புடைய பல் முளைக்கும்
திடமான மாதம் ஏழில்
நிற்பதற்குக் கால்கள் வரும் —என் கண்ணே
நினைவாகத் தூங்கி விழி! (53)

நினைவாக எட்டதிலே
நின்ற அடி தூக்கிவைத்துத்
துணைகொண்டு நடந்துவர —என் கண்ணே
துணிவாகத் தூங்கி விழி! (54)

துணிந்து திங்கள் ஒன்பதிலே
துள்ளிவரும் வார்த்தை சில
இனியமொழி பேசிவர —என் கண்ணே
இசைந்து நீ தூங்கி விழி! (55)

இசைந்த மதி பத்தானால்
இனிதுவரும் மூக்குணர்வு
பசும் மழலைப் பேச்சுவரும் —என் கண்ணே
பதருமல்த் தூங்கி விழி! (56)

பதருமல்த் தூங்கிப்
பாலகனே! கண்மணியே!
சுதனாக வந்துதித்த —என் கண்ணே
சுந்தரனே தூங்கி விழி! (57)

சுந்தரமாய் ஓராண்டும்
சுகமுடனே ஈராண்டும்
தந்த்ரமுடன் ஏகியதால் —என் கண்ணே
சமத்தாகத் தூங்கி விழி! (58)

சமத்துள்ள மக்களிடை
சமத்தாய் விளையாடி
சமத்தென்று பேரும்பெற்று —என் கண்ணே
செகம் புகழத் தூங்கி விழி! (59)

செகமிரட்டும் மாய்கை வழி
சேராது மெய்வழியால்
அகம் புறமும் காட்சி பெற்று —என் கண்ணே
அழகாகத் தூங்கி விழி! (60)

அழகான ஐந்தெழுத்தும்
அருமையுடன் மூன்றெழுத்தால்
துலங்கும் ஈருயி ரெழுத்தாய் —என் கண்ணே
சுடர் விளங்கத் தூங்கி விழி! (61)

சுடர் விளங்கும் தொட்டில் கட்டிச்
சுயம் விளங்கும் தாலாட்டை
இடம் வலமா யிழுத்தாட்ட —என் கண்ணே
இயம்புகிறேன் தூங்கி விழி! (62)

இயம்பு மிந்தத் தாலாட்டை
இன்பமுடன் கேட்டறிந்தால்
ஜெய ஜெய ஜெய முனக்கு —என் கண்ணே
செம்மையுடன் தூங்கி விழி! (63)

செம்மையுடன் அறுபத்து நால்
சீரடியாம் தாலாட்டை
உண்மையுடன் கண்டறிந்தால் —என் கண்ணே
உறுதி பெறும் கண்மணியே! (64)

விருத்தம்

உறுதிபெறும் உடற்பிறவி அனந்தங்கோடி
உவர்துரிசு மண்காற்றுக் குளிர்வெப்பாலே

கருவறையில் வந்துநொந்து கடம்ஏருமல்
காய்ந்துதிர்ந்து பொன்றினதின் கணக்கே கேளு

பெருமூச்சுக்குறு முன்னூறு தத்துமாகிப்
பனிரண்டு கோடி தொன்னூற்ருறு லட்சம்

துருவதனைக் கடந்து வந்து காட்சிதந்த
தூய்மணியே! முழுமதியின் தாலாட்டேயாம்,

★

## அரபிப் பதத்துக்குச் சரியான தமிழ்

| | |
|---|---|
| அக்லு | யுக்தி |
| ஹக்-பாத்தில் | மெய்ப் பொருள்-பொய்பொருள் |
| அதம் | இல்லாதது |
| அனுசிர் | பூதங்கள் |
| அப் ரா: | சாதுக்கள் |
| அயினுல் எக்கீன் | பிரத்தியட்ச அறிவு |
| ஐய்ப் | தோஷம் வெட்கிக்கத் தகுந்தவை |
| ஐஷ் | சுகம் |
| அமல் | நடத்தை |
| அம்ரு-நஹீ | விதி-விலக்கு |
| அஸ்மா சிபாத்து | நாம இலக்ஷணங்கள் |
| அஸ்ஹாப் | நாயக தோழர்கள் |
| அப்ஆல் | செயல்கள் |
| அஜல் | மரணம் |
| ஒளலிய்யா | சாதுக்கள், துறவி, பிரதிநிதி |
| ஆக்கிபத் | முத்திநிலை,முத்திநெறி, முத்திப்பேறு |
| ஆகிரத் | முடிவுநாள் |
| ஆலம் | பிரபஞ்சம் |
| ஆலமுல் அர்வாஹ் | ஆன்மலோகம் |
| ஆலமுல் மலக்கூத் | வானவர் உலகு |
| ஆலமுல் அஜ்ஸாம் | சடஉலகு |
| ஆரிப் | அத்வைத ஞானி |
| ஹாதீ | வழிகாட்டி |
| ஹால் | பரவசநிலை |
| இக்லாஸ் | கலப்பற்ற எண்ணம் |
| இலாஹு | தெய்வம் |
| இல்ஹாம் | ரப்பினிடமிருந்து உதிப்பு |
| இராதத் | நாட்டம் |
| இத்தி ஹாது | இரண்டறக் கலத்தல் |
| ஹிதாயத் | வழிகாட்டும் உதிப்பு |
| இல்மு | அறிவு |
| இன்க்கார் | நிராகரித்தல் |

| | |
|---|---|
| ஹிக்மத் | நுணுக்க அறிவு |
| இர்பான் | ஞானச்சுடர் (மெய்யறிவு) |
| ஈமான் | உறுதி விசுவாசம் |
| உஜூது | உளது-பிரமம் சச்சிதானந்தம் |
| உலமா | பேரறிஞர் |
| ஹுக்கமா | பண்டிதர்கள் |
| உலூஹிய்யத் | நாயகத் தன்மை |
| உரபாக்கள் | ஞானிகள் |
| கதீம் | அனாதி |
| கமால் | பூரணத்துவம் |
| கலா | கற்பனை |
| கலாம் | வசனம் |
| கலிமா | வசனம் |
| கல்பு | மனம் |
| கவ்ப் | அச்சம் |
| கஷ்பு | பரவசநிலை |
| கலீபா | பிரதிநிதி |
| கவாஸ் | சிறந்தமகான் |
| கஹ்ஹார் | காய்ந்து கண்டிப்பவன் |
| கப்பார் | மன்னிப்போன் |
| காண்கா | வணக்கவீடு |
| கில்லத் | பரிவட்டம் |
| குன்னியத் | மாறுபெயர் |
| குதரத் | வல்லமை |
| குர்பு | இறையை அடுத்தல் |
| குர்புல் பராயிலு | திருவுரு தெரிசனை |
| குர்புநவாபிலி | இறைவன் பண்புவெளியாதல் |
| சகாவத் | நன்கொடை |
| ஸாலிக் | யோகி—ஞானவான் |
| சபுர் | பொருமை |
| சம்உ-பஸர் | கேட்டல்-பார்த்தல் |
| ஷௌக் | ஆசை |
| ஷஹ்வத் | இச்சை |
| ஷரீஅத் தரீகத்<br>ஹக்கீகத்<br>மகரிபத் | இஸ்லாமிய்ய பூரணத்தை யடையும் 4 படிகள் (ஞான மார்க்கம்) |

| | |
|---|---|
| ஸவாபு-அதாபு | பலாபலன்-பாவதெண்டனை |
| ஸித்கு | உண்மையான எண்ணம் |
| ஸிஹ்ரு | சூனியம் |
| ஷுக்கூர் | நன்றியறிதல் |
| சூபி | அத்வைத சித்தாந்தி |
| ஷெய்கு | ஞானசிரியர், தலைவர் |
| ஜலால் | பெருஞ்சோதி |
| ஜமால் | பேரழகு |
| சுஹது | தெண்டிப்பு |
| தக்வா | பரிசுத்த உழைப்பு |
| தவக்கல் | பரஞ்சாட்டல் |
| தஸ்பீஹ் | ஒப்பிடுதல் |
| தவ்ஹீத் | அத்வைதம்-ஏகமார்க்கம் |
| தஹ்கீக் | ஆராய்ச்சி |
| தவ்பா | தவறுகண்டு வருந்தி நன்னெறி புகுதல் |
| தௌவ்பீக்கு | ஒற்றுமை (ஒரு நிலை வழி) |
| தலீல் | வேதப் பிரமாணம் |
| தரஜா | (வரிசை) உயர்பதவி |
| தன்ஸீஹ் | தூய்மை |
| தாவீல் | வலிந்துறை கோடல் |
| துஆ | இறைஞ்சுதல் |
| தாத்து, சிபாத்து | உண்மை, பண்பு |
| நக்ல் | சுருதிப் பிரமாணம் |
| நஜாத் | விடுதலை |
| நிய்யத் | எண்ணம் |
| நிஃமத் | பாக்கியம் செல்வம் |
| நூர் | ஒளி ஞானச் சுடர் |
| நவ்உ | ஒரே இனம் |
| நாபிஉ | இலாபம் கொடுப்பன |
| மகாம் | ஞானநிலை (சுய முயற்சியால்) ஆனால் இறை அருளால் வரும் நிலை ஹால் எனப்படும் |
| மஞ்சனீக் | எறி சூத்ரம் |
| மஹப்பத் | உவப்பு |
| மன்கூல் | சுருதிப்ரமாணம் |
| மஃகூல் | யுக்திப்பிரமாணம் |

| | |
|---|---|
| மன்ஜில் | யாத்ரீகர் தங்குமிடம் |
| மஃரிபா | ஆண்டவனை அறிதல் |
| மவ்த் | மரணம் |
| மாஹிய்யத் | சுயம்பு |
| முஹீத் | சூழ்ந்தவன் |
| முரக்கபாத் | பௌதீகங்கள் |
| முஆத்தபா | நப்ஸை கண்டித்தல் |
| முஜாஹதா | பெரும் பிரயாசை |
| முஹாஸபா | கணக்குப் பார்த்தல் நப்ஸிடம் கணக்குக் கேட்டல் |
| முராக்கபா | யோக சாதனை |
| முவஹ்ஹித் | வேதாந்தி அத்வைதி |
| முஃஜஸா | அற்புதம் |
| முஸில்லு | வழிதப்பச் செய்வோன் |
| முஹக்கீன் | தத்துவ ஞானி |
| முப்ரிகூன் | துவித சித்தாந்திகள் |
| பக்ரு | ஏழ்மை |
| பஞு | நாஸ்தி |
| பலா | துன்பம் |
| பஸ்ரு | பார்வை |
| பஸீரத் | அகப்பார்வை |
| பாதீன் | அகப்பார்வை |
| யகின் | சந்தேகமறத்தெளிதல் |
| யவ்ம் | நாள் |
| ரஷீத் | வழிகாட்டி |
| ரஜா | நல்லாதரவு |
| ராய் | அபிப்பிராயம் |
| ரிலா | பொருத்தம் |
| ரியா | புகழாசை |
| ருஸ்து | வழிகாட்டல் |
| லார்ரு | நஷ்டமுண்டாக்குபவன் |
| வஸ்வாஸ் | விபரீத எண்ணம் |
| வஹ்தத்துல் உஜூத் | அத்வைதம் |
| வஹம் | பேத புத்தி |
| வஜத் | பரவெளி, பராக்கு, ஞானம், காட்சி |
| விஜ்தான் | காட்சிப்பொருள் ஞேயம் |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5. | 19 | ஏகன் | ஏக |
| 6. | 6 | சோருதே | கோருதே |
| 7. | 18 | அலீப் | அலிபு |
| 8. | 28 | லல்வாமா | லவ்வாமா |
| 14. | 5 | முச்சுடராராமதை | முச்சுடராமதை |
| 21. | 27 | ஏற்படி | ஏற்றபடி |
| 22. | 12 | ரசிக்கிருர் | ரகிக்கிருர் |
| 22, | 17 | நிறைந்திட | நிறைத்திட |
| 33. | 3 | இல்மென | இல்லென |
| 40. | 5 | மலற்ருள் | மலர்த்தாள் |
| 42. | 20 | யகற்றிட | யகற்றிநம் |
| 46. | 4 | எழுதினுல் | எழுதினும் |
| 48. | 29 | நாளென் | நாளெண் |
| 60. | 28 | குறவர் | குரவர் |
| 61. | 10 | பித்தாலாட்டம் | பித்தலாட்டம் |
| 63. | 3 | ஆவன | ஆவென |
| 75. | 12 | மறைப்பின் | மறைப்பான் |
| 94. | 3 | முனங்கி | முணங்கி |

★

# மனனப் பத்து

## 1

இறைவன், ஒருமை, தௌஹீது, முத்திப் பேறு, வீடடைதல், இஸ்முல் அஃலம்.

## 2

| வினைகள் 2 | கட்டளை 2 | விந்து 2 |
|---|---|---|
| 1 நல்வினை | 1 ஏவல் (ஹலால்) | 1 சுக்கிலம் |
| 2 தீவினை | 2 விலக்கல் (ஹராம்) | 2 சுரோனிதம் |

| அறம் 2 | உலகு 2 | தோற்றம் 2 |
|---|---|---|
| 1 இல்லறம் | 1 இம்மை | 1 சரம் |
| 2 துறவறம் | 2 மறுமை | 2 அசரம் |

## 3

| மண்டலம் 3 | மலம் 3 | இச்சை 3 | குணம் 3 |
|---|---|---|---|
| 1 சூரியன் | 1 ஆணவம் | 1 மண் | 1 சாத்வீகம் |
| 2 சந்திரன் | 2 காமியம் | 2 பொன் | 2 தாமதம் |
| 3 அக்கினி | 3 மாயை | 3 பெண் | 3 ராஜஸம் |

| தோஷம் 3 | சுடர் 3 | கலிமா 3 | தனிமை 3 |
|---|---|---|---|
| 1 வாதம் | 1 அல்லாஹ் | 1 ஹா | 1 அஹது |
| 2 பித்தம் | 2 இரஹூல் | 2 ஹீ | 2 உஹது |
| 3 சிலேத்துமம் | 3 ஆதம் | 3 ஹூ | 3 வாஹிது |

| ஆத்ம நிலை 3 | மகுடாக்ஷரம் 3 | கூறு 3 | குற்றம் 3 |
|---|---|---|---|
| 1 அடி | 1 அலிப் | 1 பதி | 1 காமம் |
| 2 நடு | 2 லாம் | 2 பசு | 2 வெகுளி |
| 3 முடி | 3 மீம் | 3 பாசம் | 3 மயக்கம் |

அந்தம் 3

1 வேதாந்தம்
2 சித்தாந்தம்
3 நாதாந்தம்

## 4

| வேதம் 4 | ஞான மார்க்கம் 4 | சரணம் 4 |
|---|---|---|
| 1 தௌராத்து | 1 ஷரீ அத்–சரியை | 1 மனம் |
| 2 ஸபூர் | 2 தரிகத்–கிரியை | 2 புத்தி |
| 3 இன்ஜீல் | 3 ஹகீகத்–யோகம் | 3 சித்தம் |
| 4 புர்கான் | 4 மகரிபத்–ஞானம் | 4 அகங்காரம் |

| சரீரம் 4 | ஆச்சிரமம் 4 | கருவிடம் 4 |
|---|---|---|
| 1 ஸ்தூலம் | 1 பிர்மச்சாரியம் | 1 பை |
| 2 சூக்குமம் | 2 கிரகஸ்தம் | 2 முட்டை |
| 3 காரணம் | 3 வானப்ரஸ்தம் | 3 சினை |
| 4 மகாகாரணம் | 4 சந்நியாசம் | 4 வியர்வை |

| பதவி 4 | புனித நடை 4 |
|---|---|
| 1 சாலோகம் | 1 தவம் |
| 2 சாமீபம் | 2 ஒழுக்கம் |
| 3 சாரூபம் | 3 கொடை |
| 4 சாயுட்சியம் | 4 கல்வி |

## 5

| பூதம் 5 | பூதியம் 5 | பொறி 5 | புலன் 5 |
|---|---|---|---|
| 1 மண் | 1 மாமிசம் | 1 மெய் | 1 ரசம் |
| 2 தண்ணீர் | 2 இரத்தம் | 2 வாய் | 2 உருவம் |
| 3 காற்று | 3 சுவாசம் | 3 கண் | 3 கந்தம் |
| 4 நெருப்பு | 4 உஷ்ணம் | 4 மூக்கு | 4 பரிசம் |
| 5 ஆகாயம் | 5 உணர்வு | 5 செவி | 5 சப்தம் |

| பாவம் 5 | கன்மேந்திரியம் 5 | அவஸ்தை 5 |
|---|---|---|
| 1 கொலை | 1 வாக்கு | 1 சாக்கிரம் |
| 2 களவு | 2 பாதம் | 2 சொர்ப்பனம் |
| 3 பொய் | 3 பாணி | 3 சுழுத்தி |
| 4 மது | 4 பாயுரு | 4 துரியம் |
| 5 குருநிந்தை | 5 உபஸ்த்தம் | 5 துரியாதீதம் |

| கன்ம விஷயம் 5 | ஞானேந்திரம் 5 | பஞ்சாக்ஷரம் 5 |
|---|---|---|
| 1 வசனம் | 1 சுவை | 1 அலிவு—ந |
| 2 நடை | 2 ஒளி | 2 லாம்—ம |
| 3 கானம் | 3 ஊறு | 3 ஹே—சி |
| 4 விசர்க்கம் | 4 ஓசை | 4 மீம்—வ |
| 5 ஆனந்தம் | 5 நாற்றம் | 5 தால்—ய |

| கலிமா 5 | சக்தி 5 | பக்ஷி 5 |
|---|---|---|
| 1 லா | 1 சிற்சத்தி | 1 அன்னம் |
| 2 இலாஹ | 2 பராசத்தி | 2 ஆந்தை |
| 3 இல்லா | 3 இச்சா சத்தி | 3 காகம் |
| 4 அல்லா | 4 கிரியா சத்தி | 4 சேவல் |
| 5 ஹு | 5 ஞான சத்தி | 5 மயில் |

## 6

| ஆதாரம் 6 | நிர்ணயம் 6 (ஈமான்) | உட்பகை 6 |
|---|---|---|
| 1 மூலாதாரம் | 1 இறைவன் | 1 காமம் |
| 2 சுவாதிஷ்டானம் | 2 தேவதூதர் | 2 குரோதம் |
| 3 மணிபூரகம் | 3 வேதங்கள் | 3 உலோபம் |
| 4 அனுகதம் | 4 இறை தூதர்கள் | 4 மோகம் |
| 5 விசுத்தி | 5 மறுமை | 5 மதம் |
| 6 ஆக்ஞை | 6 பலாபலன் | 6 மாற்சரியம் |

| கரு வமைப்பு 6 | சுவை 6 |
|---|---|
| 1 பேறு | 1 கைப்பு |
| 2 இளமை | 2 திதிப்பு |
| 3 இன்பம் | 3 புளிப்பு |
| 4 பிணி | 4 உவர்ப்பு |
| 5 மூப்பு | 5 துவர்ப்பு |
| 6 சாக்காடு | 6 கார்ப்பு |

## 7

**வானுலகு 7**

1 பூலோகம்
2 புவலோகம்
3 சிவலோகம்
4 சனலோகம்
5 தபோலோகம்
6 மகாலோகம்
7 சத்ய லோகம்

**நீர் 7**

1 உவர் நீர்
2 நன்னீர்
3 பால்
4 தயிர்
5 நெய்
6 கருப்பஞ்சாறு
7 தேன்

**பிறப்பு 7**

1 தாவரம்
2 நீர்வாழ்வன
3 ஊர்வன
4 புள்
5 விலங்கு
6 மக்கள்
7 தேவர்

**பெரியோரியல்பு 7**

1 அறம்
2 பொருள்
3 இன்பம்
4 அன்பு
5 புகழ்
6 மதிப்பு
7 பொருமை

**சிபத்து 7**

1 உயிர்
2 அறிவு
3 நாட்டம்
4 தத்துவம்
5 கேள்வி
6 பார்வை
7 பேச்சு

**நபுசு 7**

1 அம்மாரா
2 லவ்வாமா
3 முல்ஹிமா
4 முத்ம இன்னு
5 ராலியா
6 மருலியா
7 காமிலா

## 8

**மக்காம் 8**

1 ஆலம் ஜபருத்து
2 ஆலம் லாஹூறத்து
3 ஆலம் மலக்கூத்து
4 ஆலம் அசுபல்
5 ஆலம் மிதால்
6 ஆலம் அர்வாஹ்
7 ஆலம் இன்ஸான்
8

**தவத் துருப்பு 8**

1 இடையிட்டு மொழிதல்
2 வாய் வாளாமை
3 ஊணசையின்மை
4 நீர் நசையின்மை
5 வெப்பம் பொருத்தல்
6 தட்பம் பொருத்தல்
7 இடம் வரையறுத்தல்
8 ஆசனம் வரையறுத்தல்

## 9

| | கிரகம் 9 | | இரசம் 9 | | இரவோர்க்குபசரணை 9 |
|---|---|---|---|---|---|
| 1 | ஆதித்தன் | 1 | சிங்காரம் | 1 | எதிர் கொள்ளல் |
| 2 | சோமன் | 2 | வீரியம் | 2 | பணிதல் |
| 3 | அங்காரகன் | 3 | பெருநகை | 3 | ஆசனத்தமர்த்தல் |
| 4 | புதன் | 4 | கருணை | 4 | தாள் கழுவுதல் |
| 5 | வியாழன் | 5 | இரௌத்திரம் | 5 | அர்ச்சித்தல் |
| 6 | சுக்கிரன் | 6 | குற்சை | 6 | தூபம் கொடுத்தல் |
| 7 | சனி | 7 | சாந்தம் | 7 | தீபம் காட்டுதல் |
| 8 | ராகு | 8 | அற்புதம் | 8 | புகழ் பாடுதல் |
| 9 | கேது | 9 | பயம் | 9 | அமுது படைத்தல் |

## 10

| | வாயு 10 | | நாடி 10 | | விரதம் 10 |
|---|---|---|---|---|---|
| 1 | பிராணன் | 1 | சுழுமுனை | 1 | விதித்தன கொள்ளல் |
| 2 | அபானன் | 2 | இடைகலை | 2 | விலக்கிய நீக்குதல் |
| 3 | வியானன் | 3 | பிங்கலை | 3 | இறை பற்று நிலைத்தல் |
| 4 | உதானன் | 4 | காந்தாரி | 4 | மாயை மயக்கறுத்தல் |
| 5 | சமானன் | 5 | அத்தி | 5 | விசுவசித்தல் (எக்கீன்) |
| 6 | நாகன் | 6 | சிகுவை | 6 | புரம்பானதை ஒதுக்கல் |
| 7 | கூர்மன் | 7 | அலம்புடை | 7 | இயலாமை உணர்தல் |
| 8 | கிரிகரன் | 8 | புருடன் | 8 | தன் பிழைக்கு மன்றுடுதல் |
| 9 | தேவதத்தன் | 9 | குரு | 9 | தகைமை தேடல் |
| 10 | தனஞ்சயன் | 10 | சங்கினி | 10 | அவனது வல்லபம் கண்[illegible]மை நோக்கி இரங்கல் |

★

11460

விநாயகர் பிரஸ், கா[illegible]க்குடி.